The "BHARATI" Reg. No. M. 2456.

பிரமோதூத பங்குனி, பிரஜோற்பத்தி சித்திரை

ஏப்ரல்—1931.

12 MAY 1931




மாலை 3 மணி 4.

ஓர் தேசிய

# மாதப் பத்திரிகை

ரா. நாராயணஸ்வாமி,

ஆசிரியர்.

பிரசுராலயம்:

உத்தமபாளையம்,

மதுரை ஜில்லா.

7L
ை211, N29BH
N31.3.4
198536

# “பாரதி”

## படங்களுடன் வெளிவந்துலவும் தேசிய மாஸிகை

## பொருள் அடக்கம்.

மாலை 3. 1931 ஏப்ரல் மணி 4.


தொடர் எண். பக்கம்.


1. புது வருஷம் ... ... ... 241
2. சக்தி வேல்க!— திரு. சுவாமி சுத்தானந்த பாரதியா ரவர்கள் ... 242
3. அரவிந்தம்— ” ... ... 244
4. எமது வணக்கம்—ஆசிரியர், “பாரதி.” ... 245
5. “பாரதி” தங்கப் பாட்டு— திரு. K. அப்துல் சுகூர் சாகிப் அவர்கள் .... 248
6. தென்னிந்தியாவின் பண்டைக் காலக் கனிகள்—திரு. வி. எம். ராமச்சந்திரன் செட்டியா ரவர்கள், B. A., B. L. 250
7. ஸ்ரீ கிருஷ்ண தேவராயன்— திரு. சி, கு. நாராயணசாமி முதலியா ரவர்கள் ... 256
8. விவசாயிகளும் ஐக்கிய ராஜ்யமும்—திரு. கே. சந்திர மௌன்வி அவர்கள், B. Sc. (Aberdeen.) ... 268
9. உருக்கமான தேச பக்தி—திரு. P. சுந்தரசிம்மன் அவர்கள், B. A., B. L. ... 272
10. ராணி சம்யுக்தையின் தேச பக்தி— திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள் ... 283
11. எனது ஜீவியக் குறிப்புகள்—பண்டிதை ஸ்ரீமதி. அசலாம்பிகை அம்மாள் அவர்கள் ... 289
12. உண்மையின் அழைப்பு—ஆசிரியர், “பாரதி.” ... 295
13. இந்திய காங்கிரஸ் மஹா சபையின் வளர்ச்சி— திரு. என். வேங்கட்ரமணன் அவர்கள் ... 298
14. தேச சிரோமணி—திரு. வெ. சோமசுந்தரம் அவர்கள் ... 310
15. ஆசிரியர் குறிப்புகள் ... ... ... 313
    1. அறிக்கை, 2. காங்கிரஸ், 3. சிறையில் வாடும் தேச பக்தர்கள், 4. மாணவர்களும் சுதரும், 5. நாட்டின் விழிப்பு, 6. கிராமப் பிரச்சாரம், 7. போகும் வரும் வைஸ்ராய்கள், 8. தாலுகா போர்டுகள், 9. மகாத்மா காந்தி அடிகளும் வட்ட மேஜை மகாநாடும், 10. ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை, 11. மைசூர் கவர்ன்மெண்டு சோப் தொழிற் சாலை, 12. பத்திரிகை வாசித்தல், 13. பினங்கு இந்து தேகாப்யாச சங்கம்.
16. ஆராய்ச்சி மேடை ... 319
    1. இங்கிலீஷ்-தமிழ் ஆயில் காலெண்டர்,
    2. 13-ம் ஆண்டு பூர்த்தி விழா அறிக்கை.


---

படங்கள்.


1. சர்தார் வல்லபாய் படேல், 2. பண்டித அசலாம்பிகை அம்மாள், 3. பினங்கு இந்து தேகாப்யாச சங்கத்தினர்.



சர்தார் வல்லபாய் படேல்.

*கராச்சி காங்கிரஸ் தலைவர்.*

## ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

இதில் "நவீன பாரதி"யும் சேர்ந்து விட்டது.


"எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்."—பாரதி.


ஆசிரியர்: ரா. நாராயணஸ்வாமி

உத்தமபாளையம்.



Copy Right] [Registered.



மாலை 3 } பிரமோதூத பங்குனி, பிரஜோற்பத்தி சித்திரை 1931-வரு ஏப்ரல்மீ { மணி 4


# புது வருஷம்.

வாழிய செந் தமிழ்! வாழ்க நற் றமிழர்
வாழிய பாரத மணித் திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மை வந் தெய்துக! தீதெலாம் நலிக!
அறம் வளர்ந் திடுக! மறம் மடிவுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ - டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்து மிக் கோங்குக!
நந்தே யத்தினர் நாடோறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

பாரதி.

# சக்தி வெல்க!

திரு. சுவாமி சுத்தானந்த பாரதியா ரவர்கள்.

பல்லவி

௧. சக்தி வெல்க! சக்தி வெல்க!
சர்வ சக்தி வெல்கவே!
சுத்தி முக்தி சித்தி நல்கி
யாத்ம சக்தி வெல்கவே! (சக்தி)

சரணம்

வெற்றி வாழ்க! வேதம் வாழ்க
வீரசக்தி வாழ்கவே!
விடுதலை பெற் றுலக முண்மை
விண்ணி லோங்கி வாழ்கவே!
எட்டுத் திக்குஞ் சத்ய தர்ம
மென்று மாத்ம சித்தியால்
இன்பச் சோதி பொங்கி வாழி
யெங்குஞ் சூழ்க மங்களம்! (சக்தி)

௨. பார் நலத் திருப் பணிப்
பார வுதற் கெழுந் தனம்!
பந்த வின்னல் சிந்துறும்
பணிகளிற் றுணிந்தனம்!
யாரெ டுக்க வல்ல ரெங்க
ளாத்ம சக்தி வெற்றியை!!!
அமர வாழ்வை மண் மிசை
யடைந் திலங்கி வாழுவோம்! (சக்தி)

௩. உட லுயிர் பொரு ளெலாம்
உவந்து மெய்க் களித்தனம்!
உற்றிடும் இடர்க ளிட்
டுறுதியைப் பெருக்குவோம்!
கட்டுவிளைக் கருத்து ளோம்!
கடமையைக் காத்து ளோம்!
காசினிக் கிதஞ்செய் வீரக்
காதலோ டெழுந்தனம்! (சக்தி)

௪. தரித்திரம் பொருமை வஞ்சத்
தன்னலப் பிசாசுகள்
சகத்தி னெல்லை யுள்வாராது
சக்தி வேலி வேய்ந்தனம்!

198536



உரத்தவன் மெலிந்தவனின்
ஊண் பறித்து வாழவோ?
உலகிலிவ் வநீதியை
யொருக்க மிக்க தைரியம்! (சக்தி)

௫. ஏழை தம்மை யேழை செய்
யிரக்க மற்ற பாவிகள்
ஈனச் செல்வ மேழை மாந்தர்க்
கீவு வைக்க தைரியம்!
கோழை தீ தகந்தையைக்
கொளுத்தியே சமத்துவக்
கோயிலாம் உலகினிற்
குலமொன்றாகி வாழுவாம்! (சக்தி)

௬. ஜாதி பேதச் சண்டை வீண்
சமய வாதம் வேண்டிலோம்!
சத்தி யத்தி லொன்றி யித்
தரணி வாழ வேண்டினேம்!
ஆதி சக்தி மக்களே
யனைவ ரென் றறிகுவோம்!!!
ஆன்ம சித்தி யோங்கியே
யகண்ட சித்தி யாளுவோம்! (சக்தி)

௭. மனிதரை மனிதர் கொல்லும்
வஞ்சமரை வேண்டிலோம்
மாதரின் சுயேச்சையை
மறுப்பதைப் பொறுத்தி லோம்!!
புனிதரைப் புரைசெய் தோங்கு
பொய்ப்புகழ் விழைந்திடோம்
பூரணச் சுதந்திரப் புகழ்விளங்க
வாழுவோம்!! (சக்தி)

௮. ஆண்மையா மஹிம்ஸையே
யருட்சுடர் விரிக்கவே,
அடிமை யாக்கு மெலிமையும்
அடியுடன் பொசுக்குவாம்!
மாண்மை யான தெய்வ வாழ்வு
மாந்தர் வாழ்வி லோங்கவே,
மண்ணும் விண்ணும் மன்றல் கொண்டு
மங்களம் பிறங்கவே! (சக்தி)

# அரவிந்தம்.

## திரு சுவாமி சுத்தானந்த பாரதியா ரவர்கள்.

[பச்சமலை பவழமலை என்றது போல்]

க. ஆனந்தக் கடலிலங்கும்
அரவிந்தங் கண்டேன்!
அன்பழகிற் கண்குளித் தென்
அகமுருகி நின்றேன்!
தேனொடுமுப் பழமினிக்குந்
தெள்ளமுத முண்டேன்!
தெய்வரஸஞ் சக்திரஸஞ்
சைவரஸங் கொண்டேன்!
யானொருவண் டாகியதன்
அருளமுதைப் பாடி,
ஆயிரம் இதழ்விரிந்த
வழகினிலே கூடி,
ஞானனந் தப்பொலிவி
னறுமணத்தை நுகர்ந்தேன்.
நானுவந்தேன்! உலகமெலாந்
தான்மகிழக் கனிந்தேன்!

உ. புலரியினும் ஒளிவளரும்
பூரணமெய்ப் பொருளே.
பொங்கிவருங் கங்கையினும்
பொய்மிவரும் அருளே!
அலைவிம்மி நடனமிடும்
அகண்டவொளிக் கடலே!
அஞ்சலிக்கை விரிமலரே
அமரவாழ்வின் சுடரே!
கலைவாணிக் கரியநறுங்
கவிமணக்கும் வாயே!
காதலுள்ளோர் காதலுறும்
போதக மூலிகையே!
கண்டாலுங் கேட்டாலுங்
கையுறத் தொட்டாலுங்
கடவுளின்பச் சுதந்திரத்திற்
கதியளிக்கு முதலே!

---

# எமது வணக்கம்.

## ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி."

கருணை சாகரமாம் தெய்வத் திருவருளின் துணையால் "பாரதி"யின் ஆசிரிய பீடத்தை மறுபடியும் பணிவுடன் ஏற்றுக்கொள்ள முன் வருகிறோம். "பாரதி" ஒரு சிறு மாதப் பத்திரிகையா யிருப்பினும் சென்றிருக்கும் தேசியப் போராட்டத்தில் அஞ்சா நெஞ்சத்துடன் தனது கடமையை ஆற்றியே வந்திருக்கிறது. அச்சுச் சட்டம் பத்திரிகைகளை மடக்கி, அடக்கி ஒடுக்கித் தாண்டவ மாடிக்கொண் டிருக்கும் காலத்திலும், இது தேசியத்தை தெய்வமாகக் கருதித் தீவிரமாக வேலை செய்துகொண்டிருந்தது. அப்பொழுது "பாரதி" அடக்கு முறைக்கு இலக்காகாது தப்பியது கடவுள் செயல்.

பத்திராதிபர் என்ற முறையில் எமது பேனா முனையால் மட்டும் தேச சேவை செய்யாது தொண்டனாகவும், பெரியகுளம் தாலுகாக் காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாகியாகவும், பெரியகுளம் தாலுகாத் தொண்டர்படைச் சபை (War Council)யின் தலைவனாகவும், திண்டுக்கல் ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டி (North Madura Dt. Congress Committee) காரியதரிசியாகவு மிருந்து இப் போராட்டத்தில் எம்மாலான தொண்டு செய்திருக்கிறோம். இதன் பயனாகச் சர்க்கார் 107-வது பிரிவின்படி ஜாமீன் கேட்கப்பட்டு ஜாமீன் கொடுக்க மறுக்கவே சென்ற 1930-ம் ௵ ஆகஸ்டு ௴ 2௳ நாம் ஒரு வருட தண்டனையை யடைந்து அனுபவித்துக்கொண் டிருக்கும்பொழுது, காந்தி—இர்வின் இராஜிப் பேச்சால் விடுதலை பெற்று இப்பொழுது வெளிவந் திருக்கிறோம். சிறைச்சாலையில் சுமார் 7½ ௴மே அனுபவம் அடையும் பாக்கியம் எமக்குக் கிடைத்தது.

சென்ற வருடத்தில் நாம் சிறையை எதிர்பார்த்துக் கொண்டிருந்ததால், "பாரதி"யை நாமில்லாமலே நன்கு நடப்பதற்கு வேண்டிய வேலைகள் அனைத்தும் செய்து வைத்திருந்தோம். மதுரையிலிருந்து

திரும்பி வரும்பொழுது அடக்கு முறைக்கு ஆளானோம். ஆசிரியர் ஸ்தானத்தை எமது சகோதரரின் பெயருக்கு மாற்றும் பொருட்டுச் சர்க்கார் எவ்வளவோ அனாவசிய விவரங்களைக் கேட்டுக்கொண்டே கால தாமதம் செய்து கொண்டிருந்தது. இத் தடுக்க முடியாத காரணத்தால் 3 மாதங்களாக "பாரதி" வெளி வரவில்லை யென்று வருந்துகிறோம். "பாரதி"யின் தாமதத்தை யறிந்து, வேலூர் சிறைக்கு எமது சகோதரர் சுப்ரமண்யத்தை அழைத்து, "நவீன பாரதி" யென்ற புதிய பெயருடன் புதிய பத்திரிகை யொன்றைப் பதிவு செய்யுமாறு யோசனை கூறினோம். ஆண்டில் இளைஞரான எனது சகோதரர் எமது விருப்பம் போற் செய்து, தனக்குத் திடீரென்று வந்த நோயையும் கவனிக்காது, எதிர்த்து நின்ற கஷ்ட நஷ்டங்களையும் பொருட்படுத்தாது "நவீன பாரதி"யை வெளியிட்டுச் சென்ற மாதம் வரை நடத்திக் கொண்டு வந்தார். "நவீன பாரதி"யானது "பாரதி"யைக் காட்டிலும் சிறப்பாகவே நடைபெற்றது எமக்குச் சந்தோஷமே.

நாமில்லாத காலத்தில் "பாரதி"க்கு எழுத்தாலும் சேவையாலும் பொருளாலும் உதவி செய்த அன்பர்களுக்கெல்லாம் எமது மனமுவந்த வந்தனங்கள். எம்மை அரஸ்ட் செய்து தண்டித்த செய்தியை அறிந்தவுடன் சில விடங்களில் கடைகளை அடைத்துத் தொழில் நிறுத்தம் செய்து ஹார்த்தால் நடத்தியதாகவும், அயல் நாடுகளில் சில ஊர்களிலும் தமிழர் சங்கங்களிலும் பொதுக் கூட்டங்கள் கூடி அனுதாபங் காட்டித் தீர்மானங்கள் செய்து எமது காரியாலயத்திற்குத் தெரிவித்ததாகவும் இப்பொழுது தான் அறிகிறோம். எம்முடன் நேசங்கொண்டு ஒழுகும் அநேக நண்பர்கள் உருக்கத்துடன் எழுதிய அருமைக் கடிதங்களை இப்பொழுதுதான் நாம் வாசித்தோம். இவ்வாறு அனுதாபங் காட்டி உற்சாகித்த உள் நாட்டு—அயல் நாட்டு அபிமானிகளுக்கும் சபையார்களுக்கும் தனித்தனியே அனுதாப நிருபங்கள் எழுதிய நேசர்களுக்கும் நன்றியறிதலான வந்தனங்களுடன் எமது வணக்கத்தைச் செலுத்துகிறோம். நாம் சிறை சென்றபோதிலும் "பாரதி"யை இது வரையிலும் ஆதரித்து வரும் அன்பர்களுக்கு எமது வந்தனங்கள்.

எமது பெரியகுளம் தாலுகாவில் பிரவேசிக்கும்பொழுது, ஷை தாலுகாவில் தேசீய உணர்ச்சி யுள்ளவர்களெல்லாம் பிரியத்துடன் நம்மையும் சிறை சென்று வந்த தேச பக்தர்கள் அனைவரையும் வர



வேற்றார்கள். நாம் பிறந்து வளர்ந்தது தேவாரம் என்னும் கிராமம். இத் தேவாரத்தைப் பிரத்தியேகமாய்க் குறிப்பிடுவது இங்கு அவஸியமாகும். தேவாரத்திலிருந்து போய் சிறையிலிருந்து மீண்ட தொண்டர்களையும் எம்மையும் ஆயிரக் கணக்கான ரூபாய்கள் செலவு செய்து எவ்வளவோ அன்புடனும், எவ்வளவோ குதூகலத்துடனும், எவ்வளவோ வைபவங்களுடனும் இவ்வூர் வாசிகள் வரவேற்றார்கள். தேச பக்தியின் மேலீட்டால் இக்கிராமம் ஒன்றாய் ஒற்றுமைப்பட்டு இவ்வரவேற்பில் கலந்துகொண்டது குறிப்பிடத் தக்கது. இவ்வாறு தேசீயத் தொண்டர்களைக் கௌரவித்த தேவாரத்தை நாம் என்றுமே மறவோம். நாம் இதற்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். தொண்டர்களாகிய எங்களுக்கு இவர்கள் செய்த மரியாதைகளெல்லாம் காந்தி மகானுக்குச் செய்ததாகும். வாலிப இயக்கத்திற்கு வன்மை கொடுத்து வாலிபர்களை ஆதரிக்கும் தேவாரத்தைப் போற்றுகிறோம். தேவாரத்திற்கு எமது நன்றி யறிதலான வணக்கம் அன்பான வணக்கம். காந்தியடிகள் வாழ்க! வாழ்க!!

"பாரதி"யில் தீவிரமாக எழுதியதற்காக நாம் சிறை சென்றிருப்போமாயின் இதைக்காட்டிலும் மிகவும் சந்தோஷமா யிருந்திருப்போம். பத்திராதிபர்களெல்லாம் பொது மக்களை ஏவிக் கொண்டுமட்டு மிருக்காது பத்திராதிபர்களும் சிறை சென்று தேசீயத்தையும் இந்தியப் பத்திராதிப உலகத்தையும் வலுப்படுத்த வேண்டுவது மிகவும் அவஸிய மென்பதை நாம் உணருகிறோம்.

எமக்குத் "தென்னாட்டு வாஸ்வானி" யென்றும் "தமிழ் நாட்டு ஹரிகோவிந்த கோவில்" என்றும் பட்டங்கள் கொடுத்து எம்மைச் சில அறிஞர்கள் அழைத்திருக்கிறார்கள். எம்மீது அப் பெரியோர்கள் கொண்ட பேரன்பிற்காக எமது தாழ்மையான வணக்கம். எமக்குப் பட்டங்களில் மோகமில்லை யென்று நமஸ்காரத்துடன் தெரியப்படுத்துகிறோம். எமது பொதுநல சேவையில் எத்தனையோ குற்றங் குறைக ளிருக்கலாம். ஆனால் அவைகளை யெல்லாம் மன்னித்து மறந்து எம்மால் ஏதேனும் தேசத்திற்கு சிறிதளவு நன்மை யிருக்குமானால் அதையும் ஏற்றுக்கொண்டு "பாரதி"யை ஆதரித்து எம்மை உற்சாகிப்பதே எமக்குச் செய்யும் பேருதவியாகும். தமிழுலகம் "பாரதி"யை நன்கு ஆதரிக்குமென்று நம்பியே "பாரதி"யின் ஆசிரிய பதவியை வகிக்கிறோம். தாய் நாட்டிற்குத் தொண்டு செய்வது எமது வேலையாகும். "பாரதி"யை வளர்த்துக் காப்பது தமிழச் சகோதர சகோதரிகள் தம் கடமையாகும். வந்தே மாதரம்.

---

# "பாரதி" தங்கப் பாட்டு.

## திரு. K. அப்துல் சுகூர் சாகிப் அவர்கள்.

1. பொங்கும் புகழ்பலவும் போதமெலா மிலகித்
தங்குமுயர் பாரதர்— ஞானத்தங்கமே
தாயை மறந்தாரடி— ஞானத்தங்கமே.

2. காணுங் கலைபலவுங் காணாதுபோன வெல்லாம்
வேணக் கொணர்வாரடி—ஞானத்தங்கமே
வேடிக்கை பாராரடி— ஞானத்தங்கமே.

3. கற்றவர் கூட்டங்களைக் கண்மூடியாய் நினைத்து
நற்றவர் கூட்டமெல்லா— ஞானத்தங்கமே
நாட மறந்தாரடி— ஞானத்தங்கமே.

4. வித்தாரம் பேசிமிக வீதியிலைந் தலைந்து
செத்தா பென்றுணாடி— ஞானத்தங்கமே
செய்வதரி யாரடி— ஞானத்தங்கமே.

5. நத்துந் தமிழ்க்கலைகள் நாடாது மக்கள்தமைப்
பெத்தும் பலனென்னடி—ஞானத்தங்கமே
பேசவாய் கூசுதடி— ஞானத்தங்கமே.

6. காவி யமைந்திலையுங் காணாத கண்களெல்லாம்
ஓவியக் கண்களடி— ஞானத்தங்கமே
ஓதவரி யாதடி— ஞானத்தங்கமே.

7. தங்குமினிமை தினந் தானின்றுலாவு தமிழ்ச்
சங்கம் மறந்தாரடி— ஞானத்தங்கமே
சர்ஜனர்கூட்டம் விட்டார்-ஞானத்தங்கமே.



8. பெண்மக்கள் பல்கலைநூல் பேசவொல்லா தெனவிம்
மண்மக்கள் செய்தாரடி—ஞானத்தங்கமே
மகளிர் குழாங்களெலா—ஞானத்தங்கமே.

9. பலகலை பெண்கள் பெற்றுப் பாடிப்பயின்றிடாது
நலகலைக் ஞானமெல்லாம்—ஞானத்தங்கமே
நாட மறந்தாரடி— ஞானத்தங்கமே.

10. வறுமையெனும் புலிவாய் வாடிடு மாந்தர்களின்
சிறுமை நினையாரடி— ஞானத்தங்கமே
செம்மை யுணாராரடி— ஞானத்தங்கமே.

11. தீண்டாமைப் பேய்தனைத் தேசத்தை விட்டோட்ட
வேண்டாமை யாஞரடி—ஞானத்தங்கமே
வீணர் உலகமடி— ஞானத்தங்கமே.

12. நாட்டின் பழமைதனை நாடாது செந்தமிழின்
பாட்டை மறந்தாரடி— ஞானத்தங்கமே
பஞ்சைக் குழாங்களடி— ஞானத்தங்கமே.

13. தனிமைப் பொருள்தனைப் போல் தானின்றுலாவுமுயர்
இனிமைத் தமிழ்தனையே—ஞானத்தங்கமே
இயம்ப மறந்தாரடி— ஞானத்தங்கமே.

14. வீரத்திறல் மலிந்து விஞ்சுங்கலை பொலிந்த
பாரதி மாலிகையை— ஞானத்தங்கமே
பார்க்க மறந்தாரடி— ஞானத்தங்கமே.

# தென்னிந்தியாவின் பண்டைக்காலக் கனிகள்.

திரு. ஸி. எம். ராமச்சந்திரன் செட்டியாரவர்கள், B.A., B.L.

வெகு புராதன காலமாக இந்திய தேசம் இரத்தினங்களுக்குப் பேர்போனதென்று உலகம் முழுதும் அறிந்த விஷயம். உரோமானியர் உன்னத ஸ்திதி அடைந்திருந்த காலத்தில் அவர்களுடைய பெண்மணிகள் இந்திய நாட்டிலிருந்து தருவித்த முத்துக்களையும் மரகதங்களையும் அணிந்துகொண்டு பெருமைபாராட்டிக் கொள்ளுவார்கள். எகிப்து தேசத்துப் பண்டைக் காலச் சவக் குழிகளில் (Tombs and Pyramids) இந்திய நாட்டுப் பொன்னிலும் இரத்தினங்களினும் இழைத்த நகைகள் கிடைத்தன. இப்போதும் கூட இந்திய நாட்டுப் புராதனக் கோயில்களில் விலை மதிக்க முடியாத நகைகள் இருக்கக் காணலாம். இராமேஸ்வரம், மதுரை, ஸ்ரீரங்கம், காஞ்சி, சாமராஜ நகரம், மேல் கோட்டை முதலிய ஊர்களில் உள்ள பேர் பெற்ற தேவாலயங்களில் வைரம், முத்து, கெம்பு, பச்சை முதலான இரத்தினங்களும் அவைகளில் சில புழுக்களின் முட்டை அளவும் இருக்கக் கூடியவைகளும் காணலாம். இவைகள் எல்லாம் அக் காலத்தில் அரசர்களும் பிரபல வியாபாரிகளும் கோயில்களுக்கு அளித்தவைகள். அக் காலத்தில் உலோக பதார்த்தங்கள் அரசாங்கத்துக்கு சொந்தமாகப் பாவிக்கப்பட்டு அவர்களாலே எடுக்கப்பட்டன.

இந்திய நாட்டுக் கோயில்களிலும், அரசர்கள் அரண்மனைகளிலும், வியாபாரிகள் கடைகளிலும் திரவியங்கள் குவிந்திருப்பதை தேசாந்திரிகளால் கேட்டறிந்த மத்திய ஆசியாவில் செழிப்பில்லா வனாந்திரங்களில் குடியிருந்த ஆறலைக்கும் திராண்ட



வசுப்பார்கள் பேராசை கொண்டு இந்தியாவின் மீது படை எடுத்தார்கள். கிரேக்கர்கள், சித்தியர்கள், பாரசீகர்கள், தார்த்தாரிகள், முகலாயர்கள். இவர்கள் முறையே படை யெடுத்து கொள்ளை அடித்து நாட்டை அழித்துத் துன்பப்படுத்திய தன்றி, பின்னால் ஐரோப்பிய நாட்டார்கள் பலரும் வியாபார நிமித்தமாக வந்து குடியேறி நாட்டைக் கைப்பற்றிக்கொண்டார்கள். இந்திய நாட்டிற்கு வந்த பிரயாணிகள் இங்கே கண்ட விலைபொருந்திய இரத்தினங்களின் மகிமைகளைப் பற்றி நூல்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். ஷாஜஹானின் மயிலாசனத்தை ஒரு பிரஞ்சு நிபுணர் 150 லட்சம் பவுன் மதிப்பு இட்டிருக்கிறார். இவ்விதமே பல இரத்தினங்கள் இழைத்த பொன் கிண்ணிகள், தட்டுகள் இவைகள் அரண்மனைகளில் வழங்கப்பட்டன.

ஆப்பிரிக்கா கண்டத்தில் திரான்ஸ்வாலில் (Transval) வைரங்கள் அகஸ்மாத்தாக கண்டுபிடிக்கப் பட்டதற்கு முந்தி இந்திய நாடு ஒன்றுதான் வைரங்கள் உற்பத்தி ஆன தேசமாக இருந்தது. கோலகொண்டா கனிகள்தான் உலகப் பிரசித்தி பெற்றவை. 'கோஹிநூர்' "க்ரேட் முகல்" "ஆர்லிப்" என்ற பிரசித்தி பெற்ற வைரங்கள் தென்னிந்திய கனிகளில் எடுத்தவை. இவைகளில் இரண்டாவது 900 காரட்டு கொண்டது. இப்போதும் கூட 80 அல்லது 100 காரட்டு கொண்ட வைரங்கள் நில மட்டத்திலே ஓடைகளில் கிடைக்கின்றன. இந்தப் பிரதேசமானது பெண்ணாற்றுக்கு வடக்கே நீளியாக உள்ளது. அது பண்டில்கண்டு வரையில் எட்டி யிருக்கிறது

வைரங்களின் உற்பத்தியைப் பற்றி சாஸ்திர நிபுணர்கள் சொல்லுவ தென்னவெனில் பூமியின் மத்தியில் அபரிமிதமான உஷ்ணத்தினால் உண்டாகும் கிளர்ச்சியினால் அங்கு கிடக்கும் கரி நெருக்கப்பட்டு அதன் நிலமை மாறி கிரிஸ்டல் (Crystal) ஆகிறது. அதில் இரும்பு (Iron), மாக்னீசியம், (Magnesium), க்ரோமியம் (Chromium) முதலிய உலோகச் சத்துக்கள் அகப்பட்டுக் கொண்டால் பலவிதமான நிறங்களையும் கறைகளையும் கொள்ளுகிறது. இந்த வகையிலே ரோஜா, ஊதா, நீலம், பச்சை முத

லான நிறங்கள் கொண்ட கற்கள் உண்டாகின்றன. இவைகளில் பல அனந்தப்பூர் ஜில்லாவில் குந்தக்கல் ஸ்டேஷனுக்குப் பத்து மைல் தூரத்தில் உள்ள வச்சிர கரூர் என்ற இடத்தில் அகப்படுகின்றன.

இந்த வைரங்கள் சில இடங்களில் பூமி மட்டத்திலும், பூமிக்கு அடியில் 15, 30 அடி ஆழத்திலும், பெண்ணாறு, துங்கபத்திரா, கிருஷ்ணா, கோதாவரி நதிகளின் மணல்களிலும் அகப்படுகின்றன. கிருஷ்ணாவில் ராஸ்வாப்பூர், அனந்தப்பூரில் முனிமடுகு, வச்சிர கரூர், கர்நூலில் பங்கனபள்ளி, பஸ்வாப்பூர், கஜூல்பள்ளி, கடப்பையில் சென்னூர், ஒப்பளப்பள்ளி, நைஜாம் ராஜ்ஜியத்தில் கண்டிகோட்டா, கோல்கொண்டா முதலான இடங்கள் பண்டைய காலத்தில் வைரங்களுக்குப் பிரசித்தி பெற்றவை. இப்போதும் கூட அனந்தப்பூர், கர்நூல் ஜில்லாக்களில் இருக்கக்கூடிய கனிகள் முழுவதும் எடுக்கப்படவில்லை.

## ஒரு அம்பட்டன் அதிர்ஷ்டம்

குந்தக்கல்லுக்கு அடுத்த வச்சிர கரூரில் பெரும் மழை பெய்தவுடனே நூற்றுக் கணக்கான ஜனங்கள் கூட்டம் கூடுவதுண்டு. அவர்கள் பிச்சைக்காரன் முதல் பிரபல தனவந்தன் வரையிலும், பஞ்சமன் முதல், பிராமணன் வரையிலும் வித்தியாசமின்றிக் கூடுவார்கள். ஒரு உழவு போட்டவுடன் நிலத்து மண் புறட்டப்படுகிறது. உடனே ஜனங்கள் தேட ஆரம்பிப்பார்கள். இங்கே மண்ணானது பெரும்பாலும் கரிசல் மண். சில இடங்களில் பருக்கைகள் கொண்ட இலேசான செவப்பு மண். மழையோ வெகு குறைவு. வருட முழுதும் எட்டு அங்குலத்திற் குள்ளாகவே பெய்யும். புது மழை பெய்தவுடனே பூமி உழவினால் புறட்டப்பட உதய காலத்தில் சூரிய கிரணங்கள் சாய்ந்து விழும்போது பலவித வர்ணங்களோடு எங்கேயாவது ஒன்றிரண்டு வைரங்கள் ஜ்வலிக்கும். அதைக் கண்டு எடுத்தவன் அதிர்ஷ்டத்திற்கு அளவில்லை. வருடத்திற்கு ஒரு முறை சில கிடைத்தாலும் மதிப்பு அதிகமல்லவா? கண்டு எடுத்தவன் உள்ளூர் வியாபாரிகளுக்கு விற்பான் இதை



மதிப்பிட்டு நிர்ணயிக்க ஒரு பஞ்சாயத்து சபை உண்டு. அவர்களுக்கு தாகு கொடுக்கவேண்டி யிருக்கும். அவர்களை விட்டு நழுவ இடமில்லை. 1921ஆம் வருஷத்தில் எண்பது காரட் கொண்ட ஒரு வச்சிரம் ஒரு அம்பட்டனுக்குக் கிடைத்தது. அதை அவன் 24000 ரூபாய்க்கு விற்றான். பின்னொரு காலத்தில் ஒரு கல் ஒரு நெசவுக்காரனுக்குக் கிடைத்தது. அது வயிரமல்ல என்று நிபுணர்கள் சொல்லிவிட்டார்கள். ஆனாலும் அவன் நம்பிக்கை விடாமல் இனிமேல் அது பழுத்துவிடும் என்றெண்ணி, அதை பூஜையறையில் வைத்துப் பூஜித்து வருகின்றானாம். பெரும்பாலும் வைரங்கள் ஏழை மக்களுக்கே கிடைக்கின்றன.

மேற்கு நாடுகளில் கனிகளில் ஒழுங்காக வேலை செய்கிறது போல் நமது நாட்டில் வேலை நடத்துவது கிடையாது. இரத்தினங்கள் உண்டாவதைப் பற்றி நமது நாட்டில் ஒருவித மூடக் கொள்கை உண்டு. வைரங்கள் கிடைக்கும் பிரதேசம் லட்சுமி நிவாசஸ்தலம் என்றும், மழைக் காலத்தில் மழைத் துளிகளுடன் அவள் கொழுநனான மகா விஷ்ணு ரத்தின ரூபத்துடன் இறங்குவதாகவும் அக் கற்கள் விஷ்ணு பக்தர்களுக்குத்தான் கிடைக்குமென்றும் நம்புவார்கள். இவ்வித நம்பிக்கையுள்ள நாட்டில் சதா காலம் வேலைகள் செய்து வைரங்கள் எடுப்பது என்பது ஆகாத காரியம் ஆகும்.

இருநூறு வருடங்களுக்கு முன் இந்தப் பிரதேசத்தில் கனி வேலை அதிகமாக நடந்தது. நிலத்தில் 20 அல்லது 30 அடி வரையில் தோண்டி வைரம் கிடைக்கும் பாறைகளில் மண்ணை எடுத்துக் காயவைத்து நீரில் கொஞ்சம் கொஞ்சமாகக் கழுவி நன்றாகப் பரிசோதித்து கற்களைத் தெரிந்தெடுத்தார்கள். அவைகள் உண்டாகும் இடங்கள் இன்னது என்றதை சாஸ்திர ரீதியாகப் பார்க்கத் தெரியாமல் மனதுக்கு வந்தபடி வேலை செய்தார்கள். சில சமயங்களில் வைரங்கள் கிடைத்தன. சில சமயங்களில் எவையும் கிடைத்ததில்லை. வேலை செய்வோர்களுக்குக் கூலியோ வெகு குறைவு. 20 காரட்டுக்கு அதிகமான கற்கள் அரசாங்கத்துக்குச் சேரும். மற்றவைதான் வேலைக்காரர்களுக்குக் கிடைக்

கும். பல வருடங்கள் வேலை செய்தும் தகுந்த பலன் இல்லாமற் போய்விட்டது. இவ்விதம் ஒழுங்கில்லாத வேலையின் காரணத்தால் கனி வேலை நின்றுவிட்டது. வைரங்கள் தீர்ந்துவிட்டதாகச் சொல்வதற்கில்லை.

ஆங்கில பூதத்துவ சாஸ்திரிகள் பரீட்சை செய்து பார்த்ததில் இன்னம் அதிகமாகக் கிடைக்கக்கூடிய கற்கள் இருக்கின்றனவாம். ஒழுங்காக வேலை செய்தால் பலன் கிடைக்கக்கூடுமாம்.

தாவர வர்க்க நிலைமை அனுசரிக்கும்போது இத் தென்னாட்டை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. கிழக்குப் பிராந்தியம். நெல்லூர், கிருஷ்ணா, கோதாவரி, விசாகபட்டணம் ஜில்லாக்களைக் கொண்டது. இங்கே காக்காப் பொன் (Mica), இரும்புச் சத்து (Iron ore), கரிச் சத்து (Graphite), அஸ்பெஸ்டாஸ் (Aspestos), மாங்கனீஸ் (Manganese) வைரம் இவை உண்டு.

2. மத்திய பிராந்தியம் சேலம், கோயமுத்தூர், திருச்சி மைசூரில் சில பாகங்கள். இங்கே காந்தக்கல், (Magnesite) குருந்தக்கல் (Corundum), இரும்பு, தாழ்ந்த இரத்தினங்கள், பாஸ்பேட் (Phosphate) மும் இவைகள் கலந்த பொருள்களும் ஏராளமாகக் கிடைக்கின்றன.

3. தக்காணம் கடப்பை, கர்நூல், பல்லாரி, அனந்தப்புரம். இங்கே காந்தக்கல், மாங்கனீஸ் (Maganese,, கற்கள் ஏராளம் உண்டு. தவிர இரும்பு, வைரம், கரிச்சத்து முதலியன உண்டு.

4. மேற்குப் பிராந்தியம் திருவாங்கூர், மலையாளம், கொச்சி. இங்கே பொன் மணல் இரசம், வெள்ளிச் சத்து (Silver ore), தீப் பிடிக்காத மாண்டில் (Mantle) செய்யும் மண் இவைகள் கிடைக்கும்.

5. தெற்குப் பிராந்தியம் மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி. இங்கே இரும்புச் சத்து, வெடியுப்பு, செம்புத்தூள், பலவித உப்புகள் மணல் தரையில் கிடைக்கும். மேலும் சோலார் தங்கச்



சுரங்கங்களைப் பற்றி கூற வேண்டியதே யில்லை. ஆஸ்திரேலியா ட்ரான்ஸ்வால் பிரதேசங்களை அடுத்து இவைதான் உலகத்தில் சிறந்தவை என்கிறார்கள்.

மேற் கூறிய உலோக பதார்த்தங்களில் காக்காப் பொன், காந்தம், மாங்கனீஸ், பொன் இவைகள் ஏராளமாகவும், நிறக் கற்கள், குருந்தக்கல், இரும்பு, இவைகள் குறைவாகவும் வியாபார ரீதியில் ஏற்றுமதி ஆகின்றன. ஆனால் அஸ்பெஸ்டாஸ் (Aspestos), செம்பு முதலிய பல பதார்த்தங்கள் ஏராளமாய்க் கிடைத்தாலும் யாரும் கவனிப்பார் இல்லை. வியாபார ரீதியில் அவைகளை யாரும் உபயோகிக்கவில்லை. இவை தவிர கட்டடக் கற்கள் சித்திர வேலைக் கற்கள் அதிகம் உண்டு. நெல்லூர், கடப்பை, கர்நூல், திருச்சி, சேலம் இவைகளில் கயேணைட் (Kyanite)' பாஸ்பேட் (Phosphate), மாக்னடைட் (Magnatite), க்ரோமைட் (Chromite), கெலீனா (Calena) வைரம் இவைகள் அபரிமிதமாக உண்டு. ஆனால் வேலை செய்வாரில்லை.

சேலத்தில் இரும்புக் கனிகள் பிரசித்தி பெற்றவை. கஞ்ச மலைக்கருகில் முன்னர் போர்ட்டோ நோவோ (Porto Novo) கம்பெனியார் வேலை செய்தார்கள். சேலம், திருச்சியி லுள்ள காந்தக்கல் அளவிட முடியாதானாலும் எடுப்பாரில்லை. குருந்தக்கல் வியாபார ரீதியாக எடுக்கலாம். நெல்லூரில் காக்காப் பொன் முதலிய தாவரங்கள் அளவிட முடியாத அளவு உண்டு. வியாபார நோக்கமுள்ள தனவந்தர் இவைகளைக் கண்டால் விடமாட்டார்கள்.

## அற்புதச் சுனைகள்

தென் நாட்டில் பல இடங்களில் குளிர் நீர், வெந்நீர் கொண்ட அற்புத மருத்துவ குணமுள்ள சுனைகள் உண்டு. இவைகளை பொருளாதார நிலைமைக்குக் கொண்டு வர முடியும். நந்தியாலுக்கு அருகுள்ள மஹா நந்தி, கர்நூலில் கால்வா என்ற இடங்களில் உள்ள நீர் நிலைகளில் "ரேடியோ" (Radio) சம்பந்தம் உண்டு. இந்நீர்களினால் பல வியாதிகள் சொஸ்த மடைவிக்கலாம் இவைகளில் ஆரோக்கிய சாலைகளும் நீர் விளையாட்டிடங்களும் ஏற்படுத்திப் பொருள் சம்பாதிக்க முடியும்.

# ஸ்ரீ கிருஷ்ண தேவராயன்.

## (ஆந்திர நாட்டு அரசகேஸரி)

### கி. பி. 1487—1531.

திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரிருந்து ஆந்திரர்கள், இந்து தேசத்தில் ஆர்யர்கள் என்ற பெயரினராய், சென்ற நூற்றாண்டுகளி லிருந்து (கி. பி. 300) மிக்க சீரும் சிறப்புமாய்க் கீர்த்தி விளங்கத் திகழ்ந்த ஆந்திர லட்சுமிக்கு அருமைப் புதல்வர்களாய், அசோகனது சிற்றரசர்களின் பிரஜைகளாய் நிலவி, 'ஆந்திரர்' அல்லது 'ஸாதகர்ணர்' என்பவரால் ஆதரிக்கப்பட்டு முதன் முதல் கிருஷ்ணை—கோதாவரிப் பிரதேசங்

---

சிரங்கு முதலிய சர்ம வியாதிகளும், பிளவை முதலியவை போக்குவதற்கு இந்நீர்கள் மிகவும் அனுகூலமானவை. ஊக்க முள்ள தனவான்கள் இக்காரியத்தை எடுத்துக்கொண்டு மேற்கு நாட்டாரைப்போலவே பணம் சம்பாதிக்க முடியும்

ஆனால் இந்து சமயத்தாரின் மனோபாவம் வேறுவிதமானது. அவர்கள் இவ்வித அற்புத குணங்கள் கொண்ட பொருள்களை வைதீக விஷயத்திற்கு அர்ப்பதத்துப் பூசித்து வருகிறார்கள். இயற்கையாயுள்ள அற்புதங்களை சமயாசாரத்திற்காக பயன் படுத்துகிறார்கள். அவைகள் கோயில் முதலியன நிரப்பப்பட்டு புண்ணிய க்ஷேத்திரமாகி வழிபடப் படுகின்றன. மறைந்து கிடக்கும் திரவியத்தை வெளியாக்கி அனுபவிக்கக் கூடிய திரவியங்களாக்க யாதொரு முயற்சியும் இந்தியர்களால் செய்யப்படுவதில்லை. இவ்விதம் செய்யப்படும் பட்சத்தில் நாட்டில் உள்ள ஏழ்மை ஒருவாறு நீங்கக்கூடும்.

---



களைக் கைப்பற்றிப் பின்னர் நான்கு திக்குகளிலும் வியாபித்தனர். அவ் வியாபகத்தால் மிகுதியான கீர்த்தியையும் பெற்றனர். இவற்றால் இரண்டு இராஜதானிகளிலும் ஆந்திர ராஜ்யம் மேலான முறையில் நடைபெற்றது. ஆந்திர அரசர்கள் இயல்பாகவே, நன் னீதியையும், நற்குண சீலத்தையும், சுத்த வீரத்தையும் மேற்கொண் டிருந்தார்கள். இவற்றுடன் எல்லா அறங்களுக்கும், வீரத்திற்கும், வித்தகத்திற்கும், கலைகளுக்கும் நிலைக்களமா யிலங்கும் இந்து மதத்தின் பால், அன்பும் அபிமானமும் உடையவர்களாகவும் விளங்கினர். இவைகளால் இவ் வரசர்களது பெயரும், பெருமையும் தென்னிந்துஸ்தான மெங்கும் பிரசித்தி பெற்றன. இங்ஙனம் புகழும் புஜபல பராக்கிரமமும் பெற்ற இவ் வாந்திர அரசர்கள், மகத நாட்டரசர்களை வென்று வாகை சூடி வதிலேயே சதா தங்கள் கருத்தையும், கவனத்தையும் செலுத்தி வந்தார்கள். இவர்கள் கருதியவாறே ஒரு முறை அம்மகத நாட்டரசர்களை வென்று "சம்ராட்" என்னும் சக்கரவர்த்திப் பதவி பெற்று மேன்மையுற்றனர். (குந்தல சாதகர்ணி Vol, XII. 27. B. C.)

### பழவரசர்

ஆந்திர அரசர் வமிச விருக்ஷத்தில் சுவை நிரம்பிய இன்கனியெனப் பல வீரர்கள் தோன்றி ஆந்திர நாட்டை அலங்கரித்தனர். அவர்களுள் முதன்மை வாய்ந்தவர், ஓரங்கல் காகதீய 'கணபதி அரசர்' களும், உத்கல நாட்டு ஒரிஸாவேந்தன் 'பிரதாபருத்திரனு'மே ஆவர். இவர்களுக்குப் பின் சோழ வமிசம் தோன்றியது. அவ் வமிசத் துதித்த "இராஜமகேந்திரனை"க் குறித்து "வாகன்" என்னும் சாஸன ஆராய்ச்சிக்காரர் தமது ஆராய்ச்சியில் விவரித்திருக்கின்றனர். இவ் வரசனது பராக்கிரமத்தை ஆந்திரமும் தமிழ்நாடும் நன்கறிந்ததே.

### கிருஷ்ணராயன் தோற்றம்

இனி, ஆந்திர அரசர்களில், அதிசமர்த்தனும், அதிசய புருஷனும், ஆண்மையுடையவனும், நீதி நிர்வாக அரசியல் நிபுணனும், கற்றறிபுலவனும், கனமிக்கானும், விஜயநகர சாம்ராஜ்ய பட்டாபி

ஷேகனும், பேராற்றல் வாய்ந்த பெரு வீரனும், கீர்த்திப் பிரதாபனும், கீழ் நாட்டின் பகைவனும், அழகனும், சுகுணனும், "ஆந்திர போஜன்" என்று யாவராலும் புகழ்ந்து பாராட்டப் பட்டவனுமானவன் ஸ்ரீ கிருஷ்ண தேவராயனே. கீர்த்திக்கு ஓர் எல்லையாக விளங்கிய இவனது அருமை பெருமைகளை ஆய்ந்துரைத்தல் எம்மால் இயன்றதோ? சுருங்கக் கூறின், இவனே ஆந்திர வீரன்; இவனே வீரகேசரி; இவனே மகம்மதிய வீரர்களையும், பிரசித்தி பெற்ற பேரரசர்களையும் போரில் புறங்காண வென்று வாகை மாலை சூடிய வல்லரசன் என்னலாம். இம் மஹனீயன் வளர்ந்து பெருகியது கன்னட தேசமாயினும், பிறப்பகமாகிய ஆந்திர நாட்டின் மீது அளவற்ற அன்பும் அபிமானமும் வைத்து, மனம்—வாக்கு—காயம் என்னும் இவைகளினால் பெருந் தொண்டாற்றி வந்தான். அம்மட்டோ! "ஆந்திர விஷ்ணு" என்று யாவராலும் நன்கு மதிக்கப்பட்ட இக் கிருஷ்ண தேவராயன் கி. பி. 1487-ம் ஆண்டில் ஆந்திர நாடு அரிய புகழை எய்தும்படி தோன்றி கி. பி. 1509-ம் ஆண்டில் திருமுடி புனைந்து அரியாசனத்திலும் அமர்ந்தான்.

## அரசனது அமைச்சன்

இத் தேவராயனது அரசு, நீதி, செல்வம், வீரம், புகழ் முதலியன பெருகிச் சிறப்பதற்கு உறுதுணையா யிருந்த அமைச்சன் பெயர் "திம்மரசு" இவன் செந்தண்மை பூண்ட அந்தண மரபினன். இவ்வமைச்சன் "மந்திரிக் கழகு வரும் பொரு ளுரைத்தல்" என்னும் இலக்கியத்திற்குப் பெரிதும் உரியவனாகவும், கல்வி, அறிவு, ஆண்மை, விற்பனம், இராஜ தந்திரச் சூழ்ச்சி, மதியூகம் முதலியவற்றில் தேர்ந்தவனாகவும் விளங்கினன். அன்பும் அருளும் வாய்ந்த இம் மந்திரி விஜய நகர சாம்ராஜ்யத்தில் இல்லையேல், விஜய நகரம் விளங்கு புகழைப் பெற்றிருக்க மாட்டா. அமைச்சனது அற்புத சக்தியைப் போலவே அரசன் கிருஷ்ண தேவராயனது சக்தியும் அதிசயிக்கத் தக்கதா யிருந்தது.

## அரிய சக்திகள்

பிறர் மனதிலுள்ள எண்ணங்களையும் கருத்துக்களையும் கூர்ந்து கவனித்தறியும் சூட்சும ஞானமும், திறமையும், இனிமையுமான



தனது வாக்கு நலத்தால் யாவர் மனத்தையும் கொள்ளை கொண்டு தன்னிச்சை வழி செலுத்தும் சமர்த்தும் மேல் நிகழப் போகும் செயல்களை முன்னரே நுனித்தறிந்து தக்கது செய்யும் மதியூகமும், அவதானஞ் செய்தல், கவி பாடுதல், காவியம் இயற்றுதல் முதலியவைகளில் அற்புத சாமர்த்தியமுமே ஸ்ரீ கிருஷ்ண தேவராயனது அதிசய சக்திகளாக விருந்தன.

இவற்றால், ஸ்ரீ கிருஷ்ண தேவராயன் மதியூக விதரணன் என்பதும், திம்மரசு மந்திரிகளில் முதன்மை யுடையவன் என்பதும் தெளிவாக அறியப்படுகின்றது. பேரறிவு, உயர் நலம், நல்லமைச்சு முதலியவை இவனுக்கு ஒருங்கே அமைந்த காரணத்தினாலேயே இவன் நினைத்த எந்தக் காரியமும், எளிதும் சுலபமுமாக முடியக் கூடியதா யிருந்தது. வீரமாது ஸ்ரீ கிருஷ்ண ராயனையே சார்ந்து வெற்றி தந்து வந்தாள்.

## பராக்கிரமம்

அரும் பெருங் காரியங்களையும், தட்டின்றித் துணிவுடன் அநாயசமாய் முடிக்கும் ஆற்றலும், போரில் புறங்காட்டாத் தீரமும், வலிய தோளாண்மையும், சீரிய படைத் துணையும், அஞ்சாமை என்னும் துணிகரமும், யுத்த தந்திரமும், சாகஸத்திறமையும் கிருஷ்ண ராயனுக்கு பிறப்புரிமையாக விருந்தன. இவ் வரசனைக் கண்ட யாரும் அஞ்சிப் பதுங்கினர். போரில் வல்ல "சதக்னர்க"ளும், "சுவேத காயர்க"ளும் தேஜோநிதியாகிய ஸ்ரீ கிருஷ்ண ராயனது பராக்கிரமத்திற்கு எதிரே நிற்கக் கூடாதவர்களாய் மறைந்தார்கள். பகைவர்கள் இவனது பெயரைக் கேட்ட மாத்திரத்தில் இடியோசை கேட்ட நாகம் போல் அடங்குவர். ஆயின், சில துஷ்டர்கள் அப்பொழுது கீழ்த் திசை நாட்டில் இராஜத் துரோகமான கூச்சல் போட்டுக் கொண்டிருந்தனர். அஃதறிந்த கிருஷ்ண ராயன், தனது அமைச்சன் திம்மரசைக் கொண்டடக்கி அவர்களுடன் ஒரு சமரஸ உடன்படிக்கை செய்து கொண்டு பகையும், ராஜத் துரோகச் சூழ்ச்சியும் பரவாமலிருக்கப் போதிய ஏற்பாடு செய்தான். சிறிது காலத்திற்குள் அத் துஷ்டர்கள் சமாதான நிபந்தனையை மீறி 'சதக்னர்' அதாவது: நூற்றுவர் என்னும் பகைவர் கூட்டத்தைப் பக்க பலமாகச் சேர்த்துக் கொண்டு

உள் நாட்டில் கலகமும், குழப்பமும் செய்யத் தொடங்கினார்கள். ஸ்ரீ கிருஷ்ண ராயன் பெரிய ராஜதந்திரியும், அரசியல் நிபுணனும், எதிர் கால நிகழ்ச்சியை முன்னரே ஆய்ந்துணரும் நுண்ணறிவும் உடையவனாதால், போர்த்துக்கேசியருடன் சிநேகித்து அவர்களது பேரன்பைப் பெற்றிருந்தான். அவர்களது பேரன்பு உண்மை யுடையதாகவும் தனக்கும், தனது குடிமக்களுக்கும் லாபகரமானதாகவும், தனது ஆந்திர நாட்டில் வியாபாரம் உயர்ந்து லாபம் பெருகக் கூடியதாகவும் இருந்தது.

## பாராட்டுதல்

ஸ்ரீ கிருஷ்ண தேவராயன் நீதி நிர்வாகத் திறமையில் மிக்கானென்றும், கீர்த்தி பெறுவதில் பெரு விருப்ப முடையானென்றும், ராஜ தந்திர சூழ்ச்சியில் வல்லானென்றும், மற்றும் பல சிறப்புடையானென்றும், "போர்த்துக்கல் தேசத்து யாத்திரிகன்" தான் நேரில் கண்டறிந்த உண்மைகளைத் தனது கைக் குறிப்பில் பாராட்டி எழுதியுள்ளான்.

## விஜய நகரம்

இது, ஸ்ரீ கிருஷ்ண தேவராயனது தலைமை நகரம். இதற்கு 'வித்யாரண்யம்' என்று மற்றொரு பெயர். பெரும் பரப்பும், அதிக நீளமும், ஜன நெருக்கமும் கொண்டதொரு அழகிய நகரம். சரித்திரத்தில் பிரசித்தி பெற்றது. இதன் அருமையும், பெருமையும், அமைப்பும், அந்தமும் விந்தையுடையன. நீண்ட தெருக்களும், நெடிய மந்திரங்களும், காப்பமைந்த அரண்மனைகளின் உயர்வும், கூட கோபுர மாட மாளிகைகளின் சிறப்பும், தேவாலயங்களின் சிறந்த தோற்றமும் காண்போர் கண்களுக்கு நல்விருந்தா யிருந்தன. நகரின் மத்திய பாகத்தில் செல்வர்களும், சிறந்த வியாபாரிகளும் வசித்து வந்ததனால் வெகு ஜனக் கூட்டமும் வெளியூர் வியாபாரிகள் வருகையும் மிகுதியா யிருந்தன. இவற்றால் செல்வ நிலையும், வியாபார அபிவிருத்தியும் மேலோங்கி நாடும் சுபிக்ஷமா யிருந்தது.

## திக்கு விஜயம்

ஸ்ரீ கிருஷ்ண தேவராயன் பெரு வீரன். இவனது சேனைகள் பரந்த எண்களை யுடையன. தண்ட நாயகர்கள் சிறந்த வீரர்களா



யிருந்தனர். வேந்தனுக்குப் போர் என்றால் பெரு விருப்பம். அவன் செய்த திக்கு விஜயம் யாத்திரைகள் மிகுதியானவை. அவற்றில் தெற்கிலும் கிழக்கிலும் நிகழ்த்திய யுத்தங்கள் முக்கியமானவை. மற்றும் உம்மத்தூர், சிவசமுத்திரம் முதலிய ஊர்களை உட்படுத்திக் கொண்டு நெல்லூர்க் கருகிலுள்ள "உதயகிரியை"ப் பதினெட்டு மாதங்கள் முற்றுகை யிட்டு மலையரண் சிறந்த அக் கோட்டையைச் சுவாதீனப் படுத்திக் கொண்டு, குடகு, மலையாளம் முதலிய நாடுகளையும் வென்று தன்னடிப் படுத்தித் தமிழ் நாட்டு மூவேந்தரையும் திறை செலுத்துமாறு சேவகஞ் செலுத்திப் பின், மத்திய இந்திய வழியாக்க் குஜராத்திற்குச் சென்று மகத நாட்டை வென்று, சிறிது நாள் களைப்பாறி மீண்டும் ஒரிஸா நாட்டின் மீது படை யெடுத்து அவ் வரசனுக்குரியதும், வலியமலையரண் சூழ்ந்ததுமான "கோண்ட வீடு" என்ற கோட்டையை சுவாதீனப் படுத்திக் கொண்டு அங்குனின்றும் நீங்கி அத்தங்கி, வினுகோண்ட, பெல்லம்கோண்ட, பெஜவாடா, கோண்டபல்லி, இராஜமகேந்திரவரம், நாகார்ச்சுனமலை, தங்கேட்டி, கடாரம் முதலிய நகரங்களையும், நாடுகளையும் கைப்பற்றி, 'வீரபத்திர ராயனை'யும் 'ஒட்ட ராஜாக்களை'யும், இராமசூரி 'மகம்மதியர்களை'யும் வென்று வெற்றி மாலை சூடினன். அவ் வெற்றியைப் பாராட்டிச் சேனைத் தலைவர்களும், படை வீரர்களும் 'இன்றுதான் நமதரசன் வீரமாமகளைக் கைப்பற்றி விளங்கு புகழ் பெற்றான்' என்று வியந்து மகிழ்ந்தனர்.

## கடகத்து அரசன் மகளைக் கைப்பற்றுதல்

பின்னர், ஸ்ரீ கிருஷ்ண தேவராயனுக்குக் கலிங்கத்தின் மீது கவனஞ் செல்ல அந் நாட்டின் மேல் படை யெடுத்து அந் நகரத்தைத் தனது அதிகாரத்திற்கு உட்படுத்திக் கொண்டான். அதனுடன் அமையாமல் தளரா முயற்சியுடனும், தக்க சேனைகளுடனும் அப் பிரதேசங்களிலுள்ள நாடுகளிற் புகுந்து வென்று வசப்படுத்திக் கொண்டு ,பிரதாபருத்திரனைக் "கடகம்" (கட்டக்) என்ற நாடுவரையிலும் துரத்திச் சென்று, அக் கடகபுரியை முற்றுகையிட்டு வெற்றி பெற்று, அவ் வரசன் வேண்டுதலினால் சமாதானத்திற் குட்பட்டு அதன் அடையாளமாக அவனது அருமைத் திருமகள் "திருமலைத்

தேவி''யை இரண்டாம் மனைவியாக மணஞ் செய்து கொண்டு, அவளுடனும் தனது சேனைகளுடனும், அங்குநின்றும் பெயர்ந்து "பொட்டனூரி"ன் கண் ஜயஸ்தம்பம் நாட்டி, இராஜமகேந்திரவர மார்க்கத்தில் விஜய நகரத்தைச் சேர்ந்து; பகை யரசர்க்குத் தனது தோளாற்றலையும், வாளாற்றலையும், படைப் பெருக்கையும் விளக்கினன்.

## நன்னோக்கம்

நற்குண சீலத்திற்கு உறைவிடமாக விளங்கிய இவ் வரசன், அக் காலத்தில் மத வெறியாலும், மண்ணாசையாலும் தூண்டப் பெற்று நாடு கவரும் எண்ணமுடைய மகம்மதிய அரசர்களின் கொடிய செயல்களை அடக்கி அவர்கள் தன்னை வணங்கும்படி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை மேற்கொண்டு அதற்கேற்ற முயற்சிகளில் ஈடுபடலானான். முடிவில் வெற்றி தனக்கே யுரித்தாயிற்று. மேன்மை பெற்றான். தனது படைவலியும், புயவலியும் மேலும் மிகுதிப்படும் பொருட்டு வேண்டிய ஏற்பாடு செய்தான். தனது சேனைகளுக்கும், சேனைகளின் தலைவர்களுக்கும் போதிய சன்மானம் செய்து உற்சாகம் ஊட்டினன். அல்லாமல், தனது நாட்டின் குடிமக்களின் தேவைக் கேற்ற நன்மைகளைச் செய்வித்து, அவர்களுள் ஒற்றுமையையும், உள்ளன்பையும் உண்டாக்கித் தனது ஆட்சியை நன்றாக நடைபெறுமாறு செய்தான். இவற்றால் நாட்டில் அதிருப்தியும், குழப்பமும், பஞ்சமுமின்றி நாடு செழிப்படைந்து நன்னிலை யெய்தி, உயர்வு பெற்றிருந்தது.

## சமரஸ சுபாவம்

இராயன் மத வேற்றுமையையும், தெய்வ தூஷணையையும், மேற்கொள்ளாத சமரஸ சற்குண சீல முடையவனானதால், சைவ-வைணவ-ஜைன—பௌத்த தேவாலயங்களுக்கும், மடாலயங்களுக்கும் போதுமான மான்யங்களைத் தாராளமாகத் தானஞ் செய்திருந்தான். அவற்றின் அபிவிருத்திகளில் கண்ணுங் கருத்துமா யிருந்து வந்தான். அம்மட்டோ! விவசாயிகளின் உபயோகத்தின் பொருட்டு ஏரி, குளம், கால்வாய், ஆறு முதலிய நீர் நிலைகளைப் பெருக்கி உதவி புரிந்தான். இத்தகைய இவனது பேருதவிகளினால் குடிமக்கள் இவனை நன்னோக்கஞ் சிறந்த நற்றெய்வமென்றும், கருணாநிதி யென்றும், சேயைக் காக்கும் தாயைப் போன்றவனென்றும், நாவாரப் புகழ்ந்து பாராட்டினர்.



## இராயச்சூர் யுத்தம்

இங்ஙனம் நாடும், சேனைகளும், படை வீரர்களும் உற்சாக சிந்தையில் சந்தோஷத்தில் ஆழ்ந்திருக்கும் கி. பி. 1520-ம் ஆண்டில் ஸ்ரீ கிருஷ்ண தேவராயன், காலஞ் சென்ற தனது தந்தையாருக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற நினைந்து இராயச்சூரைத் தனது வசப்படுத்தப் படையெடுத்தான். ராயன் எதிர்த்தப் பகைவர்களில் பீஜப்பூர் சுல்த்தானான "அதில்ஷா" என்பவனே பெரும் பகைவன். அவன் பதினான்கு லட்சம் சைநியங்களுக்கு அதிபனும், அஞ்சா நெஞ்சனும் என்றால் வேறு கூறுவானேன்? இம் மகம்மதிய வீரனுடன் ஸ்ரீகிருஷ்ண தேவராயன் எதிர்த்துப் பெரும் போர்விளைத்து அவனது பெரும் படைகளைச் சின்னாபின்னப் படுத்தி அவனையும் புறமுதுகு காட்டி ஓடும்படிசெய்து வெற்றி பெற்று வாகைமாலை சூடினன். அதில்ஷாவும் அவனது படைவீரர்களும் எவ்வளவோ அருஞ் சூழ்ச்சிகளையும், பெரு முயற்சிகளையும் செய்தும் இராயனை வெல்லமாட்டாமல் வலசை வாங்கினர். கோபத்தால் கொழுந்து விட்டெரியும் பெரு நெருப்பின் முன் பஞ்சுப் பொதிகள் யாது செய்யக்கூடும்? கிருஷ்ண தேவராயன் சினங்கொண்டெழுந்த காலாந்தகனைப் போல் விளங்கினன். இங்ஙனம் வெற்றி மாலை யணிந்த வீரன், விளங்கு புகழுடனும், ஜயகோஷத்துடனும் வித்யாரண்ய நகரினுள் பிரவேசித்தான். பிரஜைகள் அரசனது வெற்றி விஜயத்திற்கு வியந்து மகிழ்ந்து விமரிசையாக வரவேற்றனர். அதன் பின் போர் என்பதின்றி நிம்மதியாகச் சர்வ சவுக்கியத்துடன் சந்தோஷமாக ஒன்பது ஆண்டுகள் வாழ்ந்தான். ஏ வாசகனே! இத்தகைய சூரனான மஹனீயன் கேவலம் இரத்த வெள்ளம் காண்பதே பிரதானமாக எண்ணக்கூடிய பயங்கரமூர்த்தி யென்று நினைத்தனையா? அங்ஙனம் நினையற்க. அவ் வண்ணல் சாந்தமூர்த்தியும், கருணாநிதியும், சுகுண சம்பன்னனும், தேஜோநிதியும், கம்பீரனும் என்றுணர்தி! பயங்கர யுத்தமான இராயச்சூர் முற்றுகையில் கைப்பற்றப்பட்ட பெண்களையும், குழந்தைகளையும் கிருஷ்ண தேவராயன் தயை நிறைந்த உள்ளத்துடன் அவர்களுக்கு எத்தகைய துன்பமும் நேராமல் காப்பாற்றினன். இதற்கு முன் நிகழ்ந்த போரில் தனது விரோதியான பிரதாபருத்திரன் தோல்வியுற அவனது பட்டமகிஷி

தனது வசப்பட்ட போது அவ் வரசியைக் கேவலமாக மதியாமலும், அவமானம் செய்யாமலும், கௌரவமாகக் காப்பாற்றிய செயலொன்றே இவன் தயை நிறைந்த உள்ளமுடையான் என்பதற்குப் போதிய சான்றாகும்.

## நன்றியுடைமை

நன்றி யறிதலிலும், பித்ரு பக்தியிலும், மித்திர வாத்ஸல்யத்திலும், பக்தி சிரத்தையிலும் இவ் வரசனிலும் மேலானோர் ஆந்திர அரசர்களில் எவருமே இல்லை யென்று தாராளமாய்க் கூறலாம்.

## அரசின் கொற்றம்

ஸ்ரீ கிருஷ்ண தேவராயன் கசடறக் கற்ற கல்விமானும், மஹா வீரனுமானதால், கோல் கோணாது குடிகளின் விருப்பத்திற்கேற்ப அரசு செய்து வந்தான். இவனது வாழ்நாளின் தினசரி வாழ்க்கை விதி முறையின் நியதி யொத்து நேர்மையாக நிகழ்ந்து வந்தது. ஆன்றோர் வழிபாடும், தெய்வ சிந்தனையும், நடு நிலை வழுவாத நீதியும், பகை யரசரைப் புறங்காணும் வெற்றியும், துஷ்ட நிக்கிரகமும் சிஷ்ட பரிபாலனமுமே கிருஷ்ண ராயனது மதிக்கத் தக்க அரசியலாக விருந்தது.

## உற்சாக சிந்தை

அரசியல் விவகாரங்கள் ஒழிந்த சமயங்களில் தேவராயன் விநோத விளையாட்டுக்களைக் காண்பதிலும், சிலம்பம் பழகுவதிலும், அதனைப் பழகும் வீரர்களை உற்சாகப் படுத்துவதிலும், செவிக்கினிய சங்கீதங்களைச் சிரவணிப்பதிலும், காவிய அலங்கார முதலிய அரிய நூல்களை அன்புடன் ஓதி மகிழ்வதிலும், அன்பர்களுடன் கூடி உல்லாஸ சம்பாஷணைகளைச் செய்வதிலுமே தனது காலத்தைச் செலுத்தி வந்தான். கிருஷ்ண தேவராயன் இளமை தங்கிய ரஸிக புருஷனானதால் உற்சாக சிந்தையில் ஊக்கமுடையவனாகவே விளங்கினன்.

## ஆலய பரிபாலனம்

இவ் வரசன் இந்து மதாபிமானியும், தெய்வ பக்தியும் நிறைந்த சன்மார்க்க சீலனானதால் சிவாலய விஷ்ணு வாலயங்களுக்கு அவற்றின் நித்தியநைமித்திகங்களுக்கும், நித்ய—பக்ஷ—மாத—வருஷோற்சவங்களுக்கும் யாதோர் குறைவும் நேராமல் சீரும் சிறப்புமாய் நடைபெறுவதற்கும் போதுமான பூமிகளையும், பொற் குவியல்களையும், பொன்னாபரணங்களையும் ஏராளமாகத் தானம் செய்து அவைகளைத் தனது நேர் பார்வையில் கண்காணித்து வந்தான், அதனுடன் சநாதன தர்மங்களும் தழைத் தோங்குமாறு கவனிக்க மறந்தானில்லை.



## தேவாமிசத்தில் நம்பிக்கை

மஹா வீரர்கள் பலரைப் போலவே, கிருஷ்ண தேவராயனும் அரசர்கள் தெய்வ அமிசமுடையவர்கள் என்ற நம்பிக்கையில் உறுதியாய்க் கொண்டிருந்தான். அவ் வுறுதி காரணமாகவே தானும் அவ் அமிசம் நிறைந்த அவதார புருஷன் என்பது அவனது ஆழ்ந்த எண்ணமா யிருந்தது. இந்த மதத்தில் தோன்றிய எண்ணற்ற வீரர்களும், அரசர்களும், இந் நினைவுடையவர்களாகவே யிருந்து அரிய பெரிய காரியங்களைச் சாதித்துத் தாங்கள் கொண்ட எண்ணம் உண்மை யென்பதை நிலை நாட்டி யிருக்கின்றனர். அதனாலேயே அவர்கள் வீரமும், வித்தகமும் விளங்கு புகழைப் பெறும்படி திறமை பெற்றிருந்தனர். இந் நினைவு கொள்ளா தொழியின் அவர்களும் சாமான்யர்களைப் போலவே கேவல விஷய இச்சையில் உயர்ந்த வாழ்வின்றிப் பாழ்பட்டே யிருப்பர். ஸ்ரீ கிருஷ்ண தேவராயன் தெய்வாமிசத்தில் பூரணப் பிரகாசம் பெற்றிருந்தானானதால், புலவர்களும் பிறரும் புகழ்ந்து பாராட்டும் புதுமையுடைய தெய்வப் பிறவியாகத் திகழ்ந்தனன்.

## கல்வியபிவிருத்தியில் கவனம்

நமது கிருஷ்ண தேவராயனிடத்து இன்னுமொரு மேலான குணம் நிலை பெற்றிருந்தது. அது—தேசாபிவிருத்திக்கு மூலகாரணமாகிய பாஷாபிவிருத்தில் பற்றுக்கொண் டிருந்ததே. இவன் ஆந்திரம், கன்னடம், சம்ஸ்கிருதம் முதலிய தேச பாஷைகளை நன்கு ஆதரிப்பதில் தனது முழுக் கவனத்தையும் செலுத்தி வந்

தான். ஆந்திர பாஷையினிடத்து தேவராயனுக்கு அளவு கடந்த அன்பிருந்தது. அதனைக் கண்ணுங் கருத்துமா யிருந்து கற்றுத் தேறினன். அத் தேறுதலினால் அப்பாஷையில் புலமை யடைந்து, புலவர்க்கு புலவனாக விளங்கினன். இப் புலமை மிகுதியினால் யாவரும் ராயனை 'ஆந்திர போஜன்' என்று புகழ்ந்து பாராட்டுவாரா யினர். வடமொழியிலும் வல்ல திறமை பெற்றிருந்தான். தாய் பாஷையாகிய ஆந்திரத்தில் கவிபாடும் தகுதி வாய்ந்திருந்தா னென்பதற்கு அவனால் இயற்றப் பட்ட "ஆமுக்த மாலியதா" அல்லது 'விஷ்ணு சித்தியமு' என்ற அரிய இனிய நூலே போதிய ஆதாரமாம். இவன் கல்வியைக் கசடறக்கற்று அதன் சுவையை யுணர்ந்த பின்னரே கல்விவல்ல பண்டிதர்களையும் புலவர் பெருமக்களையும் மிகுதியாக ஆதரித்து அவர்களைப் போற்றி வந்தான். ஸ்ரீ கிருஷ்ண தேவராயனது ஸ்ரீமந்தப்புதல்வி 'இலக்குமி தேவி' என்னும் பெண் மணி தனது தந்தையைப் போலவே கல்வியில் வல்லவளாகிக் கவி பாடும் திறமை பெற்றிருந்தாள். பிரசித்தி பெற்ற 'அல்லசானி பெத்தன்னன்' என்னும் பெரும் புலவர் ராயனது சமஸ்தானத்தில் முதன்மைப் புலவராக விளங்கியிருந்ததே ராயனது கல்வியபிவிருத்தியின் செயலுக்குச் சான்றும்.

## எண்பெரும் புலவர்கள்

புலமை வல்ல தேவராயனது சமஸ்தானக் கொலுக் கூட்டத்தை அணிபெற அலங்கரித்துக் கொண்டிருந்த அஷ்டகஜங்கள் போன்ற புலவர் பெருமக்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? அவர்கள் கல்வியிலும், கவி பாடுவதிலும், சொற்பொழிவு செய்வதிலும் ஒப்புயர்வற்ற திப்பிய சிரேஷ்டர்களென்பது உலகறிந்த செய்தி. அவர்களது அபிதானம்:—அல்லசானி பெத்தன்னன், நந்திதிம்மன்னன், இளையராஜு, இராமபத்திரன், தூர்ஜடி, மாதையகாரிமல்லண்ணன், பிங்கள சூரன்னன், இராம ராஜபூஷணன், தெனாலி இராம கிருஷ்ணன் என்பன. புவிசிரேஷ்டர்களாகிய இப் புலவர்மணிகள் இயற்றிய அரும் பெரும் நூல்களைக் காணாத ஆந்திரர்களது கண் கண்ணாமா? ஓதாத நாவு நாவா? சுருங்கக் கூறின் அவர்கள் ஜன்மம் இருந்தும் இறந்ததற் கொப்பாம்.



## அமைச்சர் தகுதி

இத்தகைய மேலான கல்விச் செல்வர்களின் அரும் பெரும் தன்மைகளை ஆந்திர உலகம் அறிந்தது போலவே அரசன் கிருஷ்ண தேவராயனது மதியூக விதரண மந்திரிகளின் தகுதியைப் பற்றியும் அறியாத ஆந்திரமக்களும் பிறரும் இாரென்றே கூறலாம். விக்கிரமார்க்க அரசனுக்குப் 'பட்டி' என்னும் பெயருடைய அமைச்சர் எவ்வாறிருந்தாரோ அவ்வாறே கிருஷ்ண தேவராயனுக்குத் 'திம்மரசு' (அப்பாஜி ராயர்) அமைச்சராயிருந்தார். இவரைப் பற்றி வழங்கும் 'இராயர் அப்பாஜி கதை' மிகவும் விநோதமானது. விநயமும், நுட்பமும், இனிமையும், நீதியும் நிறம்பிய அச் சிறு கதைகளை ஓதாத மாணவர்களும் பிறரும் உளரா? மநுசரித்திரத்தையும், அந் நூலுக்குரிய தலைவனையும் பன்முறை வாயாரப் புகழ்ந்து கூறாத ஆந்திரமக்களைக் காணக்கூடுமா? இத்தகைய மேலான பெருமைக்கும், வருமுன்காக்கும் திறமைக்கும், பெயர் பெற்ற அமைச்சர் திம்மரசை தலைமையாகக்கொண்ட அரசியல் நிர்வாகம் ஆயிரம் விதமாகப் புகழக்கூடிய சிறப்புடையதா யிருந்தது.

## முடிவுரை

விஜயநகரத்து சாம்ராஜ்யத்திற்கு அரசகேசரியாக விளங்கிய ஸ்ரீ கிருஷ்ண தேவராயனை, நற்குணக் குன்றமான நாயகமணியை—நியாயமூர்த்தியான கீர்த்தியாளனை—பராக்கிரமசாலியான சூரனை—நீதிமுறையில் நெறி வழுவாத தூயனை—உத்தம வேந்தன் என்று கூறாத ஓர் இந்துவும் உளனோ? அதிலும் முக்கியமான ஆந்திரனிருக்கிறானோ? வேந்தர்க்கு வேந்தனும், வீரனுக்கு வீரனுமான வித்வ சிரேஷ்டனை வெற்றி வீரனென்று வேறாகக் கூறவும் வேண்டுமோ? வெற்றிக்கே நிலைக்களமாக விளங்கிய இவ் அரசர் பெருமானது அரிய குணவமுதங்களை வரலாற்றாசிரியர்கள் பன்முகமாய் விளக்கி யிருக்கின்றனர். இவர்களை விட அந்நிய நாட்டினரும், பிற கண்டவாசிகளும் இவ் வரசனை மேலாகவே புகழ்ந்து பாராட்டியிருக்கின்றார்கள். இப் பாராட்டு மொழிகள் அவனது தகுதிக்குப் பொருத்தமானதே. அறிஞர்களது இவ் வகையான துதி மொழி

# விவசாயிகளும் ஐக்கிய ராஜ்யமும்.

திரு. கே. சந்திர மௌள்வி அவர்கள், B. Sc. (Aberdeen)

கிரேட் பிரிட்டனில் விவசாயிகளுக்கு அநேக விதமான சௌகரியங்கள் இருப்பதுபோன்று, இந்திய விவசாயிகளுக்குக் கிடையவே கிடையாது. நிலங்கள் சில பிரபுகளுக்கே சொந்தமாயிருக்கின்றன. எப்பொழுதுமோ அல்லது குறிப்பிட்ட சில வருடங்களுக்கோ அந்நிலங்கள் விவசாயிகளுக்குக் குத்தகைக்கு விடப்படுகின்றன. ஸ்காட்லாண்டு தேசம் முற்றிலும் 4 ஜமீன்தார்களுக்கே சொந்தம். இந்தப் பெரிய மிராசுதாரர்கள் தங்களுடைய பூமிகளை 60 ஏக்கரிலிருந்து 500 ஏக்கருக்கு மேலாகவுள்ள துண்டு துண்டுகளாகப் பிரிக்கிறார்கள். அப்பால் நிலச் சுவான்தார்கள் பண்ணைகளில் குத்தகைதாரர்கள் குடியிருக்க நல்ல வீடுகளையும், ஆடு மாடுகளுக்குத் தொழுவங்களையும், குதிரைகளுக்கு லாயங்களையும், தொழிலாளர்களுக்கு வீடுகளையும் கட்டி இன்னும் பல வசதிகளை

---

களால் ஸ்ரீ கிருஷ்ண தேவராயன் மகா புருஷனென்று சந்தேகமற விளங்குகிறது. ஆந்திர அரசர்களில் மகா மேதாவிகள் பலரிருந்தாலும் இவனை உயர்வுடையானென்று உறுதியாகக் கூறலாம்.

இப் பேரரசனது கம்பீர சுபாவம் மரண காலம் வரையிலும் ஒரே ரீதியாகவே யிருந்தது. ஆயுட்கால இறுதியிலும் போரென்றால் விருப்பந் தணிந்தானில்லை. இம் மகா வீரன் போர் முனையில் பகைவரிடையில் வீர சுவர்க்கம் புகாமல் புத்திர சோகத்தால் மெலிந்து உயிர் துறந்தது பெரிதும் வருந்தக் கூடியதேயாம். வீர புருஷர்கள் யாவருக்குமே நல்ல மரண முண்டாகின்றதா? இவன் தனது நாற்பத் திரண்டாம் ஆண்டில் அதாவது சாலிவாகன சகாப்தம் 1442-ம் ஆண்டிற்குச் சரியான கி. பி. 1531-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19 தேதி தனது குடிமக்கள் ஒருங்கே வருந்த விண்ணுடு புகுந்தனன்.



யும் செய்கிறார்கள். இவ்வாறு அநேக சௌகரியங்களைச் செய்த பிறகே மிராசுதாரர்கள் தங்களுடைய பண்ணைகளைக் குடியானவர்களுக்குக் குத்தகைக்கு விடுகிறார்கள்.

குடியானவர்கள் தங்களுக்கு வேண்டிய கருவிகளையும் ஆடு, மாடு, குதிரை, பன்றி முதலியவைகளைத் தாங்களே கொண்டு வருகிறார்கள். இந்திய விவசாயிக்கும் இங்கிலீஷ் விவசாயிக்கும் எவ்வளவோ வித்தியாசம்? இங்கிலாந்தில் நஞ்சைச் சாகுபடியே கிடையாது. குடியானவர்கள் ஒவ்வொரு எழுத்தின்படியே கண்டிப்பாய் அனுசரிக்கும்படியாய் அவ்வளவு நேர்மையுடன் சர்க்காரால் ஆக்கப்பட்ட சட்ட திட்டங்கள் இருக்கின்றன. குடியானவர்கள் மாறி மாறி சாகுபடி செய்ய வேண்டும். இப்படி ஒழுங்காய்க் கிருஷி செய்வதால் நிலம் உரத்துட னிருப்பதுடன் நன்றாயுமிருக்கிறது. மாறி மாறிப் பயிரிடும் சட்டத்தின்படி தனது நிலத்தின் ஒரு பாகத்தை விவசாயம் செய்யாது தரிசாகவும் இன்னொரு பாகத்தை ஆடு மாடுகளுக்காகவும் வைத்திருக்க வேண்டியது.

## கிருஷி

பலமான, சுத்தமான, நல்ல விதைகளை மட்டுமே குடியானவர்கள் உபயோகிக்க வேண்டும். இந்த விதைகளில் 100-க்கு 95-க்கு குறையாமல் நிச்சயமாய் முளைக்கும். நன்றாய் முளைக்காத விதைகளை விதை வியாபாரிகள் விற்றால், விதைச் சட்டப்பிரகாரம் சர்க்கார் கெட்ட விதை வியாபாரிகளைப் பிடித்துத் தண்டித்து அபராதமும் விதிக்கிறார்கள். பல்வேறு வியாபாரிகளால் விற்கப்படும் விதைகளை நன்றாய்ச் சோதித்து அவர்களுக்கு அத்தாட்சிப் பத்திரங்கள் கொடுக்கும்படியாகக் கவர்ன்மெண்டார் விற்பன்னர்களான பரீட்சாதிகாரிகளை நியமிக்கிறார்கள். விதைகள் விற்கும் கடைகளில் நுழைந்து தங்களிஷ்டம் போற் விதைகளை (Samples) எடுத்துப் பரீட்சை செய்ய இந்த விதைப் பரிசோதனை அதிகாரிகளுக்கு அதிகாரமுண்டு. இவ்வாறு பரிசோதனை செய்வதில் சட்டத்திற் கண்ட விதிகளுக்கு விரோதமா யிருக்குமானால், உடனே தனது மேலதிகாரிகளுக்கு நடபடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமாறு இதைப்பற்றிப் புகார் செய்து இவர் எழுதுகிறார்.

உரம் போடும் விஷயமாகக் குடியானவன் விவசாய இலாகாவின் ஆலோசனையின்படியே நடக்க வேண்டும். ரசாயன சாஸ்திரி, குடியானவனிடம் வந்து அவனுடைய மண்ணைப் பரிசோதித்து அறிந்து பல்வேறு வேளாண்மைகளுக்கும் என்னென்ன எருவுகளை எவ்வளவு எவ்வளவு போட வேண்டுமென்றும் சொல்லுகிறார். விவசாய இலாகாவின் யோசனையின்படியே குடியானவன் பின்பற்றுகிறான். கவர்ன்மெண்டு அங்கு விவசாயிகளுக்கு உத்திரவாதம் கொடுக்கிறது. ஓர் குடியானவனுக்குத் தக்கபடி இலாபம் கிடைக்கா விட்டால் சர்க்காரிடம் நஷ்ட ஈட்டை ஏற்றபடி பெறுவதற்கு அவனுக்கு உரிமை உண்டு. பால்டுவின் மந்திரியாயிருந்த காலத்தில் கோதுமை நன்றாய் விளையவில்லை. ஆகையால் விவசாயிகள் நஷ்ட ஈடு கேட்டார்கள். பால்டுவின் முதலில் கொடுப்பதற்கு மறுத்தார். இதனால் விவசாய சபையார் (Agricultural Board) இந்த விஷயத்தை பால்டுவின் மந்திரியாரிடம் சொல்லி, நஷ்ட ஈட்டைக் கொடுக்க வேண்டும் அல்லது அவருடைய மந்திரி பதவியை ராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். வேறு வழியில்லாது பால்டுவின் கோதுமை நஷ்ட ஈட்டைக் குடியானவர்களுக்குக் கொடுத்தார். கிருஷி டிபார்ட்டுமெண்டின் ஆலோசனையின்படி குடியானவன் நடப்பதால், இந்தவிதமான எருக்களை உபயோகித்து உண்மையாகவே தக்க இலாபமடைகிறான். அவன் இவ்வாறு வழக்கமடைந்து ஒரு முறை அதிகப் பலன் பெறும் பொழுது அவன் உரங்களை மதித்து அவைகளையே எப்பொழுதும் உபயோகிக்கிறான். ஆகையால்தான் சர்க்கார் இது விஷயத்தில் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டிருக்கிறது.

## விளைச்சல்

இங்கிலாந்திலே உணவுப் பொருள்களிலே முக்கிய விளைவு கோதுமையே. கோடை காலத்திலே கோதுமையைப் பயிரிடுகிறார்கள். மழை காலம் முற்றிலும் பூமியானது பனியால் மூடப்பட்டிருப்பதால், விவசாயம் செய்ய முடியாமலிருக்கிறது. நிலத்தில் நன்றாய் ஈரம் உண்டாக்கும் பொருட்டு மழைக் காலத்தில் அடிக்கடி உழுது கோடைக் கிருஷிக்காக விவசாயி நிலத்தைத் தயார் செய்கிறான். சூரிய உஷ்ணத்தினால் ஈரமானது போய் விடாதபடி நிலத்தில் மக்கின இலை உரங்களைப் போடுகிறான். எவ்வளவு அதிக



மான விளைச்சல் பெற முடியுமோ அவ்வளவு அதிகமான விளைச்சலை பூமியிலிருந்து அடையும் பொருட்டு நல்ல சுத்தமான புதிய விதைகளையும் நேர்த்தியான உரங்களையும் உபயோகிக்கிறான். ரசாயன சாஸ்திரி அடிக்கடி வந்து அவனுடைய நிலங்களைப் பார்வையிட்டு, அவனுக்கு யோசனைகள் கூறி, உரங்களை உபயோகப்படுத்தும் முறைகளையும் அளவையும் சொல்லுவதுடன் விளைச்சலைக் கெடுக்கும் வியாதிகளையும், புழுக்களையும், பூச்சிகளையும் தடுக்கும் உபாயங்களையும் சொல்லுகிறார். இவ்வாறு ரசாயன சாஸ்திரியின் ஆலோசனையுடனும் சர்க்காரின் உத்திரவாதத்துடனும் குடியானவன் விவசாயத்தை நன்றாய்ச் செய்யும் பொருட்டு உற்சாகத்தைப் பெறுகிறான். ஒரு ஏக்கரிலிருந்து 32 முதல் 40 புசல் கோதுமை குடியானவனுக்குக் கிடைக்கின்றது. ஆனால் இந்தியாவிலோ சராசரி 16 புசலே கிடைக்கின்றது.

முன்னால் கூறியது போல ஒவ்வொரு குடியானவனும் பண்ணையில் தன் குடும்பத்துடனேயே சுகமாகவே வசதிகளுடன் வசிக்கிறான். குடியானவன் முக்கியமாய் விவசாயத் தொழில்களைக் கவனித்துக் கொண்டிருக்க, அவனுடைய மனைவியோ வேலைக்காரியுடன் வீட்டு வேலைகளைக் கவனிப்பதுடன் பால் கறத்தல் வெண்ணையெடுத்தல் முதலிய பால் பண்ணைத் தொழிலையும் காய் கறிகள் விளைவிக்கும் வேலையையும் செய்கிறாள். கடைகளிலும் சந்தைகளிலும் காய்கறிகளை வாங்க அவசியமில்லாதபடி முட்டைக் கோஸ், காலிபிளவர், பீன்ஸ், பட்டாணி, முள்ளங்கி, பீட்ரூட், காரட், கீரை முதலிய சாதாரண காய் கறி கிழங்கு கீரை வகைகளைத் தானே பயிரிடுகிறாள். இன்னும் ஒவ்வொரு குடியானவனுடைய மனைவியும் ஏராளமான கோழிகளை வளர்ப்பதால், பிரிட்டிஷ் குடித்தனத்தில் கோழி வளர்க்கும் தொழிலே மிகவும் முக்கியமாயிருக்கின்றது.

சிறு பிள்ளைகள் தேனீக்களை வளர்க்கிறார்கள். இத் தொழிலுக்கு அதிக முதல் தேவையில்லை. இதனை வளர்க்கும் பண்ணைகளுக்கு 60 முதல் 100 பவுன் வரைக்கும் வருஷ வருமானம் வருகின்றது. இவ்வாறு சந்தோஷத்துடன் பல வழிகளில் குடியானவனுக்குப் பணம் கிடைக்கின்றது. அவசரமான காலங்களில் தவிர்த்துக் குடியானவன் முக்கியமான குடும்ப சாமான்களுக்காகக் கடைக்குப் போகத் தேவையேயில்லை.

# உருக்கமான தேச பக்தி.

திரு. P. கந்தநரசிம்மன் அவர்கள், B. A., B. L.

உலகத்தாரில் உண்மைப் பெரியோர்களால் சிறப்பாகவும் உலக மக்களால் பொதுவாகவும் புகழ்ந்து கொண்டாடப் பட்ட மகான் காந்தி யடிகள் பிரமாதமாக என்ன செய்து எல்லாருள்ளத்தையும் கவர்ந் திருக்கிறார் என்று ஆராயும் போது, என்னுடைய சிற்றறிவிற் கெட்டியவரை அவருடைய உருக்கமான (தேச) பக்தியால் அவர் பேராயுதங்களைப் படைத்த வல்லரசுகளை எதிர்த்து சத்தியத்தினைக் கருவியாகக் கொண்டு 'போர்' செய்வதாகும். அதைப் 'போர்' என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால், அந் நிகழ்ச்சி இதுவரை உலகில் நடந்து வந்த போர் நிகழ்ச்சியினின்றும் பெரிதும் மாறுபடுவதாம். அந் நிகழ்ச்சியில் குறிக்கோள் யாதென்றால் மனப்பான்மையை மாற்றலே யன்றி 'எதிரி யென்று யாருமில்லை,' 'கொல்லு மாசை யில்லை.' ஒருவன் மற்றவனது மனப்பான்மையை மாற்ற நினைத்தால், அம் மற்றவனைக் கொன்று விட்டால் மனம் மாறுதலடையுமோ? அல்ல. இனி, மனப்பான்மையை மாற்ற நினைப்பவன் மற்றவனிடம் அன்பு செலுத்துவதால் மாற்றலாமே யன்றி, பகை யுணர்ச்சி, வெறுப்பு, இகல் ஆகியவற்றால் மாற்ற முடியாது. அன்பு செலுத்துவதே மனப்பான்மையை மாற்றும் வழி யென்றும், அதுவே உண்மை என்றும் கண்டவன் அம் மற்றவனுடைய தீய வழிகளைத் தான் பற்றாமலும், அம் மற்றவ னிழைக்கும் கஷ்டங்களை யெல்லாம் பொறுத்துக் கொண்டு மிருப்பான். கஷ்டங்களைப் பொறுப்ப தென்பது, சுகத்தையும், சுகத்திற் கேதுவான உடல், பொருள், ஆவி ஆகியவைகளையும் தியாகஞ் செய்து அல்லது செய்யு முணர்ச்சியுடன் விளங்குவதாம். இப்படிப் பிறரிடம் அன்பு செலுத்தி அவர் மனப்பான்மையை மாற்ற வேண்டித் தம் சுகத்தைத் தள்ளித் தம் கஷ்டத்தைக் கொள்ளுவது யாவர்க்கு விருப்பு அல்லது எளிது என்றால், உருக்கமான பக்தி யுடையார்க்கே. காந்தி யடிகளை வாழ்வித்து, சிறப்புவித்து அணி செய்து வருவதும் அவராற்றும் அருஞ் செயல்களுக்கு அடிப்படைத் தத்துவமா யிலங்குவதும் இந்த உருக்கமான பக்தியே யாகும்.



தம்முருக்கமான பக்தியால் அவர் இந்திய மக்களின் இரத்தத்தில் வெகு காலந் தொட்டு ஊறி ஆனால் மறைந்து கிடந்த உண்மையான வீரத்தைத் தட்டிக் கிளப்பி, இந்திய மக்கள் 'சுதந்திர வாழ்வாகிய சுக வாழ்வை'ப் பெறவும், தற்காலப் பிற உலகத்தாரும் தாம் செந்நெறியில் திகழ இந்தியரின் வீரத்தை முன் மாதிரியாகக் கொள்ளவும் செய்ததே அவர் இந்தியாவிற்கும், உலகுக்கும் செய்த அரிய பெரிய தொண்டாகும். எப்படி யெனில், ஒரு உதாரணம்: தெளிந்த அறிவுள்ள ஒருவன் தன் முயற்சியால் பெற்ற பொருளாலேதான் பெரிதும் மகிழ்ச்சி யடைவான். என்றாலும், அப் பொருளைப் பெறத் தன்னிடத்துள்ள சக்தியைக் கைம்மாறின்றி தெளிவித்தவனுக்கு அல்லது அதை உண்டாக்கியவனுக்கு அவன் நன்றி செலுத்திப் போற்றுவான். பொருளைப் பெற அச் சக்தியை உண்டாக்கிய அச் செயலைத் தொண்டென்பதே பொருந்தும். அதே போல், இந்தியர் சுதந்திரமடைய வீரத்தை ஊட்டி, அடிமை யுணர்வு, கோழைத்தனம், தற் சுகம் பேணல் ஆகியவற்றை நீக்கி, அவரிடத்துள்ள உண்மைச் சக்தியைத் தட்டி யெழுப்பியதால் காந்தி யடிகளின் செயலைப் பெரிய தொண்டாகும் என்பதே தகுதி. தன் தேசத்தாரின் துன்பங்களைக் கண்டு கசிந்துருகி அவைகளைப் போக்கத் தான் வலியவே துன்பங்களுக்காளாகி, பொறுமையுடன் அவைகளைச் சகித்து வருகின்ற பக்தியே உருக்கமான தேச பக்தி யாகும். இதைத்தான் மேனாட்டில் நடந்த ஐரோப்பிய யுத்தத்தில் ஆங்கிலேய வீரரும் பிற பலரும் காட்டிப் புகழ் பெற்றார்கள். இதையே இன்னொரு சீரிய முறையில் காந்தி யடிகளும் காட்டி வருகிறார். நம் தேச பக்தியாகிய பயிருக்கு வீரம் அல்லது உருக்க மென்னும் நன்னீர் ஊட்டி செம்மையாக வளரச் செய்பவர் அவரேயாவர். உள்ளத்தில் உறைந்து கிடக்கும் தேச பக்தியைச்

செயல் என்னும் இராகத்தில் பாடி நாம் இன்பம் பெறச் செய்யும் இசைவல்லார் அவரே. தேச பக்தியாகிய நிறத்தைக் கொண்டு செயலென்னுங் கருவி தாங்கித் 'தேச க்ஷேமமாகிய' ஓவியத்தை வரையக் கற்பிக்கும் கலைஞன் அவரே. தேச பக்தியாகிய உருவற்ற கல்லிலே செயலாகிய உளி கொண்டு செதுக்கி, பொதுமக்களின்பத்திற்காகத் 'தொண்டு' என்னுஞ் சீரிய சிலையை நாம் நாட்ட நமக்குப் பாடஞ் சொல்லுஞ் சீரிய சிற்பி அவரே. நாமக்கல் திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை யென்பவர் ஒரு இயற்கைக் கவிஞர் மட்டுமன்று. அவர் ஓவியந் தீட்டுவதிலும் சமர்த்தர். காந்தி யடிகளின் இயக்கத்தைப் பற்றிக் கூறுகையில் அவர் "இது அரசியல் இயக்கமாக நடந்து வந்தாலும் உண்மையில் இது அரசியல் இயக்கம் அல்ல. உலகத்துக்கே உண்மையான மதம் இன்ன தென்று விளக்க வந்த ஓர் ஒப்பற்ற தெய்விக இயக்கம். ஆதலின் காந்தி யடிகளின் ஆன்ம இயக்கத்தின் ரகசியத்தை அறியக் கூடிய நுண்ணறிவுடைய எவரும் இதில் கலந்து கொள்ளத் தயங்கார்" என்று போற்றுகிறார். "காந்தி என்ற சாந்த மூர்த்தி தேர்ந்து காட்டும் செந்நெறி மாந்தருக்குள் தீமை குன்ற வாய்ந்த தெய்வ மார்க்கமே" என்று பாடி யிருக்கிறார். இனி இந்த 'ஆன்ம இயக்கத்தின் ரகசியம்' என்பது யாதென்று நான் ஆராய ஆராய, உருக்கமான பக்தி மேலீட்டால் ஒருவன் எவ் வுயிரையுந் தன்னுயிராகக் கொண்டு அல்லது 'எவ் வுயிரும் நீங்காது உறையும் இறை சிவம்' என்று தெளிந்து எப்போதும் உலக சேவை செய்து அன்பால் பிற வுயிர்களின் மேம்பாட்டிற் குழைப்பதையே தன் வாழ்க்கை நெறியாகவும் உயர்ந்த இன்பத் துறையாகவும் கொண்டு வாழ்வது என்று எனக்குத் தோன்றுகிறது.

ஆனால் ஒன்று. இயக்கத்தின் குறிக்கோள் சரியென்றாலும் அவரது சில முறைகள் முற்றுஞ் சரியல்ல வென்று உண்மையாக நினைந்து வருபவர்க ளிருக்கிறார்கள். உதாரணமாக, சட்டமறுப்பு என்பது சிலருக்குப் பிடிக்கவில்லை. அப்படிப்பட்டவர்களும் இவ் வியக்கத்தில் கலந்து வீரங் காட்டித் தியாகஞ் செய்து, உலகுக்குதவ அடிகள் முறைகள் காட்டி யிருக்கிறார். அம் முறைகளைச் சொல்லியும் சொல்லாமற் செய்து காட்டி யிருக்கிறார். அவைகளில் சொல்லாமற்



செய்து காட்டியதும், நாட்டின் உண்மையான நீடித்த மேம்பாட்டிற் கடிப்படையாக வுள்ளதும், இந்திய நாட்டில் தற்போது விரைவில் கைக்கொள்ள வேண்டியதும், கட்சிபேத மின்றி உருக்கமான தேச பக்தி, தெய்வ பக்தி யுடையவர்கள் செய்ய வேண்டியது மொன்றுண்டு. அதைப் பற்றித்தான் சுருக்கமாக இக் கட்டுரையில் விவரிக்க எண்ணுகிறேன். அது யாதெனின், கிராம புனருத்தாரணம் அல்லது கிராம முன்னேற்றம் என்பது.

காந்தி யடிகள் தமது ஆசிரமத்தி லிருந்து தண்டி என்ற இடத்திற்குப் போகும் வரை வழியில் கடந்து செல்ல வேண்டிய கிராமங்களில் அவரும் அவரது தொண்டர் குழாமும் செய்த வேலைகள் கிராம முன்னேற்றத்திற்கு முன் மாதிரி முறைகளாக உள்ளன. ஆகையால்தான் நான் இவ் வேலைகளை சொல்லாமற் செய்து காட்டிய முறைகள் என்றேன். தண்டி என்ற இடத்திற்கு இரயில் வழியாகச் சென்றிருந்தால் கஷ்டமின்றியும் விரைவிலும் சென்றிருப்பார். ஆனால் அவர் கால் நடையாகவே சென்று பல கஷ்டங்கள் பட்டு நூற்றுக் கணக்கான மைல்கள் கடந்து, இரயிலில் போவதைக் காட்டிலும் வெகு தாமதமாகச் சென்றார். அவருடைய தரைச் செலவைப் பற்றிப் பலர் பல விதமாகக் கூறுகிறார்கள். அத் தரைச் செலவு பல படிப்பினைகளையுந் தருகின்றன. அவைகளில் முக்கியமான தொன்று கிராம வேலை என்பதாகும்.

நமது நாட்டில் சுமார் ஏழு லட்சம் கிராமங்களுண்டு. ஜனத் தொகையில் பெரும்பான்மையோர் (நூற்றுக்கு 75 பேர்) கிராமத்தில் வசிப்பவர்கள். நமது நாட்டாரின் முக்கிய தொழில், நிலத்தை யுழுது பயிர் செய்து வாழும் வேளாண்மைத் தொழில். இத் தொழிலாளர் வாழ்வது கிராமங்களிலேயே. ஆகவே, நம்முடைய நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் கிராமங்கள் முன்னேற்றமடைய வேண்டிய தவசியம். ஆகவே, உருக்கமான தேச பக்தியுள்ளவர்கள் யாவரும் முக்கியமாகத் தங் கருத்துக்களைக் கிராமங்களின் மேற்செலுத்தி அங்கு சென்றுழைப்பதே சிறப்பும் அவசியமுமாக விருக்கிறது.

காந்தி யடிகள் செய்த வேலை ஒரு முன்மாதிரி என்றேன். எப்படி யெனில், அவர்தம் தொண்டர்களைச் சில பகுதிகளாகப் பிரித்தார்.

ஒரு பகுதி கூடைகளும் துடைப்பங்களும் கொண்டு கிராம வீதிகளைச் சுத்தம் செய்யும். இன்னொன்று கிராமத்தாரின் பொருளாதார நிலையைப் பற்றிய விபரங்களைத் தெரிந்து வரும். இப்படி ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு வேலை. மாலையில் இவர்கள் வந்து தலைவரிடம் தம் வேலைகள் முடிந்தமை பற்றி அல்லது முடிவுகளைப் பற்றிக் கூறுவர். சாயங்காலங்களில் கிராமத்தார்க்குப் பொது விஷயங்களைப் பற்றிய பிரசங்கங்கள் செய்தலுடன் எளிய வாழ்க்கையுடன் சுறுசுறுப்பாகத் தொண்டர்கள் தங் கடமைகளைச் செய்வார்கள். இவைகள் சில முக்கிய குறிப்புக்களே. இவைகளை முன் மாதிரிகளாகக் கொண்டு தேச சேவகர்கள் தம் முறைகளையும் துறைகளையும் வகுத்துக் கொள்ளலாம்.

கிராமங்களில் செய்ய வேண்டிய வேலைகள் பல வுள்ளன வெனினும் முக்கியமான சிலவற்றைக் குறிப்பித்து நம் தேச பக்தியை நடைமுறையில் தீவிரமாகப் பொலியச் செய்வதெப்படி என்று ஆராய்வோம்.

முதலாவது, கிராமம் சுத்தமான தோற்றத்தை அடைவதற்கேற்ற வேலை யாகும். கிராமப் பாதைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும், குப்பை முதலியவைகளைக் கொட்டத் தனி யிடங்களமைக்கவும், கால் நடைகளின் உரைவிடங்களுக்குத் தகுந்த இடங்களைத் தனியே ஒதுக்கி வைக்கவும், கிராமத்தின் நீர் வசதிகளுக்கேற்ற குளம், கிணறு ஆகியவைகளைச் சுத்தமாகக் காப்பாற்றவும் கிராமத்தாருக்கு எடுத்துரைத்துத் தொண்டர்களும் கைம்மாறு கருதாது ஒத்துழைப்பது முதல் வேலை.

இரண்டாவதாகக் கிராமத்துக் கைத் தொழில்கள் முன்னேற்றமடையும்படியான வேலை. நம் நாட்டு வறுமை யென்பது முக்கியமாக கிராம மக்களின் வறுமையே. அவ் வறுமையைப் போக்க நாட்டுத் தொழில்களைப் பொதுவாகவும், கிராமத் தொழில்களைச் சிறப்பாகவும் முன்னேற்றமடையச் செய்ய வேண்டும். காலத்திற் பெய்யக்கூடிய மழை பெய்யாக் காலங்களிலும், கோடை காலங்களிலும், கிராம மக்கள் தொழிலின்றி வாளா இருக்கின்றனர். அப்பேர்ப்பட்ட காலங்களில் அவர்கள் செய்வதற்கான கைத் தொழில்களைப் போதித்து அவை மேம்பாடடையச் செய்ய வேண்டும். அத் தொழின் முறைகளுள் நம் நாட்டிற் கேற்றதும், தற்போது விரைவில் வேண்டியதும், சொற்ப முதற் கொண்டும், சிறிது காலப் பயிற்சி பெற்றும், ஆண், பெண், பெரியோர், சிறுவர், சிறுமியர் ஆகிய யாவரும் கைக்கொள்ளத் தக்கதும், மக்களுக்கு முக்கியமான தேவைகளில் ஒன்றும் உடையைத் தயாரிப்பதுமான கத்தர் உற்பத்தி ஒன்றாகும்.



நம் நாட்டில் பருத்தி விளைவதிகம். ஆகையால் கத்தர் உற்பத்திக்கு வேண்டிய வசதிகள் நம் கிராமங்களில் உள்ளன. கத்தர் உற்பத்தி என்னும் போது அதற்கேற்ற இராட்டினங்கள், தறிகள் முதலியன செய்ய வேண்டு மாகையால் கிராமத்துத் தச்சர்களுக்கும் வேலை கிடைக்கும். இதை யொட்டி அவ் வூர் துணி வியாபாரமும் சீரடையும். துணிகளுக்கு வெளியூர்களை எதிர் பாராதபடி அவ்வவ்வூர் அதனதன் தேவைகளுக்கான சரக்கைத் தயாரிக்கும்படி செய்து விட்டால் கிராம மக்கள் அனைவரும் வேலை செய்ய நேரிடும். வேலை யில்லாத் திண்டாட்டமும், அதனால் வறுமையும் நீங்கும். மிகுதியாகத் தயாரிக்கும் சரக்கை நகரங்களுக் கனுப்பலாம். ஆகவே, தேச பக்தர்கள் கிராமங்களில் கையால் நூல் நூற்பதும், துணி நெய்வதுமான கத்தர் வேலை குடிகொள்ளும்படி கிராமந்தோறும் சென்றுழைக்க வேண்டும்.

மூன்றாவதாக, கிராமங்களில் கள் இறக்குதல், கள் குடித்தல் ஆகியவைகள் முழுதும் மறையும்படி பல வகைகளில் பிரசங்கங்கள் செய்தும், வீடு தோறும் பிரசாரம் செய்தும், பாடுபட்டுழைக்க வேண்டும். கட்குடி தொலைந்தால் உடல் நலம் மேம்படுவதோடு, கொலை, அடிதடி, குத்து, வெட்டு, சண்டை, சச்சரவு ஆகியவைகள் நீங்கி நல்லொழுக்கமான கிராம வாழ்விற்கு ஏதுவுண்டாகும்.

நான்காவதாக கிராமக் கல்வியைக் குறிக்கலாம். கிராமத்துச் சிறுவர் சிறுமிகளுக்குக் கல்வி கற்பிக்கப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவது கிராம வேலையில் முக்கியமான தொன்று. விசால புத்தி அல்லது பரந்த நோக்கங் கொண்டு பார்ப்பாராகில் படித்தும் வேலை யில்லாத பட்டதாரிகள் கிராமங்களில் வேலை பெறுவதோடு, நாட்டிற்குத் தொண்டு புரியுஞ் சந்தர்ப்பங்க ளிருப்பதையும் காண்பார்கள். உருக்கமான தேச பக்தியோடு ஒரு பி. ஏ. பட்டதாரி அல்லது படிப்பாளி ஒரு கிராமத்தில் சென்று பார்த்தால் ஆஹா! அவன் செய்ய வேண்டிய

வேலைகள் எத்தனையோ உள்ளன வென்பதை அறிவான். உதாரணமாக, அவன் அக் கிராமத்தாரிடம் கல்வியின் அவசியத்தையும், பெருமையையும் எடுத்து விளக்கி, அவ் ஊர் சிறுவர் சிறுமிகளுக்கு ஒரு பள்ளிக்கூடம் வைத்து நடத்தலாம். மாலை அல்லது இரவுகளில் படிக்காத வயது சென்றவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கலாம். அவ்வப்போது பிரசங்கங்கள் நடத்தி, நாட்டுக் காவிய அழகுகளைப் பற்றியும், பெருமைகளைப் பற்றியும், நாட்டு வியாபாரம், கைத்தொழில் விருத்தி, தொழிலில் துணிவு, பயிர் விளைவு மேம்பாடடையும் முறைகள் ஆகியவைகளைப் பற்றி எடுத்துரைக்கலாம். வைத்தியப் பட்டதாரிகளுக்குக் கிராமங்களில் இன்னும் அதிகமாகத் தொண்டு செய்யுஞ் சந்தர்ப்பங்கள் உள்ளன. கிராமச் சுகாதாரம், தூய உடை, தூய உணவு, தூய நீர், தூய சுற்றுப்புறம், உடல் வளர்ப்பு, பிள்ளைகளைப் பேணல் ஆகியவைகளைப் பற்றி எடுத்துரைத்தும் கிராமத்தார் நோய்களைச் சிகிச்சை செய்ய வைத்தியசாலைகள் வைத்து நடத்தியும் தொண்டு செய்து வாழலாம்.

கிராமங்களில் வாசகசாலைகள் அல்லது நூல் நிலையங்களை நிறுவி, கிராமத்தாரின் அறிவு வளர்ச்சிக் குழைத்தலும், கிராமத்தார் தம் சச்சரவுகளைப் பஞ்சாயத்தார் மூலமாகத் தீர்த்துக் கொண்டு, கோர்ட்டுகளுக்குப் போய்ப் பணத்தை நாசமாக்காது, சமாதான முறையில் கூடியவரைத் தம் வழக்குகளைத் தீர்த்துக் கொள்ளும்படி அறிவாளிகள் உழைப்பதும் பெரிய சேவையாகும்.

கிராமத்தில் ஒரு அச்சு யந்திரசாலை வைத்து, கிராமத்தாரின் கல்வி, அறிவு, ஒழுக்க வளர்ச்சிக்கேற்பப் பத்திரிகை நடத்துவதும் ஒரு பெருந் தொண்டாகும்.

கிராமத் தொழில்கள் முன்னேற்றமடையச் சிறு சிறு பொருட்காட்சிகள் நடத்துவதும் காலத்திற்கேற்ற தொண்டே யாகும்.

இவ்விதமாக எத்தனையோ தொண்டுகளுள்ளன. ஆனால் தற்போது வேண்டியது அவைகளை ஆற்றுவதற்கு ஆவல். அதாவது, பொது ஜனங்களின் க்ஷேமத்திற்காகத் தனக்குத் தோன்றிய ஏதோ ஒரு சீரிய முறையில் பின்தாங்காமல் தளர்ச்சியடையாமலும் நான்



கவி. ஸ்ரீ ரவீந்திர நாத தாகூர் கூறுவது போல் அறிவுள்ளவர்களுக்குத் தன் தேச மென்பது ஒரு எண்ணம் அல்லது கொள்கையே. சைவ நூல்களும் தேசத்தைச் சிவமாகவே கூறுகின்றன. அது போல, காந்தி யடிகளுக்கும் தன் தேச பக்தியே தெய்வ பக்தி தேச சேவையே தெய்வப் பணி. உதாரணமாக, அவர் தற்போது நாட்டின் ஏழைகளுக்குச் சிறிதாயினும் க்ஷேமத்தைத் தரும் நூல் நூற்றலைப் போற்றி விரதமாகக் கொண்டிருக்கிறார். "நூல் நூற்றலே என் காயத்ரி" என்று கூறுவதினின்றும் அவர் மனதில் நிகழும் நுண் பொருளை ஆராய்ந்தால், ஒருவன் தன் மோக்ஷத்தைப் பெற எப்படி காயத்ரி ஜெபிக்கிறானோ, அதே போல் தன் தேசத்தார் தரித்திரம் நீங்கி விடுதலையாகிய க்ஷேமத்தைக் கொண்டு வரும் இந் நூற்றல் தொழிலைத் தான் செய்வதாக உணர்த்துகிறார் என்பது விளங்கும். பல விதங்களில் கஷ்டப்படும் தாய் நாட்டு மக்களுக்குழைத்து வாழ்வதே சிறப் பென்பதையே கவி சுப்ரமண்ய பாரதியாரும்—

வந்தே மாதரம் என்று வணங்கியபின்
மாயத்தை வணங்குவரோ
வந்தே மாதரம் ஒன்றே தாரகம்
என்பதை மறப்பாரோ?

என்று தன் வீர பக்தி கொண்டு நாட்டைப் போற்றுவதே தாரக மந்திரம் என்று பாடியிருக்கிறார்.

ஆகையால், நம் தேச பக்திக்கு வீரம் ஏற்றி, அஞ்சாமை, சோர்வு ஆகியவைகளை நீக்கி, 'என்னாலென்ன ஆகப்போகிறது' என்ற தளர்ச்சியான எண்ணத்தை மனதினின்றும் முறித்தெறிந்து விட்டு, கிராம முன்னேற்றத்திற்காக உழைக்க முற்பட வேண்டும். தம்மால் என்ன தியாகம் செய்ய முடியுமோ அது செய்து ஒரு கிராமத்திலாயினும் துன்பந் துலைந்து இன்பம் வளர்வதற்கான வேலைகளை ஒவ்வொரு தேச பக்தரும் செய்யத் துவங்க வேண்டும். பாரதியார் பாடுவது போல் 'நிதி மிகுந்தவர் பொற்குவை தாராம்,' 'நிதி குறைந்தவர் காசுகள் தாராம்,' 'அதுவுமற்றவர் வாய்ச் சொல் அருளலாம்,' 'ஆண்மையாளர் உழைப்பைத் தாராம்,' 'எதுவும் நல்கி

இதைச் செய்து முடிப்பேன் என்று உறுதியும் அவ் வேலையில் ஆசையுமே தற்போது வேண்டியன. உயிர்களிடத்தில் எல்லாம் ஆண்டவனுடைய பிரசன்னத்தை உணர்பவன்தான் அறிவுள்ளவன். அவன்தான் மகாத்மா என்று ஸ்ரீ பகவத் கீதையும் கூறுகிறது. கஷ்டப்படும் தரித்திர மக்களுக்குச் செய்யும் தொண்டே தரித்திரநாராயண சேவை. உழைத்து வாழும் காந்தியடிகளை மகாத்மா என்றால் பெரிதும் பொருத்தமானதே யன்றோ? அவர் ஓர் உண்மை வைஷ்ணவர். ஏனெனில் "பிறர் துன்பத்தைத் தனதென்று கருதுபவனே உண்மை வைஷ்ணவன்" என்று ஒரு கவி பாடுவது அவரிடம் பொருத்தமாக அமைந்திருக்கிறது. ஆண்டவனிடம் பக்தியென்பது அவன் விசேஷமா யுறையும் உயிர்களிடத்துப் பூணும் பக்தியே. உருக்கமான பக்தி யுள்ளவன்தான் ஆண்டவன் சேவையை விரும்பிச் செய்வான். அதேபோல், உயிர்களிடத்து—பொது மக்களிடத்து—பசி, நோய், வறுமை, மடமை ஆகியவைகளில் சிக்கித் தவிக்கும் மாந்தரிடத்து உருக்கமான அன்பு அல்லது பக்தி பூண்டவன் பொதுஜன சேவையையே ஆசித்து அல்லும் பகலு மதிலேயே உழைக்க அடங்காத ஆர்வங் கொள்வான். "கனவிலுங்கூட அன்னத்திற்குத் தவிக்கும் வேலையில்லா ஒரிஸ்ஸா மக்கள் தோற்றம் வருகிறது" என்று காந்தியடிகள் கூறுவதினின்று அவருடைய அதி தீவிர தேச பக்தியை ஊகித்தொருவாறு அறியலாம்.

பொது ஜன சேவையைப் பற்றி நாம் அறிந்திருந்தாலும் உருக்கமாகவும், ஊக்கமாகவும் காலத்திற் கேற்றபடியும் செய்ய மேனாட்டாரிடம் பாடங் கற்க வேண்டி யிருக்கிறது. சில நாட்களுக்கு முன் இங்கிலாந்தில் ஒருவர் ஒரு வாசகசாலைக்காக ஒரு லக்ஷம் பவுனையும், தன்னிடத்திருந்த விலை யுயர்ந்த புத்தகங்களையும் இலவசமாக வழங்கினார். ஆகவே, நாம் பொருள், கல்வி, உடல் பலம், உடல் ஓய்வு, உடல் சௌக்கியம், உடல் சௌகரியம் ஆகிய எவை நாடிச் சென்றாலும், மனதில் மாத்திரம் ஒரு எண்ணத்தைப் பதிய வைத்துக் கொண்டு சென்றால் நமக்கு இறைவனருளால் நாம் நாடியவைகளை நன்றாகப் பெறுவதோடு, பெற்றும் உபயோகித் தநுபவிக்கும் பாக்கியம் கிடைக்கும். அந்த எண்ணம் உருக்கமான பக்தியால் உண்டா



வது. அந்த எண்ணம்தான் மனிதனை மனிதனாக்குவது. அதாவது விலங்கைவிட உயர்ந்தவனாக்குவது. அதுதான் இறைவனுடைய திருவுள்ளக் குறிப்பை அவன் அறிந்து செய்வதைக் காட்டுவது. தனக்கு நேரும் இடுக்கண், இன்னல், இடும்பை, இடைஞ்சல் ஆகியவைகளிலும் மனந் தளராது கொழுக் கொம்புபோல் அவனைத் தாங்கி நிற்பது அவ் வெண்ணந்தான். அதுவே மனிதனுக்குப் பேரும் புகழும் பெறுவிப்பது. அவ் வெண்ணம் யாதெனின், "நான் மனிதப் பிறவி தாங்கி யிருக்கிறேன். அன்பே உண்மை. அன்பு காட்டுவதை விட வேறோர் உயர்வு இல்லை. ஆகையால் நான், என்னாலானவாறு என் தேசத்துத் துன்பங்களைத் தொலைக்கவும், இன்பத்தைப் பெருக்கவும் உழைத்து உழைத்து உழைத்து உயிர் விடுவேன்" என்பதே தேசத்தினிடம் நாம் வைக்கும் பக்தி இருக்க வேண்டும். அது நம்முள் கொழுந்து விட்டெறிய வேண்டும். தேச சேவைக்கே நாம் அடங்காக் காதல் கொள்ள வேண்டும். தேச சேவை செய்ய வேண்டுமென்ற தாகமும் பசியுமோ நம்மை வாட்டி அலைக்க வேண்டும். தன் பிராணன் போகும் போது "ஆ! ஆ! என் தேசத்தை இந் நிலையில் விட்டுப் போகிறேனே!" என்று கேட்டார் கண்டார் மனமுருக வுருகப் பிரலாபித்த தேசபந்து சித்தரஞ்சன தாஸரது போன்ற உணர்ச்சியும் தியாக புத்தியுமே நம்முள் குடிகொள்ள வேண்டும். மணிவாசகப் பெருமான் ஆண்டவனை நோக்கி அடங்காக் காதல் கொண்டு,

> "சிந்தனை நின்றனக் காக்கி, நாயினேன்றன்
> கண்ணிணை நின்றிருப்பாதப் போதுக்காக்கி,
> வந்தனையு ம்மலர்க்கே யாக்கி, வாக்குன்,
> மணி வார்த்தைக் காக்கி,"

என்று பாடியது போல, நாம் தற்போது இந்தியாவுள்ள நிலைமையில், தளர்விலாத நம் சிந்தனையைத் தாய் நாட்டின் மேல் செலுத்துவதும், கண்களை நாட்டு நிலையைக் காணச் செய்வதும் நம் வாக்கைத் தேச விடுதலைக்கான பேச்சுகளைப் பேசவும், உடலைத் தேச சேவையி லீடுபடுத்துவதுமே நம் கடமை. உணர்ச்சி யுள்ளவர்கள் அதைக் கடமையாகக் கொள்ளாது உரிமையாகவும் ஒப்பற்ற பாக்கியமாகவுமே கருதுவார்கள்.

யிங்கு எவ்வகையாலும் இப் பெருந் தொழில் நாட்டுவம்.' அவரே இன்னோரிடத்தில் கூறுவது போல், இத் தொண்டு செய்வதற்கும் வேண்டிய 'நீண்ட வயது, நோயில்லாமை, அறிவு, செல்வம் என்ற நான்கும் தரும்படித் தத்தம் குல தெய்வங்களை மன்றாடிக் கேட்க வேண்டும்.' தேச க்ஷேமத்திலே பொலியும் தெய்வ ஒளியைக் கண்டு மகிழ வேண்டும். அப்போதுதான் நாம் மனிதப் பிறப்பெடுத்த பலனையும், மகான்கள், தபசிகள், ரிஷிகள், மகாத்மா காந்தி முதலிய பெரியோர் அவதரித்த புண்ய தேசமாகிய இந்தியா தேசத்தில் பிறந்தோம் என்ற உண்மைப் பெருமையையும் அடைவோம். இல்லையேல், வெறும் இரும்பும், நிலக்கரியும் மாத்திரம் கிடைக்கும் நாட்டில் உதித்து அவற்றைவிடக் கடின—கரிய (அதர்மமான அநீதியான) எண்ணங்களைக் கொண்டு பிறரை வஞ்சித்துக் கொள்ளை யடித்து வயிறு வளர்க்கும் 'மக்கள்' என்று திரியும் மக்களைவிடக் கேவலமானவர்களே யாவோம். 'இந்தியா' என்றால் 'அஹிம்சை' அல்லது 'கொல்லாமை' அதாவது 'அன்பு' என்று உலகுக்குக் காட்டுவதே காந்தி யடிகளின் இயக்கத்தின் குறி. இக் குறி யடைய நம்மாலான பணியை நாமும் செய்வோம். இந்தியாவில் பிறந்தவர் யாவருடைய கடனும் இப் 'பணி செய் கிடப்பதே.' இப் பணி செய்யும் தேச பக்தர்களே தற்போது நாம் போற்றக்கூடிய ஆண்டவ னடியார்கள் என்பதை முன்னமேயே நவீன தமிழ்க் கவி யரசாகிய பாரதியார் பாடியிருக்கிறார். அப் பாட்டு வருமாறு:

"முன்னாளில் இராம பிரான் கோதமன்
ஆதியபுதல்வர் முறையினின்று
பன்னாடு முடிவணங்கத் தலைமை நிறுத்
தியஎமது பாதகண்டம்
இன்னாள் இங்கு இந்நாளின் முதியோளாய்ப்
பிறர்எள்ள வீழ்ந்தகாலை
அன்னாளைத் துயர்தவிர்ப்பான் முயல்வர் சில
மக்கள்அவரடிகள் சூழ்வாம்."

"தேசமே தெய்வம், தேச பக்தியே தெய்வ பக்தி, தேச சேவையே தெய்வப் பணி, தேச சேவகர்களே உண்மை அடியார்கள், தேச விடுதலையே மோக்ஷம்."—இதுவே தற்போது நடை முறையில் இந்தியர் கொள்ள வேண்டிய சீரிய சமயம். காந்தீயத்தின் உட்கிடக்கையுமிஃதே.

---

# ராணி சம்யுக்த்தையின் தேச பக்தி.

திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.

இந்தியா சுயராஜ்யப் போராட்டத்தில் தலையிட்டிருக்கும்போது அதன் ஸ்திரீ புருஷர்கள் இருவரும் சேர்ந்து மனமொத்து ஒரே நோக்கத்துடன் தேச கைங்கரியம் செய்தால்தான் சுயராஜ்யம் சித்தித்து நிலை நிறுத்தப்படுமென்று மகாத்மா கூறியிருப்பதை ஒவ்வொரு சகோதர சகோதரியும் கவனிக்க வேண்டியவராவர். இக் காலத்தில் புருஷர்கள்தான் தேச பக்தி மேலிட்டுத் தைரியவான்களாய் தேச சேவை செய்து வருகிறார்க ளென்றும், ஸ்திரீகள் இருந்த இடத்தை விட்டு நகராமல், தேசிய முறையில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளாமல் புருஷர்களுக்கு முட்டுக் கட்டைகளாக விருக்கிறார்க ளென்றும் எங்கும் சொல்லப்பட்டு வருகின்றன. இவ்வாறு பொதுவாக சொல்லப்படுவதற்குத் தகுந்த ஆதாரமில்லை யென்றே நம்புகிறேன். நம் ஸ்திரீகள் புருஷர்களைப் போல வெளியில் வராமலிருப்பதனால், அவர்களுடைய ஊக்கம் உற்சாகம் தைரியம் முதலிய நற் குணங்கள் புருஷர்களைக் காட்டிலும் குறைவென்று சொல்லிவிட முடியாது. இப்போதுள்ள சுயராஜ்யப் போராட்டத்தில் ஸ்திரீகளே வீட்டிலிருந்துகொண்டும் வெளி வந்தும் அதிகமாகப் புருஷர்களுக்கு ஊக்கமும் தைரியமும் கொடுத்து வருகிறார்களென்று நான் தைரியமாகச் சொல்ல முடியும். இந்திய வீரத் தாய்மார்கள் இதற்கு முன்னர் இந்திய தேச சரித்திரத்தில் எவ்வாறு விளங்கி யிருந்தார்க ளென்பதையும், அவர்கள் புருஷர்களுக்கு உயிர்த் துணையாக நின்று உயிரைக் கொடுத்து உதவி செய்திருக்கிறார்க ளென்பதையும், நம் சகோதர ஸ்திரீகளின் கவனத்திற்குக் கொண்டுவர எவ்வளவோ வீரத் தாய்மார்களின் சரித்திரங்க ளிருக்கின்றன. அவைகளில் ராணி சம்யுக்த்தையின் தேச பக்தியை இங்கு எழுதுகின்றேன்.

பதினோராவது நூற்றாண்டில் ஜயசந்திரன் என்னுமோர் அரசன் கானோஜ் நகரத்தைப் பிரதான பட்டணமாகக் கொண்டு அயோத்தியின் ஒரு பாகத்தை யாண்டு வந்தான். அக் காலத்தில் டெல்லியில் மகா பலிஷ்டனான பிருதிவி என்பவன் பல சிற்றரசர்கள் கப்பம் கட்ட அரசாட்சி செய்துவரும் நாளில் கானோஜ் அரசனான ஜய சந்திரன் தன் பெண் சம்யுக்தைக்கு விவாகம் செய்ய, அக் காலத்தில் ராஜ வம்ச சம்பிரதாயப்படி சுயம்வரம் மண்டபமொன்றை நிர்மாணித்தான். சம்யுக்தை ஈடில்லாத குணமுடையவ ளானதாலும், மகா குணசீலி யானதாலும் சுருக்கமாகக் கூறுமிடத்துச் சந்திரனுக்கு ஒப்பான அழகும் மென்மையுமுடையவ ளாதலாலும், எல்லா அரசர்களும், பிரபுக்களும் சுயம்வர மண்டபத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள். வந்திருந்தோர்களில் ஒவ்வொரு அரசனும் தான் சம்யுக்தையின் புருடனாக ஆகவேண்டுமென்றும் அக் கட்டழகியைக் கைப்பற்ற வேண்டுமென்றும், சதா தியான முடையவர்களாய் சபா மண்டபத்தில் உட்கார்ந்திருந்தார்கள். போட்டி போட்டுக்கொண்டு ஒவ்வொருவரும் தம்மை அலங்கரித்துக் கொண்டிருந்தார்க ளென்றே கூறலாம். இவ்வளவு பெரிய அரசர்கள் கூடிய மகா சபையில் எல்லா தேசத்து அரசர்களும் வீற்றிருக்க டெல்லி அரசனான பிருதிவி ராஜன் மாத்திரம் காணாததைப் பார்த்து ஒவ்வொருவரும், திகைத்து ஆச்சரியப்பட்டு காரணம் யாதாக விருக்குமோ வென்ற யோசனை யுடையவர்களாயிருந்தார்கள். ஏற்கெனவே ஜய சந்திரனுக்கும் பிருதிவி ராஜனுக்கும் விரோதபாவ மிருந்ததால், பிருதிவி ராஜன் சுயம்வர மண்டபத்திற்கு விஜயம் செய்யவில்லை யென்பதை எல்லா அரசர்களும் பின்னர் அறிந்துகொண்டார்கள். பிருதிவி ராஜன் வராததால், தான் அவமான மடைந்ததாகக் கருதி ஜய சந்திரன் பிருதிவி ராஜனைப்போல் ஓர் உருவம் செய்யச்சொல்லி அதைத் தன் சுயம்வர மண்டபத்தின் வாயிலில் நிற்கவைத்து வெளியே போகிறவர்களும், உள்ளே வருகிறவர்களும் பார்த்துச் சிரிக்கும்படியாக அவ்வளவு தூரம் கோபத்தைச் செய்கையில் காண்பித்துவிட்டான்.

பின்னர் குறிப்பிட்ட நேரத்தில் ஜய சந்திரன் தன் பெண்ணை அந்தப்புரத்தினின்றும் வரவழைத்துச் சுயம்வர மண்டபத்தில் வீற்றிருக்கிற அரசர்களில் தனக்குப் பிரியமுடைய ஒருவரைக் கண்டு அவருக்குப் பூமாலை போடும்படி ஆக்ஞாபித்தான்.



முன்னமே பிருதிவி ராஜன்மீது காதல் கொண்டிருந்த சம்யுக்தைத் தன் தோழிமார்கள் சூழ சபா மண்டபம் வந்து நின்றவுடன் தகப்பனார் உத்தரவு கொடுத்ததுதான் தாமதம்; உடனே புன் சிரிப்புடன் சம்யுக்தை மண்டபத்திற்குள் நுழைந்து, நேரே வாயில் காப்போனாக உருவம் செய்து நிற்க வைத்திருக்கும் பிருதிவி ராஜனுடைய உருவத்தின் கழுத்தில் மாலையைப் போட்டுத் திரும்பினாள். சம்யுக்தை எவ்வளவு வேகமாகவும், சந்தோஷமாகவும் பிருதிவி ராஜன் உருவத்தின் மீது மாலை போட்டுத் திரும்பினாளோ, அவ்வளவுக்கு அதிகமான கன வேகமாகவும், கடினமாகவும், கோபமாகவும் ஜய சந்திரன் வேலை யாட்களைக் கூப்பிட்டு "இவளைச் சிறையிற் கொண்டுபோய் அடைத்து விடுங்கள்" என்று உத்தரவு இட்டுவிட்டான். ஐயோ! பாவம் என்ன செய்வாள் சம்யுக்தை. அவள் தன் உண்மையான தெரிந்தெடுத்துக் கொள்ளும் உரிமையை இழந்துவிட்டாள்; சபா மண்டபத்தி விருந்தவர்க ளெல்லோரும் ஏக்கமடைந்தவர்க ளாயும், சம்யுக்தையைச் சிறைக்கு அனுப்பியது நியாயமென்று சொல்லிக் கொண்டவர்களாயும், சிலர் ஐயோ பாவம்! சம்யுக்தை இஷ்டத்தைத் தடுத்தது அநியாயமென்று சொல்லிக் கொண்டவர்களாயும், வெளியே யெழுந்து போய் விட்டார்கள்.

இச் செய்தி டெல்லிக்கு எட்டியவுடன் பிருதிவி ராஜன் மகா கோபாவேசனாய், தன்னை ஜயசந்திரன் அவமானம் செய்ததையும் கவனியாமல், சம்யுக்தையைச் சிறையினின்றும் மீட்கப் புறப்பட்டான். ஜயசந்திரனும் பிருதிவி ராஜனும் முட்டிக்கொண்டார்கள். ஜயசந்திரன் தோல்வி யடைந்து சரணாகதி யடைந்தான். பிருதிவி ராஜன் சம்யுக்தையைச் சிறையினின்றும் அழைத்துக் கொண்டு போய் டெல்லியில் மகா சிறப்பாக விவாகம் செய்து கொண்டான்.

ஜயசந்திரன் தான் தோல்வியடைந்ததையும், தன் பெண்ணைப் பிருதிவி ராஜன் கொண்டு போய் விட்டதையும் உணர்ந்து மனம் பொறாமல், பிருதிவி ராஜன் மீது பழிக்குப் பழி வாங்குவதாகத் தீர்மானித்தான். இச்சமயத்தில் பயங்கரச் செயல்களைச் செய்யும் திறமையுள்ள முகமத் கோரி இந்தியாவின் மீது படையெடுத்து, அநேக கொடிய காரியங்களைச் செய்து வருவதைக் கேட்ட டெல்லி

அரசனுன பிருதிவி ராஜன் பல அரசர்களின் உதவியால் திரட்டப்பெற்ற பெரிய சேனைகளுடன் முகமத் கோரியை எதிர்த்து அவனை விரட்டியடித்தான். இச் செய்தியைக் கேட்ட ஜயசந்திரன் பிருதிவி ராஜன் தோல்வி யடைய வில்லையே யென்று ஆத்திரமும் வஞ்சகமும் உடையவனுய் முகமத் கோரிக்குக் கடித மெழுதினுன். அதில் இந்தியாமீது மறுபடியும் படையெடுத்து வரவேண்டு மென்றும், தான் அவனுக்கு எல்லா உதவிகளும் செய்வதாகவும் குறிப்பிட்டிருந்தான். இது தான் நல்ல சமயமென்று முகமத்கோரி மீண்டும் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தான். அப்போது ஜயசந்திரனுடைய புத்திரியும் பிருதிவி ராஜனின் மனைவியுமான சம்புக்த்தைக்கும் ஜயசந்திரனுக்கும் பின்வருமாறு சம்பாஷணை நிகழ்ந்தது:—

சம்யுக்த்தை, பிதாவை நமஸ்கரித்து நின்ருள்.

ஜயசந்திரன்:-தன் பெண்ணெனத் தெரிந்துக் கொண்டு, உன் கோரிக்கை என்ன? என்ருன்.

சம்புக்த்தை:-ஓர் அரசன் மீதுள்ள துவேஷத்தால், தாங்கள் இந்தியா தேசத்திற்கே தீமை விளையும் படியான காரியத்தைச் செய்யக்கூடாதென்பதே என் கோரிக்கை.

ஜயசந்திரன்:-உனது கோரிக்கைக்கு இணங்க முடியாது; எனக்குப் புத்தி சொல்ல வராதே! இதை விட்டுச் செல். உன்னை நான் பார்க்கவும் விரும்பவில்லை.

சம்:- கோபத்தில் ஒரு காரியம் செய்துவிடலாம். பிறகு அதன் தீய பலனை நீங்களே அறிந்து வருந்துவீர்கள்.

ஜய:- என் கோபத்தை அதிகமாக்காதே! இக் கோபத்திற்கும் என் துன்பத்திற்கும் முக்கிய காரணம் நீயே.

சம்:- யார் காரணரா யிருந்தாலும் தேசத் துரோகமான காரியத்தைச் செய்யக் கூடாது. பிறகு நீர் பல பாவங்களுக் குள்ளாவீர்.



ஜய:- அந்தப் பிருதிவி ராஜனைப் பழி வாங்காதிருக்கும் வரையும் எனக்குத் தூக்கமும் வராது, கோபமும் தணியாது என்பதை அறிந்துகொள். அதனுல் என்ன வந்தாலும் வரட்டும். எது போனுலும் போகட்டும். யார் அழிந்தாலும் அழியட்டும்.

சம்:- முன்னேர்கள் சம்பாதித்து வைத்துள்ள கீர்த்தியைப் பாழாக்கி, உங்கள் அபகீர்த்தியைப் பிரபல்யப் படுத்துவதற்குள் உங்கள் புத்திரியாகிய என்னை முதன்முதலாக வெட்டி விடுங்கள்.

தேசத் துரோகிக்கு நான் புத்திரியாகப் பிறந்தேனே யென்று துக்கிக்கிறேன். பிதாவே! நீர் க்ஷத்திரியரல்லர்—க்ஷத்திரியரா யிருந்தால் தேசத் துரோகமான காரியம் செய்யமாட்டீர். இனி என் பிரார்த்தனைக ளெல்லாம் வீணுயின வென்று நான் நினைத்துக் கொள்வதா?


இச் சொற்களைக் கேட்ட பின் ஜயசந்திரன் வெறி பிடித்தவனுய் பிருதிவிராஜன் மீதுள்ள பகைமையால் வாய் பேசாமல் அசையாத மரம்போ லிருந்தான். சம்யுக்த்தை இதோ நான் போகிறேனென்று சொல்லிக் கொண்டு, அவ் விடத்தை விட்டகன்று தன் புருஷனிடம் வந்து சேர்ந்தாள். அங்கு சம்யுக்த்தைக்கும் பிருதிவி ராஜனுக்கும் நடந்த சம்பாஷணையாவது:

சம்:- நாதா! எல்லாம் வல்ல இறைவனிருக்கும் போது நாம் ஏன் கவலைப்பட வேண்டும். அவரது சம்மதம்போல் நடக்கட்டும்.

பிரு:- குணவதி! நீ கூறியதுண்மை. இப் புண்ய பூமியில் பிறந்தவனுகிய நான் எதற்கும் கவலைப்பட வில்லை. கடைசி வரையில் கடவுளை நம்பிப் போர் புரிந்து இறப்பேனே யொழிய, முன் வைத்தக் காலைப் பின் வைக்க மாட்டேன். தேசத் துரோகமான காரியமும் செய்ய மாட்டேன். உண்மையான வழியில் சென்று உண்மையான தைரியத்துடன் காரியம் செய்வேன் என்பதை அறிந்துகொள்.

சம்:- நாதா! தங்களுடைய உண்மையான தைரியத்தை. நான் பல முறை பார்த்திருக்கிறேன். எனினும், இந்திய ஸ்திரீயாகிய

நான்-தங்களுடைய பத்தினியாகிய யான்-இப்போது கூறுவனவற்றைக் கேளுங்கள். மனிதர்கள் ஒரு காரியத்தில் இறங்கி விட்டால் அதைத் திருப்திகரமாக முடிக்கும் வரையும் முன் வைத்த காலைப் பின் வாங்காது அதைச் செய்து முடிக்க வேண்டும். தாங்களோ க்ஷத்திரியர். தங்களுடைய சேனையிலுள்ளவர்களும் க்ஷத்திரியர்களாகவே யிருக்கிறார்கள். இப்போது நீங்கள் செய்யப்போகும் யுத்தம் தரும யுத்தமாகும். இந்த யுத்தத்தில் சண்டை போடப் புறப்படுகிறவர்களில், சத்துருவைக் கண்டு முதுகு காட்டி ஓடி வருகிறவர்களாய் யாரேனு மிருந்தால் அவர்களை இங்கு வைத்து விட்டுத் தைரியமுள்ளவர்களை மாத்திரம் தாங்கள் பின்னே கூட்டிக் கொண்டு போங்கள். ஓடிவந்து விடுவோர் வீரர்களல்லர்; புருஷர்களுமல்லர்; அவர்கள் தங்கள் தங்கள் மனைவிகளின் புடவைகளைக் கட்டிக் கொண்டு மஞ்சள் பூசி குளிக்கத் தயாரா யிருக்க வேண்டு மென்று கூறிவிடுங்கள். புருஷர்களாகிய உங்களால் முடியாவிட்டால் ஸ்திரீகளாகிய நாங்களே சத்துருவை எதிர்க்கப் போகிறோ மென்றாள். பிருதிவி ராஜன் இவ் வசனங்களைக் கேட்டுக் கொஞ்சம் ரோஷத்துடன், வீரமணியே! நீ எதிர் பார்ப்பது போல் ஒன்றும் சம்பவியாது. நாங்கள் வெற்றி பெற்றே வருவோம். இல்லையேல் யுத்த களத்திலேயே மரிப்போம். என்பதை அறிந்து கொள்ளென்று தைரியம் கூறிவிட்டு, யுத்த களம் சென்றான். சம்யுக்த்தை புருடனுடைய வெற்றியை எதிர்பார்த் திருந்தாள். ஆனால், அதற்கு எதிர்மாறாக பிருதிவிராஜன் தோற்றுப் போன விஷயம் காதுக் கெட்டியதும் சம்யுக்த்தை மற்ற ராஜபுத்ர ஸ்திரீகளுடன் டெல்லியில் அக்கினி குண்டம் வளர்த்து அதில் பிரவேசமாகி சுவர்க்க லோகம் ஏகினாள். முகமது கோரி, டெல்லி வந்து பார்த்ததும் எல்லாம் சாம்பலாகி யிருந்ததைக் கண்ணுற்று, மனம் ஏங்கினான். என்றாலும், சம்யுக்த்தையின் தைரியத்தையும் தேச பக்தியையும் கொண்டாடினான்.



பண்டிதை அசலாம்பிகை அம்மையார்.

# எனது ஜீவியக் குறிப்புகள்.

## பண்டிதை. ஸ்ரீமதி. அசலாம்பிகை அம்மாள் அவர்கள்

1. இங்கிலீஷ் 1875 ஸு ஜூலைமீ 16உக்குச் சரியான யுவ ஸு ஆடிமீ 3உ சனிக்கிழமை இரவு நாழிகை 7¾-க்கு மணி 9 நிமிஷம் 6-க்கு ஜனித்தேன்.

2. தென்னாற்காடு ஜில்லா திருக்கோவிலூர் தாலூகா கஸ்பா போலீஸ் இன்ஸ்பெக்டரா யிருந்த பெருமாளய்யர் என்பவருக்கு இரண்டாவது மகளாக கோவல் வீரட்டேச்வரர் கோவிலிற் கருகில் பிறந்தேன்.

3. 8-வது வயதில் விவாகம்; 11-வது வயதில் விவாக பந்தம் தவிர்ந்தது; 11-வது வயதிற்குள் விழுப்புரம் கவர்ன்மெண்டு பெண் பாடசாலையில் அக் காலத்தில் இருந்த முறைப்படி 5-வது வகுப்பில் தேறியும் ஆங்கிலம் நீங்கிய லோயர் ஸெகிண்டரி பரீக்ஷையில் தனிமையிற் படித்துத் தேறினேன்.

4. அதன் பின் பள்ளியை விடுத்து வீட்டிலேயே தந்தை விருப்பப்படி தமிழில் உள்ள இதிகாச புராணங்கள் பக்த சரித்திரங்கள் படித் துணர்ந்தேன்.

5. விடோஸ் காலர்ஷிப்பு பெற்று ஸ்திரீ உபாத்தியாயினியாக வரும்படி அக் காலம் பெண்கள் பாடசாலைத் தலைவியா யிருந்த Miss. பிராண்டர் துரை மகளார் ஆலோசனை கூறி வற்புறுத்தியும் தந்தை இந்தியப் பெண்கள் மத சம்பந்தமான கல்வியை வளர்த்துச் சுயேச்சையாக விருந்து ஒழுக்கத்தைப் பாதுகாப்பது சிறப்பே யன்றி, பொருள் வருவாயை முன்னிட்டு உத்தியோக வலையில் சிக்கி மேலுள்ள அதிகாரிகட்குக் கீழ்ப்படிந்து நடந்து பாரமார்த்திக ஞானம் தரமாட்டாததும் நமது மத வொழுக்கத்தை அசட்டை செய்விக்கக் கூடியதுமான ஆங்கிலக் கல்வியைப் பெறுவது சிறப்பல்ல வென்று தான் கருதுவதாக (இன்ஸ்பெக்டர்ஸ்) அம்மாளுக்குப் பதில் கூறி விட்டார்.

6. அதற்கேற்பவே நீதி நூல்கள் பக்தி நூல்கள் பலவும் படிக்கச் செய்தார். எனக்கு 2 வயது மூத்தவரான தமக்கையாரும் கல்வியில் ஊக்கம் உடையவரா யிருந்தமையால் படிப்பிற்கு ஊக்கம் உண்டாயிற்று.

7. 14 வயது நடந்து வருகையில் ஓர் நாள் விடியற்காலையில் வாயிலிருந்து மழை பெய்வது போல் ஒரு கனவு தோன்றியது. அன்று முதலாகவே இயற்கையாகக் கவி யெழுச்சி கவன சக்தி உண்டாகியதால் சாதாரண நடையில் கும்மிகள், கீர்த்தனங்கள் பல வரைந்து வந்தேன். 15-வது வயதில் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ. சுப்பிரமணியத் தம்பிரான் என்பவரை நண்பர் ஒருவரது முயற்சியால் தருவித்து அவரை வேறு ஜாகையில் இருந்து வர வேண்டிய வசதிகள் அளித்து பகல் 12 மணிக்குப் பின் 4 மணி வரையில் தமிழில் பிரபலமாக உள்ள இலக்கிய நூல்கள் பாடங் கேட்குமாறு செய்யப்பட்டது.

8. 65 வயதுள்ள அவ் வாசிரியர் சோம்பல் அசூயை யின்றி அன்புடன் போதித்து வந்ததும் பாடம் கேட்டு முடியுமளவும் தந்தையார் உடனிருக்க முடியாமல் தொழிலில் ஈடுபட்டு ஆபீஸ் செல்ல நேரின் தாயாரே உடனிருப்ப தென்னும் விதி கட்டாயமாக அநுஷ்டிக்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கது.

9. தந்தையார் முன்னிலையில் தினமும் பல தமிழ்ப் புலவர் வருவதும் சம்சை பாடச் செய்வதும் கவன வன்மையைப் பரீக்ஷிப்பதும் பெரிய ஆறுதலை யளித்தது.

10. 17-வது வயதில் திருவரமாத்தூர் திரிபந்தாதியைப் பாடம் கேட்கையிலேயே இயற்றி அப் புஸ்தகம் அச்சிட்டு வெளி யேற்றப் பெற்றது.

11. 18-வது வயது தொடக்கத்திலேயே ஆசான் படிப்பு முடிந்ததாகக் கூறி விடை பெற்று ஆடுதுறை யாதீன மடத்தில் மாயவரத்திற் கடுத்துள்ள மூவலூரில் பல வருஷம் வசித்து வந்து ஈசன் திருவடி யடைந்தார்.



12. 18-வது வயதில் திண்டிவனத்திற் கருகிலுள்ள இரட்டணை யென்னும் சொந்த கிராமத்திற்குத் தந்தையார் உபகார சம்பளம் பெற்றுச் சென்றதால் 10 ஆண்டுகள் அங்கு வசித்தேன்.

13. மேற்படி கிராமத்திற் கருகிலுள்ள சேவூர் என்று வழங்கும் திருவிடையூர் ஸ்தல புராணம் ஒன்றினை வட மொழியி னின்றும் மொழி பெயர்ப்பித்து தமிழ்ச் செய்யுள் வடிவில் பாடி முடித்து அத் தலத்தில் பெருங் குழுவில் அரங்கேற்றினேன்.

14. பின் கண்களில் ஏற்பட்ட சதை வளர்ச்சி சிகிச்சைக்காகச் சென்னையில் தங்கிய சில நாளில் திருவொற்றியூர் பஞ்சகம், பதிகம் இவற்றைத் தனது புலமையில் ஐயுற்ற சில பண்டிதர் ஐயந்தீர இயற்றினேன்.

15. அவ் வாண்டிலிருந்த காலஞ் சென்ற ஸ்ரீஜத் (மித்திரன் அதிபர்) சுப்பிரமணிய அய்யர் நட்பும் பத்திரிகை யுலகில் ஊக்கமும் ஏற்பட்டு அரசியல் அறிவும் பெற்றேன்.

16. பல உபந்நியாச மேடைகளில் ஈடுபட்டு சரோஜினி தேவியார், கோபால கிருஷ்ண கோகலே முதலியவர்கள் பேசிய சென்னைக் கான்பரன்ஸுகளில் பாராட்டத் தக்க பிரசங்கம் செய்தேன்.

17. உண்மையில், ஒழுங்கில் சிறிதும் தவறாத தந்தையார் எனது 27-ம் வயதில் காலமானார்.

18. பேரறிவுடைய தாயார் தந்தையின் ஸ்தானத்தில் வழுவா வுறுதியுடன் கணமும் பிரியாது, என்னைக் காத்து வந்து, அவரது 47-வது வயதளவும் இருந்து காலமானார்.

19. 45-வது வயதில் (அதாவது 1921வருடத்தில்) மகாத்மாவைத் தரிசிக்கவும் அவர் உபதேசங்களைப் படிக்கவும், அடிகள் கூடலூர் விஜயம் செய்த காலங்களில் வரவேற்புப் பத்திரம் வரைந்து சமர்ப்பிக்கவும் ஏற்பட்ட சந்தர்ப்பங்களின் பயனாக அவர் சரிதம் படிக்கவும் அதனைத் தமிழ்ச் செய்யுள் வடிவில் இயற்றவும் நேர்ந்தது.

20. அந் நாள் முதல் கதருடை யணிந்து, செல்லும் கூட்டங்கள் தோறும் கதர் பிரசாரமும் செய்து வருவது கடமையாகக் கொண்டு தொண்டாற்றுகிறேன்.

21. அன்னையின் துணைவலியும் தமக்கையும் (காலமானதால்) அவர் துணைவலியு மிழந்த பின் அதிகமாக வெளி சஞ்சாரம் செய்ய முடிவதில்லை. தமக்கையின் கணவர் துணைவலி கொண்டு சில அழைப்புக் கிணங்கிச் செல்வது முண்டு.

22. எனது உறுதியான கொள்கைகளில் சில:—

(அ) வயது முதிர்ந்தாலும் பெண்கள் தனிமையில் போதல் வருதல் கூடாது என்பது.

(ஆ) குடும்ப வேலைகளில் ஈடுபடுவது இழிவென எண்ணுவதில் ஆழ்ந்த வெறுப்பு.

(இ) பிறப்பினடியாக ஏற்பட்ட குல ஒழுக்கங்களைப் பெண்கள் தவறாமல் காத்து ஒழுகல் வேண்டும் என்பது.

(ஈ) சமூக சீர்திருத்தங்கள் வகுப்பிலுள்ள அறிஞர்களால் திருத்தப்பட வேண்டுமன்றி மசோதாக்கள் (Bills) பில்லுகள் உற்பத்தி செய்து, அரசியல் சட்டங்களை உண்டு பண்ணி அதனால் சீர்திருத்தம் விளைவிப்பது கூடாது என்பது. சட்டங்களினால் ஒருபோதும் சமூகத் திருத்தம் கால் கொள்ளா தென்பது.

(உ) ஒத்துழையாமையில் எனக்கு ஆழ்ந்த பற்று.

(ஊ) பெண்கள் உபாத்தியாயினிகளாகி லௌகிகம் புரிவதும், ஆங்கில பட்டதாரிகளாவதும் தாய் நாட்டிற்கும் தாய் மொழிக்கும் அன்பு செய்யவோ, தொண்டு செய்யவோ முடியாமல் தடை செய்வதே யாகும் என்பது.

23. ஒத்துழையாமை ஓங்கி நின்ற 1922–23ல் கட்குடி இந்து மதச் சட்ட விரோத மென்பதைப் பெரிய சபைகளில் விளக்கியதற்காக அதிகாரிகள் ஸி. ஐ. டி. இருவரை ஏற்படுத்தி, சுமார் 2½ வருஷங்கள் வரை கண்காணித்து வந்தனர்.



24. அதி தீவிரமாக எவ்வித சிரமமான பாக்களை பாடுவதும் அது போலவே பேசுவதும் அவ்வாறே எழுதுவதும் என்னால் முடியும்.

25. சுமார் 10 வருடங்கட்கு மேலாகவே ரத்தக் குறைவினால் நரம்புகள் உணர்ச்சி குன்றி (கைகால்களில்) சுகமிழந்திருப்பதனாலேயே தேச சேவையில் தீவிரமாக ஈடுபட முடியாமல் விலகி நிற்கிறேன்.

26. கதரணிதல், காந்தி புராணத்தின் மேல் நிகழ்ச்சிகள் வரைதல், தேச பாஷை, கதருடை வளர்ச்சிக்காக உபந்நியாசம் பல புரிதல் இவை மட்டுமே ஓரே யளவாக மேற்கொண் டிருக்கிறேன்.

27. நவ நவமான நாகரிகங்கள் பலவற்றில் பெண்கள் மூழ்கி நடையுடை பாவனைகளில் மேல் நாட்டினரைப் பின் பற்றுவதில் மிக்க வெறுப்புக் கொள்கிறேன்.

28. வைதீக சட்டங்களில் இயக்கத்திற்கு ஒவ்வாத முறைகளை ஏற்காமல் மீறுதல் அவசியம் என்பதும் என் கொள்கை.

29. பெண்கள் ஆங்கிலம் கற்பது கால நிலையில் அவசியமாயினும் தாய் மொழியை ஊன்றிப் படியாமல் ஆங்கிலம் பயில்வது கூடா தென்பது.

30. அந்நிய ஆடை, அந்நிய பாஷை, அந்நிய பானம், அந்நிய நாகரிகம், அந்நிய அலங்காரம் இவைகள் நாட்டை விட்டொழிந்தாலன்றி சுயராஜ்யம் வரினும் சரியான முன்னேற்றம் ஏற்படா தென்பது. ஒழுங்கு, கட்டுப்பாடு, தெய்வ பக்தி, ஆசாரம் இவைகளை பெண்கள் மேற்கொள்ளத் தவறிவிட்டதே அநர்த்தத்திற்குக் காரணம் எனும் நம்பிக்கை.

31. இது தவிர தமிழில் தற்போது வெளியாகி வரும் விரிவகராதி (லெக்ஸிகன்) வெளியீட்டினை நன்கு மதிக்க உரியாராக கவர்ன்மெண்டாரால் தேர்ந் தெடுக்கப்பட்ட 18 பண்டிதர்களில் என்னையும் ஒருவராகச் சேர்த்திருக்கிறார்கள்.

32. மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் என்னை கௌரவ காரியதரிசியாக உறர் திரு. பாண்டித்துரை காலத்தில் அங்கீகரித்து, எனக்கு அப்பொழுது பண்டிதைப் பட்டமும் வழங்கப்பட்டது. தந்தையாரால் எனக்காக அளித்த சொற்ப நில வருமானத்தில் வாழ்ந்து வருகிறேன்.

33. நீதித் தொகுதி என்னும் வசனக் கட்டுரை புத்தகம் என்னால் எழுதப் பெற்றது, சென்னைப் பாடப் புத்தக நிர்ணய கமிட்டியாரால் வெர்னகுலர் காம்போஸிஷனுக்கு நிரந்தர உபயோகமாக அங்கிகரித்திருக்கிறார்கள்.

34. என்னோடு கருத்து வேறுபடுவோர்பால் எனக்கு அற்ப வருத்தமும் கிடையாது. நான் உண்மையாக நேசிப்பது அவர்களையே. நட்புக்காகக் கொள்கையை மறைத்துப் பேச நான் விரும்பியதே யில்லை.

35. பெண்கள் ஸ்திர புத்தி யில்லாதவர்கள் என்பதையும் நான் ஏற்க முடியாது. பால்ய விவாகக் கொடுமைகள் நாட்டை விட்டு வெளியேறிப் பல ஆண்டுகளாய் விட்டன. ருதுமதி விவாகம் சமூகச் சட்டத்தையே நாசம் செய்வதாகும். மதத்தை அவமதிக்க இதை விடச் சிறந்த கருவி வேறில்லை.

36. ருதுவாகு முன் வைதவ்யம் அடையும் சில கன்னிகைகள் வைதவ்ய விரதங்களுக்கு உட்படக் கூடாது. சமூகம் அதனை அங்கிகரிக்க வேண்டும்.

37. அத்தகையார் பொது நலத்திற்கும் கல்வி வளர்ச்சிக்கும் பாடுபடக் கூடியவர்களாகத் தக்க பயிற்சி பெறல் வேண்டும்.

38. ஒவ்வொரு வகுப்பிலும் இதற்கென பொது நிதி, ஸ்தாபனம் வேண்டும்.

39. கல்வியில் நாட்டம் செலுத்தும் பெண்களில் பெரும்பாலோர் மணவாழ்வையே விரும்பமாட்டார்க ளென்பதும் எனது அநுபவ பிரமாணம்.

# உண்மையின் அழைப்பு.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி."

கடவுளே! உலகத்தில் நான் நல்லவனாகவே பிறந்தேன்; நல்லவனாகவே வளர்ந்தேன்; நல்லவனாகவே வாழ்ந்து பள்ளியில் பயின்றேன். எனது மாணவ வாழ்க்கை மிக மிகப் பரிசுத்தமானதாயும் பக்தி நிறம்பினதாயும் முன்னுக்கு வரக் கூடியதாயு மிருந்தது. எனது சென்றுபோன உற்சாக தூய நாட்களை நினைக்குங்கால், தற்கால நிலையை நினைத்து வருந்துகிறேன்; வாடுகிறேன். எனது யௌவன வாழ்விற்கும் எனது தற்கால வாழ்விற்கும் எவ்வளவோ வித்தியாசம்! மாணவ வாழ்க்கைக்குப் பிறகும் நான் சாந்தியாகவும் சந்தோஷமாகவும் வாழ்ந்து வந்தேன்.

சில வருடங்களுக்கு அப்பால் அநேக விஷயங்களில் (பொது வேலைகள்) ஈடுபட்டு எனது சுய அபிவிருத்தியையும் மறந்து ஏமாந்து போய்விட்டேன். பற்பல வழிகளில் பிரவேசித்ததால், உலக விஷயங்களால் அடிபட்டு அடிபட்டு எனது தவ உடம்பு பாவ உடம்பாகிவிட்டது. எனது மனதில் அரும்பிக்கொண்டிருந்த உயரிய எண்ணங்களாம் புஷ்பங்கள் கருகிவிட்டன. தேகமும் இதற்குள் அடங்கிக் கிடக்கும் மனமும் இப்பொழுது நைந்து நைந்து நாசமாகிப் போய்விட்டது. நான் செய்த குற்றங்கள் என்னை வருத்துகின்றன. நன்மை இது, தீமை இது என்று ஒரு பாடம் படித்தறிந்து கொண்டேன். உலக இயலும் எனக்குக் கற்பித்துக் கொண்டிருக்கிறது. புல்லுருவிபோல சோம்பேறியாய் வாழ்ந்தேன். பஞ்சமா பாதகங்கள் செய்தேன். நான் செய்த குற்றங்கள் ஒன்றா, இரண்டா? ஆயிரக் கணக்கானவைகள்!

என் மனதிற் குடிகொண் டிருந்த சாந்தியைக் காணோம்; வாழ்வு பாரமாயும் கசப்பாயு மிருக்கின்றது. எனக்கு ஒரு வழியும் தோன்றவில்லை. எனது ஆதி தாய் தகப்பனாகிய பிரபுவைச் சரணாகதி அடைந்தால்தான் எனக்கு ஈடேற்றம் உண்டாகும் என்று நினைக்கிறேன்.

"கருணைக் கடலே! நான் பெரும் பஞ்சமா பாவி. தங்களது செந்தாமரைப் பாதங்களில் சரண மடைகிறேன். இந்த அடிமையைத் தங்களது கருணைக் கண்ணால் சிறிது பாருங்கள். எனது மனோ வேதனையை அகற்றுங்கள். எனது சகல சங்கடங்களையும் நாசமாக்குங்கள்; எனது கெட்ட எண்ணங்களை அடியுடன் அகற்றுங்கள். அடியேனைப் புனிதமாக்குங்கள். மாபாவியின் மீதும் தங்களது கருணா விலாசத்தின் ஒளி சிறிதேனும்—அணு அளவேனும் படுமானால் அவன் கடைத்தேறி விடுவான். அனாதைகளுக்கு ஆதாரமூர்த்தியே, துக்கிகளின் தயாபரக் கடலே, தீனபந்துவே, என்னைக் காப்பாற்ற இறைஞ்சுகிறேன். எனது கஷ்ட நஷ்டங்களையும் இன்பங்களையும் ஆசைகளையும் தாங்குவதற்குச் சக்தியையும் அன்புடன் தொண்டு செய்வதற்கு அதிக ஆற்றலையும் ஏழைகளுக்கும் கஷ்டப் படுகிறவர்களுக்கும் உற்ற சமயத்தில் ஏற்ற உதவி செய்வதற்கு நல்ல ஆசையையும், ஏதேச்சாதிகாரம் செலுத்துபவர்களுக்கும், சுதந்திரத்தை அடக்கி ஒடுக்குபவர்களுக்கும், மோசக்காரர்களுக்கும், வஞ்சகர்களுக்கும், அபிவிருத்தியின் துரோகிகளுக்கும் நான் அடிமையாகப் போகாதபடி எனக்கு தைரியத்தையும், உண்மைக்காகப் போராடும்படியாக வன்மையையும், உனது பாத மலர்களைச் சதா தியானித்துக் கொண் டிருக்கும்படியாக பரிசுத்தமான மனத்தையும் கொடுத்து என்னைக் காக்கப் பிரார்த்திக்கிறேன். அருள் புரிய மன்றாடிக் கொண் டிருக்கிறேன்; உன்னையே நம்பிக்கொண் டிருக்கிறேன்."

## அழைப்பு

"என் னருமை மகனே வா, வா! அருகில் வா!! பயப்படாதே. நான் உன் அருகிலிருக்கும் பொழுதும் ஏன் நீ அச்சமடைகிறாய்?



உலகிலிருப்பவர்களி லெல்லாம் நானே உன்னை உண்மையாக நன்கு அறிவேன். நீ அறியாமல் தீமைகளைச் செய்தாய். உனக்கு இப்பொழுது அறிவு வந்துவிட்டது; உணர்வு வந்துவிட்டது. உனது கஷ்டங்களை யெல்லாம் நானே தாங்குகிறேன். பாவமான, துன்பமான, துக்கமான எண்ணங்களை யெல்லாம் உனது சிந்தனை உலகத்திலிருந்து அகற்றிவிடு. கடலைப் போல் அசைந்து கொண் டிருக்கும் உனது மனோசலனத்தை நான் அமைதி யாக்குகிறேன். உனக்குச் சாந்தியையும் சந்தோஷத்தையும் கொடுக்கிறேன். துன்புற்றவர்களுக்கு இன்பத்தையும், தோல்வி யுற்றவர்களுக்கு ஜெயத்தையும், ஏழைகளுக்குப் பாக்கியங்களையும், ரோகிகளுக்குக் குணத்தையும், சக்தியற்றவர்களுக்குச் சக்தியையும் கொடுப்பவன் நானே. தாய் தந்தையர்கள், சகோதரர்கள், பந்துக்கள், நேசர்கள், அன்பர்கள் முதலியவர்களால் கைவிடப் பட்டாலும், நான் ஒரு பொழுதும் கைவிட மாட்டேன். பணம், பாக்கியம், இன்பம், செல்வாக்கு, புகழ் முதலியவைக ளெல்லாம் உன்னிட மிருந்து போய் விட்டாலும், நான் உன்னிடம் எப்பொழுதும் இருந்தே இருப்பேன். எனது வாற்சல்லியம் என்றும் உன்னிடம் சென்றுகொண் டிருக்குமென்பதை மறவாதே. ஏன் தயங்குகிறாய்? வருந்துகிறாய்? கண்ணீர் வடிக்கிறாய்? ஏது எது எப்படிப் போனாலும், நான் உன்னுள் சதா இருக்கிறேன் என்பதை எப்பொழுதும் நினைத்துச் சந்தோஷமாயிரு; நீ என் மகன். உனது குற்றங்களுக்காகவும் குறைகளுக்காகவும் நான் உன்னைக் கைவிட மாட்டேன். இது சத்தியம்."

# இந்திய காங்கிரஸ் மஹா சபையின் வளர்ச்சி.

(1885 முதல் 1931 வரையில்)

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.



தேசாபிமானம் பூண்ட இந்தியப் பெரியார்கள் பலரது ஆழ்ந்த சிந்தனையின் பயனாய், இந்திய நன் மக்கள் இந் நாட்டு அரசியலில் முற்போக்கடைய வேண்டி, இற்றைக்குச் சுமார் 46 ஆண்டுகளுக்கு முன்னர் அகில இந்திய காங்கிரஸ் மஹா சபை ஸ்தாபிக்கப் பட்டதாகும். அச் சபையின் 45-வது ஆண்டுக் கூட்டம் சமீபத்தில் எனவே 1931ஹ மார்ச்சு மாசத்தில் கராச்சிமா நகரில் ஸ்ரீ சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் அவைத் தலைமையின் கீழ் சிறப்புற நடைபெற்று, வெகு முக்கியமான தீர்மானங்கள் பல செய்யப் பெற்றிருப்பது யாவரு மறிந்ததே. இன்று இந்தியாவின் முழு கவனமும், ஏன்? இவ் வுலகத்தின் முழு கவனமுமே காங்கிரசினிடத்தில் பதிந்திருக்கிற தென்பதி லதிசய மில்லை. இவ்வாறு உலகத்தின் முழு கவனத்தையுங் கவர்ந்துள்ள காங்கிரஸ் மஹா சபையானது ஆரம்ப காலத்தில் எந்த நிலையில், எந் நோக்கத்தோடு தோன்றி, நாளடைவில் எவ் வெவ்வித மாறுதல்களை யடைந்து வந்து, இன்று பூர்ண சுயராஜ்ய மடைதலே தனது லக்ஷிய மெனக் கூறி நிற்கிற தென்பதை யாராய்தல் ஒரு ரசமான விஷயமேயாகும். எனவே காங்கிரஸ் மஹா சபையின் ஆரம்ப முதல் இன்று வரை நடைபெற்றுள்ள கூட்டங்களின் முக்கிய விபரங்களைச் சிற்சில குறிப்புகளால் இங்கு விளக்குவாம், இதைக் கொண்டே வாசகர்கள் காங்கிரசின் வளர்ச்சியை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.



## 1. 1885 பம்பாயில் காங்கிரஸ் தோற்றம்

1885-ம் ஆண்டு கிறிஸ்த்மஸ் விடுமுறை காலத்தில் பம்பாய் நகரத்தில் அகில இந்திய காங்கிரஸ் மஹா சபையின் ஆரம்பக் (முதலாவது) கூட்டம் நடைபெற்றது. சபை நடைபெறுவதற்கு முன்னர் நாட்டிலிருந்த ஜனத் தலைவர்கள் பலருக்கும் மஹா நாட்டின் அறிக்கைப் பிரதிகள் அனுப்பப்பட்டன. அவ் வறிக்கையில் ஒருவர்க் கொருவர் கலந்து பேசி நாட்டின் முற்போக்கிற்கான வழிகளை ஆராய வேண்டு மெனக் கூறப்பட் டிருந்தது. அக் கூட்டத்திற்கு W. C. பானர்ஜி யவர்கள் தலைமை வகித்தார். இந்திய மக்கள் எழுபத்தோர் பேர் மஹா நாட்டுக்கு வந்திருந்தனர். துரைத்தன உத்தியோகஸ்தர்கள் பலர் அம் மஹா சபையை ஆதரித்தனர்.

## 2. 1886 கல்கத்தா

1886ல் கல்கத்தாவில் தாதாபாய் நௌரோஜி யவர்களின் அவைத் தலைமையின் கீழ் காங்கிரஸ் மஹா சபை நடைபெற்றது. 440 பேர் பிரதிநிதிகளாகவும், 500 பேர் பார்வையாளராகவும் வந்தனர். அவைத் தலைவர் தமது பேருரையில் "ஆங்கிலேய ரிடத்தில் நாம் முழு நம்பிக்கை வைத்து உழைக்க வேண்டும். நியாயமானதும், தருமமானதுமான துறைகளில் நடக்கவும், அதற்காகத் தம் நலத்தை யிழக்கவும் ஆங்கிலேயர்கள் சற்றும் பின்னடையார்கள்" என்று கூறினர். நாட்டின் வறுமையைப் பற்றியும், ராஜப் பிரதிநிதி யவர்களின் ஆலோசனைச் சபையைப் பெரிதாக்க வேண்டு மெனவும், அதிகாரமும் நீதி விசாரணையும் ஒருவர் கையில் இருக்கலாகா தெனவும், இந்தியர்களின் வாலண்டியர் படையை நிருமிக்க வேண்டு மெனவும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

## 3. 1887 சென்னை

1887ல் காங்கிரஸ் சென்னைமா நகரில் கூடியது. அதற்கு பத்ருதீன் தயாப்ஜி யவர்கள் தலைமை வகித்தார். இந்தத் தடவை தான் காங்கிரஸ் மஹா சபை நடைபெறுவதற்கென பந்தல்கள் போடப்பட்டன. இந்திய மக்களை பட்டாளங்களில் உயர்ந்த

உத்தியோகங்களில் நியமிக்க வேண்டுமென்றும், யுத்தப் பயிற்சியளிக்கும் ராணுவக் கலாசாலையை இந் நாட்டில் ஏற்படுத்த வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

## 4. 1888 அலகாபாத்

காங்கிரசின் நான்காவது மஹா நாடு ஜார்ஜ்யூல் அவர்களின் தலைமையின் கீழ் அலகாபாத்தில் நடைபெற்றது. இக் கூட்டம் முடிவடைந்ததன் பின்னர் அப்பொழுது ராஜப் பிரதிநிதியாயிருந்த டப்ரின் பிரபு அவர்கள் காங்கிரஸ் முயற்சிகளைக் கண்டித்துப் பேசினார். அதுவே துரைத்தனத்தார் காங்கிரசை வெறுக்க முற்பட்டதற்கு முதல் முறையாகும். அதற்கேற்பக் காங்கிரஸ் முயற்சிகளை யொடுக்க வேண்டுமென்று ஸர். ஸையத் அஹம்மத், ராஜா சிவப்பிரசாத் முதலியோரும் முன்னின்று உழைக்க ஆரம்பித்தனர்.

## 5. 1889 பம்பாய்

இம் முறை பம்பாய் நகரில் இரண்டாவது முறையாகக் காங்கிரஸ் கூடியது. ஸர். வில்லியம் வெட்டர்பர்ன் அவர்கள் தலைமைப் பூண்டார். காங்கிரஸ் மஹா சபையோர் இந்திய அரசியல் முறையில் தாம் விரும்பிய சீர்திருத்தங்களைப் பிரிட்டிஷாரை வழங்கச் செய்ய வேண்டி ஆங்கில நன் மக்களுக்குத் தங்கள் நியாயமான கோரிக்கைகளை எடுத்துக் கூறி இங்கிலாந்தில் பிரசாரம் செய்வதற்காகச் சில தலைவர்களை நியமிக்கலாயினர்.

## 6. 1890 கல்கத்தா

இஃது கல்கத்தாவில் நடந்த இரண்டாவது சபை யாகும். இதற்கு பிரோஜிஷா மேஹதா அவர்கள் அவைத் தலைமை வகித்தார். இம் முறை துரைத்தன உத்தியோகஸ்தர்கள் யாரும் காங்கிரஸ் கூட்டத்திற்குச் செல்லலாகா தென்று துரைத்தனத்தார் உத்திரவிட்டனர். அக் கூட்டத்திற்கு 720 பேர் பிரதிநிதிகள் அஜராயினர்.



## 7. 1891 நாகபூர்

நாகபூரில் நடைபெற்ற ஏழாவது ஆண்டுக் காங்கிரஸ் மஹா சபையானது ராவ் சாகிப் P. அனந்தசாரி யவர்களின் தலைமையில் 812 பேர் பிரதிநிதிகளுடன் கூடியது. இந்திய மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற பிரதிநிதிகளுடன் கூடிய சட்ட சபைகள் ஏற்பட்டாலொழிய இந் நாட்டின் ஆளுகை பொது மக்களின் விருப்பத்திற்குரியதா யிரா தென்று தீர்மானம் செய்யப்பட்டது.

## 8. 1892 அலகாபாத்

இச் சபை அலகாபாத் நகரில் கூடிய இரண்டாவது மஹா நாடாகும். இதற்கு இரண்டாவது முறையாக W. C. பானர்ஜியவர்களே தலைப் பூண்டார். அக் கூட்டத்தில் கலெக்டர் வேலைக்குரிய (ஐ. ஸி. எஸ்.) பரீக்ஷைகளை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே காலத்தில் நடத்தப்பட வேண்டுமென்று தீர்மானித்தனர்.

## 9. 1893 லாஹோர்

1893ல் லாகூரில் நடைபெற்ற இம் மஹா சபைக்கு தாதாபாய் நௌரோஜி யவர்கள் இரண்டாவது முறையாகத் தலைமை வகித்தார். 867 பேர் பிரதிநிதிகள் கூடினர். இராணுவ இலாகாவுடன் சம்பந்த மில்லாமலேயே வைத்திய இலாகாவை சிவில் சர்வீஸ் இலாகாவாக ஏற்படுத்த வேண்டுமென்று இக் கூட்டத்தில் தீர்மானித்தனர்.

## 10. 1894 சென்னை

இஃது சென்னையில் கூடிய இரண்டாவது மஹா நாடாகும். இக் கூட்டத்திற்கு இங்கிலாந்து பார்லிமெண்டு அங்கத்தினராகிய வெப் துரை மகனார் தலைமைப் பூண்டார். 1163 பேர் பிரதிநிதிகள் விஜயம் செய்தனர். இம் மஹா நாட்டில் இந்தியா காரியதரிசி யவர்களின் ஆலோசனைச் சபையை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக காமன்ஸ் சபை யங்கத்தினரோடு கூடிய ஒரு ஆலோசனைக் கழகத்தை நிருமிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கலாயிற்று.

19,8536

## 11. 1895 புனா

புனா நகரில் கூடிய பதினோராவது மஹா நாட்டுக்குச் சுரேந்திரநாத பானர்ஜி யவர்கள் தலைவரானார். 1584 பேர் பிரதிநிதிகள் வந்தனர். நீதி விசாரணை புரியும் அதிகாரமும், நீதி பரிபாலனம் (ஆளுகை) புரியும் அதிகாரமும் ஒருவர் கையில் ஒப்புவிக்காமல் வெவ் வேறு அதிகாரிகளை நியமித்து அவர்களிடம் பிரித்து ஒப் படைக்க வேண்டுமென்று தீர்மானம் செய்தனர்.

## 12. 1896 கல்கத்தா

இக் கூட்டம் கல்கத்தாவில் கூடிய மூன்றாவது கூட்டமாகும். இதற்கு மஹம்மது ரஹிம்துல்லா சயானீ யவர்கள் அக்கிராசனம் வகித்தார். உப்பு வரியால் இந் நாட்டு ஏழை மக்களுக்கு வெகு கஷ்டமுண்டாகிற தென்றும், ஆகவே 1868-ம் ஆண்டிலிருந்த வரி. விகிதத்தை மாத்திரமே அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமென்றும் தீர்மானிக்கப் பட்டது.

## 13. 1897 அமராவதி

இவ் வாண்டு அமராவதியில் காங்கிரஸ் கூடியது. இம் முறை சங்கரன் நாயர் அவர்கள் தலைமைப் பூண்டார். இந்திய நாடு பஞ்சத்தாலும், தொத்து நோய்களாலும் வருந்திக்கொண் டிருப்பதாலும், எல்லைப் புறங்களில் செய்யப்பட்ட யுத்தமானது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் லாபத்திற்காகவே செய்யப்பட்ட தாதலால், இந் நாட்டின் ராணுவச் செலவு முழுவதையும் இந் நாடே பொறுக்க முடியாது; ஆகவே இங்கிலாந்து துரைத்தனத்தாரும் ஒரு பாகத்தை ஏற்றுக் கொண்டு இந்தியாவுக்கு உதவி புரிய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுவதாகத் தீர்மானம் செய்யப்பட்டது.

## 14. 1898 சென்னை

சென்னை நகரில் மூன்றாவது முறையாக இவ் வாண்டு காங்கிரஸ் கூடியது. பாபு ஆனந்த மோகன போஸ் அக்கிராசனம் வகித்தார். இவ் வாண்டில் தேசத்தில் பஞ்சமும் நோயும் அதிக மடைந்தது. நாட்டில் துரைத்தனத்தார் மீது வெறுப்பு வளர்ந்து வரவே



அது காரணமாய் அராஜக முயற்சிகள் தலை தூக்கின. துரைத்தனத்தாரும் கடுமையான அடக்கு முறைகளைக் கையாண்டனர்.

## 15. 1899 லக்னோ (லக்ஷ்மணபுரி)

15-வது காங்கிரஸ் மஹா சபை லக்னோ நகரத்தில் ராமேச சந்திரதத் அவர்களின் தலைமையில் நடை பெற்றது. 740 பேர் பிரதிநிதிகள் வந்தனர். 300 பேர் மகம்மதியப் பிரதிநிதிகளாவர். பார்வையாளராக 4000 பேர் வந்திருந்தனர்.

## 16. 1900 லாகூர்

இஃது லாகூர் நகரில் நடை பெற்ற 2-வது காங்கிரசாகும். என். ஜி. சந்திராவர்க்கர் அவர்களின் தலைமையில் இக் கூட்டம் நடந்தது.

## 17. 1901 கல்கத்தா

17-வது காங்கிரஸ் மஹா சபை கல்கத்தா நகரில் கூடிய நான் காவது கூட்டமாகும். ஸர். தின்ஷா வாசா அவர்கள் அவைத் தலைமை வகித்தார். இவ் வருடத்தில் காங்கிரசுடன் முதன் முதலாகக் கைத் தொழிற் பொருட் காட்சி யொன்று நடத்த ஆரம் பித்தனர்.

## 18. 1902 அஹம்மதாபாத்

இரண்டாவது முறையாக சுரேந்திரநாத பானர்ஜி யவர்களின் தலைமையில் இவ் வாண்டு அஹம்மதாபாத்தில் காங்கிரஸ் கூடியது. அவ் வருடத்தில் எட்வர்ட் சக்கிரவர்த்தி யவர்களின் மகுடாபிஷேகம் நடை பெற்றபடியால், அதற்காக வழக்கமாகக் கூடும் காலத்தைவிட சற்று முன்னாடியே காங்கிரஸ் நடத்தப் பெற்றது. அக் கூட்டத்தில், சக்கிரவர்த்தி யவர்களின் மகுடாபிஷேக வைபவத்தை முன்னிட்டு ஏழை இந்தியாவில் அதிக பொருட் செலவு செய்யலாகா தெனத் தீர்மானிக்கப்பட்டது. இக் காங்கிரசுடன் நடை பெற்ற கைத் தொழிற் பொருட் காட்சியை பரோடா மகாராஜா அவர்கள் திறந்து வைத்தார்.

## 19. 1903 சென்னை

இவ் வாண்டு லால் மோகன கோஷ் அவர்களின் தலைமையில் சென்னை நகரில் நான்காவது முறையாகக் காங்கிரஸ் நடைபெற்றது. 538 பேர் பிரதிநிதிகளும் 6000 பேர் விசிட்டர்களும் விஜயம் செய்தனர். இவ் வாண்டு மஹா சபையிலேயே பர்மா தேசப் பிரதிநிதிகள் முதன் முதலாகக் கலந்து கொண்டனர். இம் முறை நடைபெற்ற பொருட் காட்சியை மைசூர் மகா ராஜா அவர்கள் ஆரம்பித்தார்.

## 20. 1904 பம்பாய்

மூன்றுவது முறையாக பம்பாய் நகரில் இருபதாவது காங்கிரஸ் மஹா சபை கூடியது. ஸர். ஹென்ரி காட்டன் அவர்கள் அதைத் தலைமைப் பூண்டார். 1010 பேர் பிரதிநிதிகள் வந்தனர். அப்பொழுது கவர்னர் ஜனரலாக விருந்த லார்டு கர்ஸன் அவர்கள் பல பேரை ராஜ துவேஷக் குற்றத்திற்காகத் தண்டித்து அடக்கு முறையை பலமாக அனுஷ்டித்தார்.

## 21. 1905 காசி

பழமையான புகழ் படைத்த காசிமா நகரில் 21-வது காங்கிரஸ் மஹா சபையானது கோபால கிருஷ்ண கோகலே அவர்களின் தலைமையில் நடை பெற்றது. இவ் வாண்டிலேயே வங்காளப் பிரிவினை நடை பெற்றதால் மகம்மதியர்களிலும் பல பேர் காங்கிரசுடன் ஒன்று கூடினர். நாடு அமளி குமளியாயிற்று. இவ் வாண்டுக் காங்கிரஸில் அதன் தலைவர் "பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் குடியேற்ற நாடுகளில் நடந்து வரும் சுதந்திர அரசாட்சியே இந் நாட்டிலும் நடை பெற வேண்டும்" என்று கூறினர்.

## 22. 1906 கல்கத்தா

கல்கத்தாவில் ஐந்தாவது முறையாக 22-வது மஹா நாடு கூடியது. அப்பொழுது வங்காளப் பிரிவினையால் நாடெங்கும் தீவிர உணர்ச்சி ஏற்பட்டிருந்தது. 1663 பேர் பிரதிநிதிகளும் 16 ஆயிரம் பேர் விசிட்டர்களும் கூடி யிருந்தனர். குடியேற்ற நாடுகளுக்குரிய சுதந்திர அரசாட்சி இந்தியாவுக்கு வழங்கப்பட வேண்டு மெனத் தீர்மானம் நிறைவேறியது.



## 23. 1907 சூரத்து

23-வது காங்கிரஸ் மஹா நாடு சூரத்து நகரில் கூடியது. அதற்கு ரசவிஹாரி கோஷ் அவர்களைத் தலைமை வகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டது. அதை பால கங்காதர திலகர் கூடாதென மறுத்தார். அதனால் மிதவாதிகளுக்கும் அமிதவாதிகளுக்கும் வாதப் போர் மூண்டது. அது கடைசியில் கைகலந்த நிலைக்கு வளர்ந்து வந்து சபையில் பெருங் குளப்ப மேற்பட்டு விட்டது. அச் சமயத்தில் செந்தலைப் புலிகள் சபையிற் புகுந்துக் கூட்டத்தைக் கலைத்து சமாதானத்தை நிலை நிறுத்திய புண்ணியங் கட்டிக் கொண்டனர். அவ்வாறு சூரத்துக் காங்கிரஸ் குழப்பத்தில் முடிந்தது.

## 23. 1908 சென்னை

23-வது காங்கிரஸ் சூரத்தில் கலைந்து போனபடியால், மீண்டும் 1908ல் சென்னையில் ஐந்தாவது முறையாக அஃது நடைபெற்றது. ரசவிஹாரி கோஷ் அவர்களே தலைமை வகித்தார். அக் கூட்டத்தில் "காங்கிரஸ் பிரதிநிதிகளாக இருக்க வேண்டியவர்கள் காங்கிரஸ் கொள்கைகளை ஒப்புக் கொள்ள வேண்டு" மென்ற விதி ஏற்படுத்தினர். குடியேற்ற நாட்டு அரசியல் முறையே தேவை யென்றும், அதைப் பெறுவதற்கு நியாயமான சமாதான முறையில் பாடுபட வேண்டு மென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

## 24. 1909 லாகூர்

லாகூர் நகரில் 3-வது முறையாக 24-வது காங்கிரஸ் மஹா சபை பண்டித மதன மோகன மாளவியா அவர்களின் தலைமையில் நடை பெற்றது. மிண்டோ மார்லே சீர்திருத்தங்களில், சமய வேற்றுமைகளை முன்னிட்டு வகுப்புவாரி பிரதிநிதி ஸ்தானங்களை சட்ட சபையில் ஏற்படுத்துவது கூடா தெனத் தீர்மானம் நிறைவேறியது.

## 25. 1910 அலகாபாத்

ஸர். வில்லியம் வெட்டர் பர்ன் அவர்களின் தலைமையில் அலகாபாத்தில் 3-வது முறையாக காங்கிரஸ் கூடியது. இந் நாட்டில் தலை தூக்கி நின்ற ஹிந்து முஸ்லீம் விவாதங்களையும், மிதவாத அமிதவாத வேற்றுமைகளையும் நீக்கிச் சமாதான முண்டாக்குவதற்காகவே காங்கிரசுக்குத் தலைவராக வெட்டர் பர்ன் அவர்கள்

இங்கிலாந்தி லிருந்தும் இந்தியா வந்தார். இவர் காங்கிரசுக்குத் தலைமைப் பூண்டது. இரண்டாவது முறையாகும்.

### 26. 1911 கல்கத்தா

கல்கத்தாவில் 6-வது முறையாகப் பண்டித பிஷக் நாராயண தர் அவர்களின் தலைமையில் 26-வது காங்கிரஸ் நடை பெற்றது. இக் கூட்டம் வங்காளப் பிரிவினை நீக்கப்பட்டதென்ற சந்தோஷத் துடன் கூடியதாகும். இஃது அதிகாரிகளிடத்தில் காங்கிரஸ் பெற்ற முதல் வெற்றியாகும்.

### 27. 1912 பாங்கிபூர்

இக் கூட்டம் ஆர். எஸ். மதோல்கார் அவர்களின் தலைமையில் நடந்தது. காங்கிரஸ் விதிகள் இம் முறை புதுப்பிக்கப் பட்டன.

### 28. 1913 கராச்சி

28-வது காங்கிரஸ் மஹா சபை கராச்சி நகரில் சையத் மஹம் மது பஹதூர் அவர்களின் அக்கிராசனத்தில் நடை பெற்றது.

### 29 1914 சென்னை

சென்னையில் 6-வது முறையாக பூயேந்திர நாத் போஸ் அவர் களின் தலைமையில் காங்கிரஸ் கூடியது. இதில் இந்தியா காரிய தரிசியின் ஸ்தானத்தை நீக்கிவிட வேண்டுமெனத் தீர்மானிக்கப் பட்டது.

### 30. 1915 பம்பாய்

பம்பாயில் 4-வது முறையாக ஸர் சந்திர போந்திர பிரசன்ன சின்ஹா அவர்களின் தலைமையில் 30-வது காங்கிரஸ் நடை பெற்றது.

### 31. 1916 லக்னோ

லக்னோவில் 2-வது முறையாக 31-வது காங்கிரஸ் சபை அம்பிகா சரண முஜும்தார் அவர்களின் தலைமையில் நடந்தது. இம் முறை மிதவாதிகளுக்கும் அமித வாதிகளுக்கும் சமாதான மேற்பட்ட நிலையில் காங்கிரஸ் கூடியது.

### 32. 1917 கல்கத்தா

கல்கத்தாவில் 7-வது தடவையாக அன்னி பெஸண்டு அம்மை யவர்களின் அவைத் தலைமையின் கீழ் 32-வது காங்கிரஸ் நடை பெற்றது. ஹோம்ரூல் கிளர்ச்சி பலப்பட்டது. 4967 பேர் பிரதி நிதிகள் ஆஜராயினர். அடக்கு முறைச் சட்டங்களை பலமாகக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேறின.



### 1918 பம்பாய் (அவசரக் கூட்டம்)

பம்பாய் நகரில் 5-வது தடவையாக 33-வது அவசரக் காங் கிரஸ் மகா சபை ஹாசன் இமாம் அவர்களின் தலைமையில் 3500 பிரதிநிதிகளுடன் கூடியது. பாரத தேசத்திற்குச் சுதந்தரப் பொறுப் பாட்சி ஏற்படுத்த வேண்டுமெனக் கோரிக் காங்கிரஸ் தீர் மானம் செய்தது.

### 33. 1918 டில்லி

பண்டித மாளவியாஜி அவர்களின் தலைமையில் இரண்டாவது முறையாக டில்லியில் 33-வது காங்கிரஸ் கூட்டம் 4800 பிரதி நிதி களுடன் நடை பெற்றது.

### 34. 1919 அமிர்தசரஸ்

34-வது காங்கிரஸ் மகா நாடு அமிர்த சரசில் பண்டித மோதி லால் நேரு அவர்களின் தலைமையில் நடை பெற்றது.

### 1920 கல்கத்தா (அவசரக் கூட்டம்)

கல்கத்தாவில் 8-வது தடவையாக லாலா லஜபதி ராய் அவர் களின் தலைமையின் கீழ் அவசரக் காங்கிரஸ் கூட்டம் நடைபெற் றது. ஹண்டர் கமிட்டியின் அறிக்கையை முன்னிட்டே இக் கூட் டம் நடந்தது. எனவே துர்க்கி தேசத்தாரோடு மகா யுத்தத்தில் ஆங்கிலேயர் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கையும், அதனால் கிலாபத்துக் குண்டான நஷ்டமும், புதிய அரசியல் சீர் திருத்தங்களும் காங்கிரசில் ஆராயப் பட்டன. இந்திய மக்களுக்கு இழைக்கப்பட்ட நஷ்டத்திற்கு ஈடு செய்யப் படும் வரையில் அஹிம் சையோடு கூடிய ஒத்துழையாமைப் போரை பாரத மக்கள் அதி கார வர்க்கத்தினரோடு நடத்த வேண்டுமெனவும், பஞ்சாப் கொடு மைகளுக்கு இந்திய மகா ஜனங்களின் விருப்பத்தின் படி பரிகாரம் தேடாமையைப் பற்றித் துரைத்தனத்தாரைக் கண்டித்தும் தீர்மா னங்கள் செய்யப்பட்டன.

### 35. 1920 நாகபூர்

நாகபூரில் 2-வது முறையாகக் கூடிய 35-வது காங்கிரஸ் மஹா சபை. ஸி. விஜயராகவாசாரி அவர்களின் தலைமையில் நடை பெற்றது. நியாயமான சமாதான முறையில் சுயராஜ்யத் தைப் பெற முயலுவதே காங்கிரசின் கொள்கை யெனத் தீர்மானிக் கப்பட்டது. இதிலிருந்தே ஒத்துழையாமை வளர ஆரம்பித்தது.

### 36. 1921 அஹம்மதாபாத்

இந் நகரில் 2-வது முறையாக 36-வது ஆண்டுக் காங்கிரஸ் மஹா நாடு கூடியது. தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸி. ஆர்.

தாஸ் அவர்கள் சிறைவாசத்தி லிருந்தார். காங்கிரஸ் காரியதரிசிக ளாகிய மோதிலால் நேருவும், சி. ராஜகோபாலாசாரியாரும் சிறையி லேயே யிருந்தனர். அத்தகைய விபரீதமான நிலையில் தாற்காலிக மாக ஹகீம் அஜ்மல்கான் அவர்கள் தலைமை வகித்தார். 4726 பேர் பிரதிநிதிகள் வந்து குழுமினர். பஞ்சாப் துயரங்களுக்கும், கிலா பத் குறைகளுக்கும் பரிகாரம் கிடைக்கும் வரையிலும், சுயராஜ்யம் கிட்டும் வரையிலும், இந்தியாவை யாளும் அதிகாரம் இந்திய ரிடத் தில் ஒப்படைக்கப் படும் வரையிலும் அஹிம்சா வழியில் ஒத்துழை யாமைப் போரை அவ்வம் மாகாணக் காங்கிரஸ் சங்கங்களின் அபிப்பிராயப்படி நடத்திவர வேண்டு மென்று தீர்மானம் செய்யப் பட்டது.

## 37. 1922 கயா

கயா நகரத்தில் தேசபந்து சித்தரஞ்சன தாசரின் தலைமையில் 37-வது காங்கிரஸ் நடை பெற்றது. அதில் சட்ட சபைகளுக் குள் காங்கிரஸ் வாதிகள் சென்று முட்டுக் கட்டை போட வேண்டு மென்ற வாதம் கிளம்பியது, காங்கிரசுக்குள் சுயராஜ்யக் கட்சி யொன்று தோன்றுவதற்கு அப்பொழுதே விதை நாட்டப்பட்டது.

## 1923 டில்லி (விசேஷக் கூட்டம்)

காங்கிரசில் நேர்ந்த விவாதங்களின் காரணமாக டில்லியில் விசேஷக் காங்கிரஸ் கூட்ட மொன்று மௌலானா அபுல் கலாம் அஜத் அவர்களின் தலைமையில் கூடியது. அதுகாலை அஹிம்சை யோடு கூடிய ஒத்துழையா இயக்கத்தை மீண்டும் காங்கிரஸ் அங்கீ கரிப்பதோடு, சட்டசபைகளுக்குச் சென்று வேலை செய்ய வேண்டு மென்று விரும்புகிறவர்கள் அவ்வாறு செய்யலா மென்றும், அதற் காகச் சட்ட சபை பஹிஷ்கார மொன்றை மாத்திரம் காங்கிரஸ் விட்டுக் கொடுக்கிற தென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

## 38. 1924 காக்கிநாடா

மௌலானா முகம்மது அலி அவர்களின் தலைமையில் 38-வது கூட்டம் காக்கிநாடாவில் நடை பெற்றது.

## 39. 1924 பெல்காம்

பெல்காம் நகரில் 39-வது மஹாநாடு மஹாத்மா காந்தி யடிகளா ரின் தலைமையில் நடை பெற்றது. அதில் மகாத்மாஜீக்கும் சுய ராஜ்யக் கட்சித் தலைவர்களாகிய தாஸ், நேரு முதலியோருக்கும் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையைக் காங்கிரஸ் ஒப்புக் கொள் ளுவதோடு, எல்லா அரசியல் கட்சிக்காரர்களையும் காங்கிரசுக்கு அழைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.



## 40. 1925 கான்பூர்

கான்பூர் நகரில் 40-வது காங்கிரஸ் மஹா சபை ஸ்ரீமதி. சரோஜனீ தேவி அவர்களின் தலைமையில் நடை பெற்றது. இந்திய ஸ்திரீ ரத்தினங்களில் ஒருவர் காங்கிரசுக்குத் தலைமை வகித்தது இதுவே முதல் தடவையாகும். இவ் வருடத்திலேயே ஸி. ஆர். தாஸும், சுரேந்திரநாத் பனர்ஜி அவர்களும் காலமாயினர்.

## 41. 1926 அஸ்ஸாம்

அஸ்ஸாமில் ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்களின் தலைமையில் 41-வது காங்கிரஸ் கூடியது. சட்ட சபையில் புகுந்த காங்கிரஸ் வாதிகள் மந்திரிப் பதவிகளை வகிக்கலாகா தெனவும், வேறு கக்ஷி யினர் அம் மந்திரி ஸ்தானங்களில் அமருவதற்கும் இவர்கள் இடங் கொடுக்கலாகா தெனவும் எனவே மந்திரி சபையை வீழ்த்தி முட் டுக் கட்டை போட வேண்டு மெனவும் தீர்மானங்கள் செய்தனர். ஆனால் அதே ஸ்ரீனிவாசய்யங்காரின் தலைமையி லடங்கிய சென்னை மாகாண சுயராஜ்யக் கட்சியார்கள், சென்னை மாகாணச் சட்ட சபையில் கக்ஷிப் பெருமையின் காரணத்தால் ஷை காங்கிரஸ் தீர்மானத்திற்கு மாறுகப் பினுமி மந்திரி சபை யொன்றைத் தாங் களே முன்னின்று ஏற்படுத்திப் பலவித திருவிளையாடல்கள் புரிந் ததை இங்கு மறக்க முடியவில்லை.

## 42. 1927 சென்னை

சென்னைமா நகரில் 7-வது தடவையாக 42-வது மஹா சபை டாக்டர். அன்சாரி அவர்களின் தலைமையில் நடை பெற்றது. அதில் ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பொதுத் தேர்தல் முறையே யிருக்க வேண்டு மெனத் தீர்மானிக்கப்பட்டது.

## 43. 1928 கல்கத்தா

கல்கத்தாவில் 9-வது முறையாக பண்டித மோதிலால் நேரு அவர்களின் தலைமையில் 2-வது முறை 43-வது மஹா சபை கூடியது. அன்னியத் துணி பகிஷ்காரத்தையும், கத்தர் துணி உற்பத்தியையும் வலியுறுத்தித் தீர்மானம் செய்ததோடு, குடி ஜனங்கள் ஆயத்தமாயுள்ள விடங்களில் பர்டோலியைப் போன்று ஒத்துழையாமைப் போரை நடத்தலா மெனவுந் தீர்மானித்தது.

## 44. 1929 லாகூர்

லாகூர் நகரில் 4-வது முறையாக 44-வது காங்கிரஸ் மஹா சபை பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் அவைத் தலைமையின் கீழ் நடை பெற்றது. இதில் பூர்ண சுதந்திரம் எனவே பிரிட்டிஷ்

# தேக நிர்வாகம்.

## திரு. லே. சோமசுந்தரம் அவர்கள்.

தேகத்தைப் பராமரிக்கும் பொருட்டுத் தாம் கையாண்ட அநுபவங்களை, உடற் பயிற்சி நிபுணரான திரு. "ஆல்ப் மார்க்கன்" என்பார் பின் வருமாறு எழுதுகிறார்.

நான் ஜுஜுட்சு (ஜப்பான் குஸ்தி) வித்தையைப் பற்றி அடிக்கடி எழுதி வருவதையும், அவ் வித்தைத் திறத்தினைச் செய்து காட்டி வருவதையும் கண்டு அநேகர் என் தேக நிர்வாகத்தின் பொருட்டு நான் எந்த விதமான பயிற்சியில் பழகி வருகிறேன் என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ளப்

---

ஏகாதிபத்தியத்திற்கு அப்பாற்பட்ட பூர்ண சுயராஜ்யம் பெறுவதே காங்கிரசின் நோக்கம் எனத் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

## 45. 1931 கராச்சி

இச் சபை 1930ல் நடைபெற வேண்டியிருந்த காங்கிரஸ் லாகூர் காங்கிரஸ் தீர்மானப்படி மாற்றப்பட்டதாலும், ஆனால் நாட்டில் நடைபெற்று வந்த ஒத்துழையாமை—சட்ட மறுப்புப் போர் இவற்றின் காரணமாக அரசாங்கத்தாரின் கடுமையான பலவித அடக்கு முறைகளுக்கு உள்ளாகி ஆயிரக்கணக்கான பாரத மக்கள் சிறைவாசம் மேற்கொண்டிருந்தபடியாலும் இக் காலத்தில் காங்கிரஸ் கூடிற்று. மகாத்மா காந்தி—இர்வின் ஆகிய இருவருடைய சமாதான உடன்படிக்கையின் பயனாய்ச் சிறை சென்ற தேச மக்கள் வெளிவந்ததன் மேல் ஒத்துழையாமைப் போர் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ள நிலையில் சமீபத்தில் 1931-ம் ஆண்டு மார்ச்சு மாசத்தில் சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் தலைமையில் கராச்சி நகரில் 2-வது முறையாக 45-வது காங்கிரஸ் மகா சபை சிறப்புற நடைபெற்றுள்ளது. எனவே விரைவில் பாரத மாதாவின் விடுதலை கிட்டுமாறு இறைவன் திருவருள் பாலிப்பாராக. வந்தே மாதரம்.

---



பிரியப்படுகின்றனர். அதிர்ஷ்ட வசத்தால் நான் யுத்தத்தில் பலவித காயங்கள் பட்டுத் தேறினதின் காரணமாக என்னை ஒரு சம்பூரண மனிதனென்று சொல்ல முடியாது. ஆனாலும் நான் ஜுஜுட்சு—கதை சுழற்றுதல்—பாய்தல் முதலிய இதர பயிற்சிகளில் பழகி வருவதின் காரணமாக—என் தேக நிர்வாகம் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால் நான் எந்த விதமான பிரத்தியேக முறைகளையும் கையாடுவதில்லை.

சென்ற $3\frac{1}{2}$ வருடங்களாக எனக்கு இரா வேலையே இருந்து வந்திருக்கிறது. நான் எல்லாப் பருவ காலங்களிலும் வெளிப் புறங்களிலேயே இருந்து வந்திருக்கிறேன். ஆயினும் என் தேகப் பயிற்சி முறையும், பரிசுத்தமான காற்றும், என் தேக நிர்வாகத்திற்குச் சாலச் சிறந்த மருந்துகளாயின. ஒருவன் தன் தேகக் கட்டு நிமித்தமாகவும், தன் அங்கப் பலக் குறைவுகளைச் சீர்படுத்தவும், மிதமிஞ்சிய பளுவுகளைத் தூக்கவும், பலத்த கயிறுகளை இழுக்கவும், ஒழுங்கான அப்பியாச முறைகளை அநுஷ்டிக்க வேண்டியது அவசியமில்லை யென்று பொருள்பட நான் எதுவும் சொல்ல வரவில்லை. ஆயினும், ஒருவன் குத்துச் சண்டையில் தேர்ச்சி யடைய விரும்பினால் அவன் குத்துச் சண்டையிலே பழக வேண்டும். குஸ்திச் சண்டையில் அவனுக்குத் தேர்ச்சி வேண்டுமானால் அவன் குஸ்தி செய்தே பழக வேண்டும். அதோடு அந்தந்த வித்தைக்கு அவசியமா யிருக்கும் பிரத்தியேகத் தேக அமைப்புகளுக்கும், தசைகளுக்கும், உறுதி உண்டாகும் பொருட்டு வேறு விதமான உடற் பயிற்சிகளை உப பயிற்சியாகக் கொள்ளுதல் விசேடமானதாகும்.

நான் முதன் முதலில் தேகாப்பியாச முறையினை மேற்கொண்டேன். அப்போது 'ஜிம்னேஷியம்' பழகினேன். அதோடு வளையம், மரியல் கம்பு முதலிய ஆயுதப் பயிற்சிகளிலும் கவனம் செலுத்தினேன். பின்பு குஸ்தியும் குத்துச் சண்டையும் பழகி வந்தேன். 1903-ம் வருடத்தில் உலகம் புகழும் 'ஜுஜுட்சு' மல்லர் "யூக்கியோடானி" என்பாரையும் அப்போலோ, என்பாரையும் நான் நேரில் கண்டதின் பலனாக என் பல திறப்பட்ட அப்பியாசங்களோடு 'ஜுஜுட்சு' வித்தையையும் சேர்த்துக் கொண்டேன். அதோடு உதை பந்தும் கிரிக்கட்டும் சேர்த்துப் பயின்றேன். எனக்கு இப்போது வயது 44. என் உயரம் 5 அடி $7\frac{1}{2}$ அங்குலம். என் 'ஜுஜுட்சு' உடையில் என் நிறை 10-ஸ்டோன் ஆகும்.

நான் பிரான்ஸ் தேசத்தில் 1914-1919 வருடங்களில் இராணுவத்தில் சேர்ந்து யுத்த முகம் சென்றேன். அங்கு 14 குண்டுக் காயங்கள் பெற்றேன். என் சுவாசப் பைகளில் இப்போது கூட ஒரு துப்பாக்கி ரவை பதிந்து கிடக்கிறது. என் வலது கை இடது கையை விடச் சிறியது. அங்கு ஏற்பட்ட ஒரு பலத்த காயம் காரணமாக 4 மாதங்கள் மட்டும் அது இரத்த ஓட்டம் இழந்து இயக்க மற்று இருந்தது. என் இடது முழங் காலும் அதே காரணமாக அடிக்கடி அப்படியே பலமற்றுப் போனதுண்டு.

முன்பு இராணுவச் 'சர்க்கஸ்' காட்சிகளில் நான் என் 'சூசுட்சு' வித்தைச் சமர்த்தையும், கதை வாள் சுற்றும் போராட்டலையும், தந்திரமுள்ள சவாரி வேலைத் திறங்களையும், வேறுவித 'ஜிம்னாஸ்டிக்ஸ்' வித்தை நுட்பங்களையும் காட்டுவதுண்டு. நான் தென் ஆப்பிரிக்கா சென்றிருந்தேன். அங்கு ஒரு காட்சியில், நான் சிகப்பு இந்தியனைப் போல நடிக்கவேண்டி யிருந்தது. ஒரு குதிரையின்பேரில் ஏறிக் கொண்டு அதி வேகமாய் ஓடிச் சென்றுகொண் டிருக்கையில் சில மாடு மேய்ப்பவர்கள் என்னைச் சுடும் பாவனையில் என் குதிரையிலிருந்து அந்த வேகத்தில் திடீரென்று கீழே விழுவது வழக்கம். இதனை ஒரு நாளைக்கு 3 தடவை செய்துகாட்ட வேண்டியிருந்தது இப்படி 3 மாதங்கள் வரைக்கும் செய்து வந்தேன். ஆனால், அந்த வீழ்ச்சிகளில் எனக்கு எந்த விதமான காயமும் உராய்வும் ஏற்படவில்லை. இது என் 'சூசுட்சு' வித்தையில் நான் பழகின "காலி—வீழ்ச்சி"ப் பயிற்சியின் பலனாகும்.

யுத்த காலமுதல் ஆரோக்கிய நிலையங்களுக்கும், பலம் பெறும் பயிற்சிக் கூடங்களுக்கும் சென்று என் ஏராளமான வித்தை நுட்பங்களைக் காட்டி யிருக்கிறேன். தனித்த முறையிலும் மாணாக்கர்களுக்கு ஏராளமான பாடங்கள் கொடுத்திருக்கிறேன். முடிவாக நான் வற்புறுத்திச் சொல்வதென்னவென்றால், "ஒரு விஷயத்தில் ஒரு டன் ஏட்டுப் படிப்பு இருப்பதை விட, அதில் ஒரு அவுன்ஸ் நேரான அநுபவம் இருப்பது மேலானது" என்பதுதான். ஆகையால் நீங்கள் தேகாப்பியாசத்தில் இஷ்டப்படுவீர்கள். அப்படியானால் இன்றைக்கே அதனைச் செய்வீர்கள்.

---

# ஆசிரியர் குறிப்புகள்.

## அறிக்கை

சென்ற வருடம், நாம் சிறைக்குச் செல்லும் பொழுது கடைசியாக "பாரதி"யில் கிறிஸ்தவச் சகோதரர்களைப் பற்றி எழுதி விட்டுச் சென்றோம். மறுபடியும் இப்பொழுதுதான் குறிப்புகள் எழுத ஆரம்பிக்கிறோம், இதுமுதல் எமது ஜெயில் வாழ்வைப்பற்றி அடிக்கடி கட்டுரைகள் வந்துகொண் டிருக்கும். நாம் சிறை சென்றதால் "பாரதி"க்குப் பெருத்த நஷ்டம். நமது நண்பர்கள் இது விஷயத்தில் பிரத்தியேகக் கவனம் செலுத்தி அநேக சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும்படியாக அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். இம் மாதிரியான தேசீய மாதப் பத்திரிகைகளை அவஸியம் வளர்க்க வேண்டியது தமிழ் மக்களது முக்கிய கடமையாகும்.

## காங்கிரஸ்

கராச்சி நகரத்தில் சர்தார் படேல் அவர்களது தலைமையில் காங்கிரஸ் வெகு விமரிசையுடனும் குதூகலத்துடனும் பெரும் நம்பிக்கையுடனும் நடை பெற்றது. அவருடைய பிரசங்கம் சுருக்கமா யிருந்தது. அவர் வாக்கு வீரரல்ல; செய்கை வீரர் என்பது இந்திய மக்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். காங்கிரஸ் சரித்திரத்திலேயே இந்த ஆண்டின் பேச்சுக்களும் திட்டங்களும் நூதனமா யிருக்கின்றன. காங்கிரஸிலே இந்த வருடக் கூட்டம் ஒரு நூதன சகாப்தத்தை உண்டாக்கி யிருக்கிறது. அக்ராசனப் பிரசங்கத்தின் ஒவ்வொரு வாக்கியமும் உயிருள்ளதா யிருக்கின்றது. இந்த வருடக் காங்கிரஸ் பிரஜா உரிமைகளை நன்கு விளக்கி யிருக்கிறது.

காங்கிரஸ் ஒப்புக் கொள்ளும் எந்த சுயராஜ்யத் திட்டமும் கீழ்க் கண்டவைகளுக்கு உதவியா யிருக்க வேண்டும் அல்லது ஏற்படப் போகும் சுயராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் இருக்க வேண்டும் என்று காங்கிரஸ் தீர்மானம் செய்திருக்கிறது.

1. பிரஜைகளுக்கு அடியிற் கண்ட ஜீவாதாரமான உரிமைகள் இருக்க வேண்டும்:—

(a) சகவாஸ சுதந்திரம்.

(b) பேச்சு, பத்திரிகை சுதந்திரம்.

(c) மனச்சாக்ஷி சுதந்திரமும் பொது ஜன சமாதானத்திற்கும், சன்மார்க்க நெறிக்கும் விரோதமில்லாமல் அவரவர்களுடைய மதத்தையும் கொள்கைகளையும் பின்பற்ற உரிமை.

(d) வித்தை, பாஷை, மைனரிட்டி சமூகங்களுடைய லிபிகள் இவைகளுக்குப் பாதுகாப்பு.

(e) ஆண் பெண் என்ற வித்தியாசமில்லாமல் எல்லோருக்கும் சரி சமத்துவமான பாத்தியங்களும், உரிமைகளும்.

(f) மதம், வகுப்பு அல்லது ஜாதி காரணமாக கவர்ன்மெண்டு உத்தியோக விஷயத்திலோ, கௌரவ விஷயத்திலோ அல்லது தொழில் விஷயத்திலோ எவ்வித வித்தியாசமும் இருந்துவரக் கூடாது.

(g) பொதுக் கிணறுகள், பொது ரஸ்தாக்கள், பொது ஸ்தலங்கள் இவைகளுக்குப் போகவும், இவைகளை உபயோகித்துக் கொள்ளவும் எல்லோருக்கும் உரிமை.

(h) பின்னால் செய்யப்படக் கூடிய வழிகளுக் குட்பட்டு ஆயுதந் தாங்கி யிருக்க எல்லோருக்கும் உரிமை.

(i) சட்ட சம்பந்தமாக வல்லாது ஒருவருடைய சுதந்திரத்தையும் பறிமுதல் செய்யக் கூடாது; அல்லது ஒருவருடைய வீட்டிற்குள் பிரவேசிக்கவோ அல்லது பறிமுதல் செய்யவோ கூடாது.

2. மத விஷயங்களில் கவர்ன்மெண்டார் நடு நிலைமை வகித்திருக்க வேண்டும்.

3. வயது வந்தவர்களுக் கெல்லாம் ஓட்டுரிமை.

4. இலவச ஆரம்பக் கல்வி.

5. தொழிலாளர்களுக்கு காலக்ஷேபத்திற்குக் கட்டக் கூடிய சம்பளம்; ஒரு வரையறைக்குட்பட்ட வேலைக் காலம்; சௌகரியமான வேலை நிலைமை; விருத்தாப்பியம், வியாதிக் காலம் இவற்றிற்குப் பாதுகாப்பு.

6. தொழிலாளர் அடிமைத்தனத்தி லிருந்து நிவர்த்திக்கப்பட வேண்டும்.

7. ஸ்திரீ தொழிலாளிகளுக்குப் பாதுகாப்பு; முக்கியமான பிரஸவ காலத்தில் போதிய ரஜா விஷயமான ஏற்பாடுகள்.

8. பள்ளிக்கூடத்திற்குப் போகும் சிறு வயதுக் குழந்தைகளைத் தொழிற் சாலைகளில் வேலைக் கமர்த்திக் கொள்ளாமல் தடுத்தல்.



9. தங்களுடைய உரிமைகளைப் பார்த்துக் கொள்ளுவதற்குச் ங்கங்களை அமைத்துக் கொள்ளத் தொழிலாளருக்குப் பாத்தியம்; கராறுகளை மத்தியஸ்தர் மூலமாகத் தீர்த்து வைப்பதற்கு ஏற்பாடு.

10. நில வரியையும் குத்தகையையும் குறைத்தல்; லாபகரமாக ல்லாத நிலங்கள் சம்பந்தமாக விவசாயிகளிடம் குத்தகை வரி வாங் ாம லிருத்தல்; இவ்விதம் செய்வதால் சிறிய ஜமீன்தார்களுக்கு நஷ்டமற்படுகையில் அதற்குப் பரிகாரம் செய்து கொடுத்தல்.

11. குறிப்பிட்ட ஒரு தொகைக்கு அதிகமாக நிலத்தி லிருந்து டைக்கும் வருமானத்திற்குப் படிப்படியாக உயர்ந்த விகித வருமான ரி.

12. வார்சு பாத்திய சொத்துக்களின் பேரில் படிப்படியாக வரி.

13. ராணுவச் செலவில் ஒரு பாதியையேனும் குறைத்தல்.

14. ஸிவில் இலாக்காக்களில் செலவையும், சம்பளங்களையும் குறைத்தல்.

நிபுணரல்லாத எந்த கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தருக்கும் ஒரு குறிப்பிட்ட தொகைக்கதிகமாகச் சம்பளம் கொடுக்கக் கூடாது. அந்தத் தொகை 500 ரூபாய்க்கு அதிகப்படக் கூடாது.

15. அந்நிய நாட்டுத் துணிகளையும், நூலையும் விலக்குவதன் மூலமாக உள் நாட்டுத் துணிகளுக்கு ஆதரவளித்தல்.

16. போதையைத் தரக்கூடிய பானங்களையும், வஸ்துக்களையும் விலக்கு செய்தல்.

17. இந்திய உப்புக்கு வரி விலக்கல்.

18. இந்தியத் தொழில்களுக்கு உதவக்கூடிய வழியிலும் சாமான்ய ஜனங்களுக்குப் பரிகாரமாக இருக்கக்கூடிய வழியிலும் பரிவர்த்தனை, நாணயச் செலாவணி விஷயத்தில் ஆதிக்கம்.

19. முக்கிய தொழில்கள், சுரங்கங்கள் இவைகளில் கவர்ன்மெண்டின் ஆதிக்கம்.

20. அதிக வட்டிக்குக் கடன் கொடுக்காமல் செய்தல்.

இதில் கண்ட கோரிக்கைகளுக்கு விரோதமின்றி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் இவைகளைக் கூட்டவோ, குறைக்கவோ அல்லது மாற்றவோ செய்யலாம்.

## சிறையில் வாடும் தேச பக்தர்கள்

காந்தி—இர்வின் ஒப்பந்தத்தால் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு சிறை சென்ற பக்தர்களெல்லாம் வெளியிலே வந்துவிட, சிலர் மட்டும் ஜெயிலில் அடைபட்டுக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் சத்தியாக்கிரக நெறியைப் பின்பற்றிச் சிறைச்சாலை சென்றிருக்க, அவர்கள் ஹிம்ஸை வழியில் பிரவேசித்தவர்களென்று தவறாக எண்ணிக் கொண்டு, சர்க்கார் அவர்களை இன்னும் ஜெயிலில் வாட்டுவது நியாயமன்று. தேசமே எழுந்து நின்று கிளர்ச்சி செய்தால் அவர்களும் விடுதலை பெறுவார்கள். ஹிம்ஸை நெறியில் சென்றவர்களென்று சிலரைச் சர்க்கார் குற்றம் சாட்டி அடைத்து வைத்திருப்பதில் அருத்தமில்லை. சர்க்கார் அவர்களையும், ஒப்பந்தத்தின்படி மரியாதையுடன் விடுதலை செய்ய வேண்டும்.

## மாணவர்களும் கதரும்

கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்கள் தேச நிலையை அறிந்து அனைவரும் கதர் தறிக்க வேண்டுகிறோம். சிலர் கதர் உடுத்த முன் வந்தாலும் அநேக ஆசிரியர்களும் தலைமை ஆசிரியர்களும் இதைத் தடுப்பதாக அறிகிறோம். இந்த ஆசிரியர்கள் இந்த தேசத்தில் பிறந்த இந்தியர்களாயிருந்தும் கல்வி, தேசாபிமானம், கைத்தொழில் முதலியவைகளைப் பற்றிப் போதிக்க வேண்டியது தங்கள் கடமையாயிருந்தும், கதர்த் துணி உண்டாக்குவதும் உடுப்பதும் தேசீயச் சின்னமாயிருந்தும், கதர் உற்பத்தியால் எத்தனையோ ஏழை மக்களுக்கு உணவு கொடுக்கக்கூடிய சுதேசித் தொழிலாயிருந்தும், கதர் தறிக்கும் விஷயத்தில் ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சுதந்திரம் கொடுக்காமலிருப்பது சரியன்று. பல விடங்களில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கதர் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஸர். பி. ஸி. ராயைக் கவனிக்க வேண்டும். ஆசிரியர்களின் மனோ நிலைமையும் மாற வேண்டும்; சர்க்காரின் போக்கும் மாற வேண்டும்.

## நாட்டின் விழிப்பு

உப்பு வரிப் போராட்டத்திற்குக் காந்தி யடிகளால் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகத்தால், சுமார் முக்கால் இலட்சம் தேச பக்தர்கள் சிறை சென்றார்கள். இதன் பயனாகச் சர்க்காரே ஸ்தம்பித்து நின்றது; காந்தி—இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. ஏகாதிபத்திய இறுமாப்புக் கொண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் மகாத்மா முன் குனிந்தது. இது இந்தியர்களுக்கு ஒரு பெரும் வெற்றி. இந்தியப் பொது மக்களுக்குத் தேசத்தைப் பற்றி நினைவு உண்டாகி யிருக்கிறது. அரசியல் கைதிகளை அரசாங்கத்தார் ஏன் விட்டுவிட்டார்கள் என்று ஜனங்கள் நினைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். சர்க்காரின் தவறுகள், இந்தியாவின் அடிமைத்தனம், இந்தியாவின் இழந்த தனம் முதலியவைகளைப் பற்றி, அவர்களின் சிந்தை வேலை செய்துகொண்டிருக்கிறது. சுருங்கச் சொன்னால் இத் தேசம் பெரிதும் தேசீயத்தில் விழித்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லலாம்.



## கிராமப் பிரச்சாரம்

கிராமங்களால் இந்தியா ஆக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களே இந்தியாவின் உயிர். தலைவர்கள் கிராமங்களுக்குச் சென்று நன்கு பிரச்சாரம் செய்ய வேண்டும். தொண்டர்கள் கிராமங்களில் தங்கி அதிகமான தொண்டு செய்தல் வேண்டும். நமது கிராம ஜனங்கள் அறியாமையில் ஆழ்ந்து கிடக்கும் பரியந்தம் இந்தியாவுக்கு விமோசனமில்லை. உயர்தரக் கல்விச் சாலைகளில் பயிலும் மாணவர்களும் கிராம வேலை செய்ய வேண்டியது அவஸியம். தொண்டர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் சில மாதங்கள் தங்கி வேலை செய்தால்தான் கிராம விருத்தியை எதிர் பார்க்கலாம்.

## போகும் வரும் வைஸ்ராய்கள்

இர்வின் பிரபு இந்தியாவின் சோதனையான காலத்தில் தனது ஆட்சியை முடித்து விட்டு மகாத்மா காந்தியுடன் ஒப்பந்தம் செய்து மிகுந்த நற் பெயரை அடைந்து தனது சுய தேசம் செல்கிறார். பகவத் சிங் முதலியவர்களைத் தூக்கிலிட்டது இவரது பெரிய மறக்க முடியாத குற்றமாகும். வெல்லிங்டன் பிரபு இந்தியாவை நன்கறிந்தவர். இவர் இப்பொழுது வருகிறார். இவர் இந்தியாவுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்யலாம். இவருடைய ஆட்சியின் காலத்தில் இந்தியா எவ்வளவோ மாறுபடப் போகிறது. காலதேச வர்த்தமானத்தை உணர்ந்து இவர் ஏற்ற வழியில் செல்வாராக. இன்றேல் இவரைக் கவனிக்காது, இந்தியா தனது உரிமைகளை நிலை நாட்டும்.

## தாலுகா போர்டுகள்

சில தாலுகா போர்டுகள் நமது ஜில்லாக்களில் நன்கு வேலை செய்யாமலிருக்கின்றன. இரண்டு தாலுகாக்களுக்கு ஒரு போர்டு ஏற்படுத்தி வேலை செய்கிறார்கள். ஒவ்வொரு தாலுகாவுக்கும் தனித் தாலுகா போர்டு தேவையாயிருக்க, இரண்டு பெரிய தாலுகாவைச் சேர்த்து வைத்திருப்பதின் அருத்தமென்ன? ஒவ்வொரு தாலுகாவிற்கும் தனி போர்டு ஏற்பாடு செய்து, வேலை செய்தால் நல்லது. இரண்டு தாலுகாக்களை ஒரு தாலுகா போர்டாக அமைத்திருப்பதை உடனே பிரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஸ்தல ஸ்தாபனங்களை நல்ல வழிகளில் உபயோகப் படுத்துவதற்கு நாம் ஊக்கமுள்ள, உழைக்

கும் மனிதர்களை அங்கத்தினராகத் தெரிந் தெடுத்து அனுப்ப வேண்டியது நமது கடமையாகும்.

## மகாத்மா காந்தி அடிகளும் வட்ட மேஜை மகாநாடும்

லண்டனில் நடக்கப் போகும் வட்ட மேஜை மகா நாட்டிற்கு மகாத்மா காந்தி அவர்களைப் பிரதிநிதியாக இந்திய காங்கிரஸ் தெரிந் தெடுத்திருக்கிறது. மகாத்மாவின் கருத்தே இந்தியாவின் கருத்தாகவும், மகாத்மாவின் வாக்கே இந்தியாவின் வாக்காகவு மிருக்கின்றது. காந்தி மகானுடைய சத்தியாக்கிரகத்தின் வெற்றியை உலகமே விழிப்புடன் கவனித்துக்கொண் டிருக்கிறது.

## ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை

தேசமே முற்றிலும் மாறுதல் அடைந்து விடுதலை பெற வேண்டிய இக் காலத்தில், இந்தியாவில் வேற்றுமை வேரூன்ற இடம் கொடுப்பது சரியன்று. கான்பூர் முதலிய விடங்களில் ஹிந்து முஸ்லீம் போராட்டம் நிகழ்ந்து கொலை, கொள்ளை முதலியவைகளுக் கிடங் கொடுத்தது இந்தியாவிற்கே பெருத்த அவமானமும், நஷ்டமுமாகும். இதைக் கண்டு அயல் நாட்டார்கள் நகைக்கிறார்கள். எம் மதத்தைச் சேர்ந்தவரா யிருப்பினும் எச் சாதியைச் சேர்ந்தவரா யிருப்பினும் நாம் இந்தியர் என்பதை முதலாவது கவனித்து தேச ஒற்றுமையைப் பலப்படுத்தி தேசாபி விருத்தி செய்ய வேண்டும். இந்தியாவி லிருக்கிற எல்லா சமூகங்களும் தேசீய ஒற்றுமைக்காக எல்லா வழிகளிலும் உழைத்தாலன்றி, நம் தேசம் விடுதலை அடையாது என்பதை இந்தியர் அனைவரும் எண்ணல் வேண்டும்.

## மைசூர் கவர்ன்மெண்டு சோப் தொழிற் சாலை

1917-ம் வருஷத்தில் மைசூர் கவர்ன்மெண்டு அநேக பரீட்சைகளைப் பார்த்த பிறகு, பெங்களூரில் ஒரு சோப் தொழிற் சாலை ஸ்தாபிக்கத் தீர்மானித்து, 1918-ம் வருஷத்தில் இங்கிலாந்திலிருந்து புதிய இயந்திரங்களை வரவழைத்து வேலை செய்தார்கள். இத் தொழில் அங்கு ஆண்டுதோறும் விருத்தியாகிக் கொண்டு வருகிறது. இதுவரைக்கும் இதற்குச் சர்க்கார் முதல் போட்டது ரூ 1,05,821. 1930-ம் வருஷ டிசம்பர்மீ முடிய இலாபம் ரூ. 5,26,992. செலவு நீக்கி இலாபம் ரூ 2,12,633. இங்கு உயர்தரமான சோப் தினுசுகள் செய்யப்படுகின்றன. சுமார் 10 பிரிட்டிஷ் கம்பெனிகளும் சில இந்தியக் கம்பெனிகளும் இதே மாதிரியாகச் சோப் செய்வதில் இதனுடன் போட்டி போட்டு வேலை செய்கின்றன. இந்த மைசூர் சோப் தொழிற் சாலை, இத் தொழிலின் வளர்ச்சிக்கு மிகவும் உதவி செய்து கொண் டிருக்கிறது.

# ஆராய்ச்சி மேடை.

## இங்கிலீஷ்—தமிழ் ஆபீஸ் காலண்டர்

ஆங்கிலத் தேதியும் தமிழ் தேதியும் ஒரே தாளில் பெரிய எழுத்தில் அச்சிட்டு, தினசரி கிழிக்கப்பெறும் இக் காலெண்டரைப் பற்றிச் சேர்ந்தாப்போல் சில. வருடங்கள் நன்கு அறியும் சர்தார்ப் பங் கிடைத்தது பற்றி மிகவும் மகிழ்வுடன் அறிவிக்க வேண்டியிருக்கின்றது.

இக் காலெண்டர் மற்ற காலெண்டர்களி லுள்ளதைப் போல் ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்களின் விசேஷ பண்டிகைகளையும் திதி, நக்ஷத்திரம், ராகு முதலிய காலங்களையும், கௌரி பஞ்சாங்கத்தையும் பெற்றிருக்கிறதுடன் திட்டமாக மழை பெய்யும்

---

## பத்திரிகை வாசித்தல்

தேசத்தில் தேசீயத்தை வளர்ப்பதற்குப் பத்திரிகைகள் அதிகமாக உழைக்கின்றன. பாஷாபி விருத்திக்காகவும் தேசாபி விருத்திக்காகவும் பொது அறிவு அபி விருத்திக்காகவும் சர்வ தேச விஷயங்களை அறிவதற்காகவும் ஒவ்வொருவரும் அவஸியம் பத்திரிகைகளைப் படிக்க வேண்டும். நாட்டிற்கு நலஞ் செய்யும் பத்திரிகைகளை நாட்டு மக்கள் நன்கு ஆதரித்து அபிவிருத்தி செய்ய வேண்டும்.

## பினாங்கு இந்து தேகாப்யாச சங்கம்

சென்ற 1928-ம் வருஷ ஆகஸ்டுமீ ஏற்பட்ட இச் சங்கம் மூன்றாண்டுகள் பூர்த்தியடையும் பருவத்தைச் சமீபித்துக் கொண்டிருக்கின்றது. சங்கம் கண்ட ஆரம்ப காலத்தில் உற்சாகமாயும் அதி தீவிரமாயும் உழைத்த இவர்கள் இடையில் சிறிது தளர்வுற் றிருந்தார்களெனினும், இதுபோது முன் போலவே ஒற்றுமையும் உற்சாகமும் கொண்டு தங்கள் ஸ்தாபனத்தின் கௌரவத்தை நிலை நாட்ட முன் வந்திருப்பதானது மகிழ்ச்சிக் குறியதாகும்.

இவர்களது ஒற்றுமை என்றும் நிலவவும், இடையூறுகள் விலகவும், கொண்ட கொள்கையில் ஜெயம் பெறவும் வேண்டி முன்னினும் திடங்கொண்டு நடக்குமாறு வேண்டுகின்றோம். தேவி இவர்களுக்குத் துணை நிற்க.

காலத்தையும் கணிக்கப் பெற்றிருப்பதே அதி ஆச்சரியமாகும். காலெண்டரில் குறிப்பிட்டுள்ள மழை பெய்யும் காலத்தை அவ்வப்போது கவனத்துடன் நோக்கி வந்த, நாம் மிகவும் திருப்தியடையவே நேர்ந்த தென்பதை அறிவிக்காதிருக்க முடியாது. மேலும், இக் காலெண்டரில் குறிப்பிட்டுள்ள மழைத் தினத்தைத் தெரிந்து சென்ற அனேக கனவான்கள், கணிதத்தின் மேன்மையையும் பிசகின்மையையும் நம் ஆபீசில் வந்து தெரிவித்துச் சென்றுள்ளார்கள். ஆகையினால் இக் காலெண்டர் விவசாயிகள் முதல் யாவருக்கும் மிகவும் பிரயோஜனமா யிருக்கு மென்பதை அனுபவ வாயிலாகக்கூறத் துணிகின்றோம்.

இதன் விலை ரூ 1—0—0

பிரசுரிப்பவர்கள்:—

மெஸ்ஸர்ஸ் T. A. M. பாலசுந்தரஞ் செட்டியார் & சன்ஸ்.

கடலங்குடித் தெரு, கும்பகோணம்.

---

## 13-ம் ஆண்டு பூர்த்தி விழா அறிக்கை

---

'அபிராமம், யுனைடெட்முஸ்லிம் அஸோஸியேஷன்' 13-ம் ஆண்டு பூர்த்தி விழா அறிக்கை யொன்று வரப் பெற்றோம். பற்பல இடையூறுகளுக்கும் விலகி—தப்பி, இச் சங்கமானது தமிழ் நாட்டு முஸ்லிம் கனவான்களின் கருணைக் கிலக்காகியது போலவே பிற நாட்டில் வதியும் தமிழ் முஸ்லிம் கனவான்களின் ஆதரவுக்கும் பாத்திரமாகி வளர்ந்து வருவதறிய மிகவும் மகிழ்ச்சி யடைகின்றோம்.

1917-ம் ஆண்டு ஸ்தாபித்து 13-ம் ஆண்டு பூர்த்தி யடைவதற்கு முன் 10,000 ரூ பெறுமான அழகிய—அவஸ்யமான பொது கட்டிடத்தை யாவரும் விரும்பும் வண்ணம் கட்டி முடித்து, அதில் பொது வாசகசாலை ஏற்படுத்தி தமிழ், அரபு, ஆங்கிலப் புத்தகங்களையும் பிரபல தினசரி, வார, மாதப் பத்திரிகைகளையும் தருவித்து, வளங்கி மக்களின் விருத்திக்கு உழைத்துவரும் இச் சங்கத்தாருக்கு, சங்கம் மென்மேலும் விருத்தி யடைந்து வளர்ந்தோங்கவும், இந்து—முஸ்லிம்கள் ஒற்றுமைக்குப் பாடுபடவும் தீர்க்காயுளைக் கொடுத்தருளுமாறு இறைவனை இறைஞ்சுகின்றோம்.

---

198536

# என்

## "பாரதி"யில்

## விளம்பரஞ் செய்ய வேண்டும்?

தமிழ் நாட்டில் எல்லாக் கக்ஷியினராலும் ஒப்புக்
கொண்டு ஆதரிக்கப்பெற்று வருவதினால்

* * *

தமிழ் நாட்டிலன்றி வெளி நாட்டிலும்
தமிழர்களால் விசேஷமாக மதிக்கப்பெற்று
ஆதரிக்கப்பெற்று வருவதினால்

* * *

நாட்டுக்கு வேண்டும் நலமிக்க தொண்டு
நாட்டமுடன் செய்யும் நன் முயற்சியினால்

* * *

பனிரெண்டு மாதங்களிலும் பல்லோராலும் தருவித்து
ஆரம்ப மணியிலிருந்து வாசிக்கப்பெறுவதினால்

* * *

**விளம்பரஞ் செய்யின்**

என்றும்

## இலாபமுண்டு; க்ஷேமமுண்டு.

**உடனே விளம்பரஞ் செய்யுங்கள்.**

# புதிய சந்தா நேயர்கட்கோர் நல் விருந்து

சென்ற 1930-ம் வருஷத்தின் "பாரதி" & "நவீன பாரதி" யாகிய இரு பத்திரிகைகளும் சேர்ந்த பைண்ட் வால்யம் தயாராக விருக்கிறது.

இதில் இந்திய தேசாபிமானிகளின் படங்களுடன் பெரியாரின் படங்களும் அவர்தம் விரிவான சரிதைகளும் அடங்கி யுள்ளது.

இதுவுமன்றி, பத்திராசிரியர்களால் வரையப்பெற்ற அவஸ்யமானதும் காலத்திற்கு வேண்டப் படுவதுமாகிய கட்டுரைகளுடன் அறிஞர்களாலும், சிறந்த ஆசிரியர்களாலும், பிரபல நியாயவாதிகளாலும் அறிவு தருவதாய், ஆனந்தம் நல்குவதாய், செல்வம் ஈவதாய் நவம் நவமாக எழுதப்பெற்ற அற்புதமான வியாசங்களைப் பெற்று 800 பக்கம் கொண்டதா யிருக்கின்றது. பத்திரிகையின் விஷயப் போக்குக்கும் அச்சுக்கும் ஏற்ற விதமாக உறுதியாக பைண்ட் செய்து, நேர்த்தியான காலிகோவினுல் அழகு செய்விக்கப்பெற்று, தங்க மசியில் காலிகோவின் மேலும் அச்சிடப்பட் டிருக்கிறது.

இவ் வால்யம் தமிழாவோர் ஒவ்வொருவரிடமும் அவஸ்யம் இருக்க வேண்டிய இலக்கியப் பொக்கிஷங்களுள் முதன்மையானதாகும்.

**பிரதி 1-க்கு விலை ரூ. 2—8—0.**

தபாற் செலவு பிரத்தியேகம்.

வெளி நாட்டிலுள்ளோர் தபாற் செலவு அணு 8 சேர்த்து ரூ. 3. அல்லது 5 ஷில்லிங் போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டும்.

மானேஜர், "பாரதி."



# 'Bharati' Directory—'பாரதி'ப் பேரேடு.

## வியாபாரிகளே!

உங்கள்
விலாசங்களை உலகத்திற்குத்
தெரியப்படுத்துங்கள்.
உலகத்தார் உங்களை யார் என்று,
என்ன வியாபாரிகளென்று,
எதை விற்கிறவர்கள்-
எதை வாங்குகிறவர்களென்று
முதலில் அறியட்டும்.

**இதோ —☛**

**வலதுபுறம் பாருங்கள்;**
ஆறு கட்டங்களிருக்கின்றன.
**கட்டம் ஒன்றுக்கு**
விளம்பர விகிதம்
**ஒரே ரூபாய்**

ஆயிரக் கணக்கான
பிரதிகள் அச்சிடப்பட்டு
லக்ஷக் கணக்கான மக்க
ளால் வாசிக்கப்பட்டு
கோடிக் கணக்கான
மக்களால் பார்வை
செய்யப்படும்.
**உடனே எழுதுங்கள்.**

**1000** பக்கங்கள் கொண்ட
**"பாரதி"**
ஒரு நூறு ஆசிரியர்களால்
எழுதப்படுவது

தமிழராகப் பிறந்தோர் தம்
மனத்தைக் கொள்ளைகொண்டு
அவர் தம் பூரண ஆதரவு பெற்று
வளர்ந்து வருவது

ராஜாக்களையும், மந்திரிகளையும்,
பெரும் பெரும் தனவந்தர்களையும்
சந்தாதாரராக வுடையது

உள் நாட்டிலும் வெளிநாட்டிலும்
தமிழரிடையிற் பரவி அவர்தமக்கு
ஆனந்தம் நல்குவதா யிருப்பது

விவசாயிகளும் வியாபாரிகளும்
விரும்பி யேற்று அவர்தம் உயர்
வில் கருத்தைச் செலுத்தப்
பாக்கியம் பெற்றதா யிருப்பது

தேசியச் செல்வத்தை
வளர்த்து-காத்து,
யாவரையும்
சரிநிகர் சமானமாகக் கொணர
முயன்றுகொண் டிருப்பது

உத்தமபாளையம்

## ஆனந்தா பிரஸில்

செய்யப்பெறும் வேலைகளெல்லாம் நேர்த்தியாகவும் உயர்தரமாகவும் இருக்கின்றன வென்பதை அறியவேண்டுகிறோம்.

அறியாதிருப்பின் பரீக்ஷைக் கேனும் பாருங்கள்.

---

தேவை.

பைண்டிங் சம்பந்தமான வேலைகளில் திறமை வாய்ந்த

பைண்டர்கள் தேவை.

மற்ற விபரத்திற்கு எழுதவும்.

---

<u>இரண்டே ரூபாய்</u>

ஒரு 100 விசிட்டிங் கார்டுகள்

உயர்ந்த ஐவரி கார்டில் நேர்த்தியான எழுத்துக்களால் அச்சிட்டுத் தபால் செலவின்றி அனுப்பப்படுகிறது.

---

நூறு லெட்டர் பேப்பர் கொண்ட

பேட் 1-க்கு ரூ $1\frac{1}{2}$ தான்

விரும்பிய விதமாக விலாசத்தை அச்சிட்டு அனுப்பப்படுகிறது.

தபாற் செலவு இனாம்.

---

இங்கு

நாவல்களோ, பிற உயர்ந்த புத்தகங்களோ, பத்திரிகைகளோ, எதுவானாலும் சரியே; பிழையின்றியும் கண்ணைக் கவரும் விதத்திலும் அச்சிட்டுத் தரப்படுகிறது.

---

கஷ்ட நஷ்டமேன்!

ஒற்றுமை யுற்றிடில்

ஒழியாதிருக்குமோ?

சேருங்கள்! ஒன்று கூடுங்கள்!!

திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கத்தை உயிர்ப்பிக்க முயலுங்கள்.

---

1929-ம் வருட

## 'பாரதி'

வால்யம் கிடைக்கப் பெறுது.

மானேஜர், "பாரதி."

---

க்ஷேமமும் இலாபமும் ஒருங்கே பெறலாம்.

T. C. P. A. ஏலச் சாக்கு விற்பனைக் கம்பெனியில் பங்காளிகளா?

அன்றேல் இன்றே சேருங்கள்.

---

தேவை.

நகரங்கள் தோறும் பத்திரிகையை விற்பனை செய்ய

ஏஜெண்டுகள் தேவை.

நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர், "பாரதி."

---

கல்கத்தாவிலும் பம்பாயிலும்

"பாரதி"க்கு

விளம்பரம் சேகரிக்க

ஏஜண்டுகள் தேவை.

தமிழராகவே இருக்கவேண்டும்.

தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

---

<u>ஆனந்தமடையலாம்</u>

2-ம் ஆண்டு பைண்டு வால்யம்

ஒன்றை வாங்கினால் உங்கள் விருப்பம் நிறைவேறும்.

மானேஜர், "பாரதி."



கிரேட் ஈஸ்டர்ன் ஆப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டில் பதிவு செய்துகொள்ளுங்கள்.

(ஸ்டிரெயிட் செட்டில்மெண்டில் இணைக்கப்பட்டது.)

(இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்டது.)

உயர்ந்த தன்மை வாய்ந்த பாலிசிகளையுடையது. பாலிசி பணம் கட்டாததற்காக, பாலிசி பறிமுதல் செய்ய முடியாததற்கான விதிகளும், சாசுவதமாகவே பணம் கட்ட இயலாமல் நோயுற்று விட்டாலும் சரி அல்லது அபாயம் நேர்ந்துவிட்டாலும் சரி அவற்றிற்கும் சௌகர்யமான விதிகளுடனும் கூடியது.

மூன்று வருஷங்களுக்கொரு முறை போனஸ்!

உத்திரவாதமுள்ள போனஸ் திட்டங்கள்!!

இந்தியாவிலே பணம் முதலீடு செய்யப்பட்டது. லாபகரமான நிபந்தனைகளின் கீழ் வேலை செய்ய ஏஜெண்டுகள் தேவை.

மற்ற விபரங்களுக்கு எழுதவும்:—

1. எம். வி. மர்ச்சண்ட், பிராஞ்சு மானேஜர்,
50–52 சர்ச் கேட்டு தெரு, பம்பாய்.

2. சி. பி. கிருஷ்ண ராவ், சீப் ஏஜெண்டு,
(மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களுக்கு)
30, வடக்குமாசி வீதி, மதுரை.

---

## "லோகோபகாரி"

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினால் லோகோபகாரிக்குச் சந்தாதாரராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளி வருகிறது. முப்பத்தேழாவது ஆண்டு நடக்கிறது

பத்திராதிபர்: பரலி— சு. நெல்லையப்ப பிள்ளை,

லோகோபகாரி பத்திரிகாலயம்,

சிந்தாத்ரிப்பேட்டை, சென்னை.

வருஷ சந்தா ரூபாய் நான்கு.

# தேவை

## நகரங்கள் தோறும் விளம்பர ஏஜண்டு தேவை.

நல்ல சம்பளம் கொடுக்கப்படும்

கமிஷன் முறையும் உண்டு

மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர், "பாரதி"

## விளம்பர விகிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாரதி பேரேடில் கட்டம் 1-க்கு | | | | ரூ. | 1—0—0 |
| சாதாரண பக்கம் | | 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, | ,, | ½-க்கு | ,, | ,, | 5—8—0 |
| ,, | ,, | ¼-க்கு | ,, | ,, | 3—0—0 |
| கவர் | ,, | 3 ல் | ,, | ,, | 15—0—0 |
| ,, | ,, | 4 ல் | ,, | ,, | 20—[illegible] |

[illegible]ளம்பரத்திற்கு எப்பொழுதும் முன் பணம் அனுப்ப [illegible]வண்டும். நீண்ட காலம் விளம்பரஞ் [illegible] [illegible]க்கு எழுதித் தெரிந்து கொள்[illegible]



## நெடு நாள் எண்ணம்!

## இன்றே சாத்தியமானது!!

## இனம்! இனம்!! இனம்!!!

# 1930-ம் வருட "பாரதி" வால்யம் இனம்.

நல்ல சந்தர்ப்பம் சில பிரதிகளே கைவசமுள்ளது

முந்துங்கள்.

கஷ்டமின்றி சிரமமின்றி உங்களுக்குக் கிடைக்கும் இந்த இலாபத்தை இழக்க விரும்ப மாட்டீர்களென்பதே எமது எண்ணம்.

## *1931*-ம் வருட "பாரதி"க்குப்

புதிய சந்தாதாரராக 25 நண்பர்களைச் சேர்த்துதவினால், இந்த உயர்ந்த பரிசு உங்களைத் தேடிவரும்.

விரும்புவோர், தெளிவான விலாசம் தெரிவிக்கவும். துண்டுப் பிரசுரங்களும் ரசீதுப் புஸ்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

மானேஜர், "பாரதி"

விளம்பரங்கள்

# "கலா நிலயம்"

## இது ஓர் இலக்கிய வாரப் பத்திரிகை.

---

கலைபுணர்வும், கலா ஞானமும் பெறுவதற்கு இது ஒரு நல்ல கருவி யென்றால் மிகையாகாது. இதில் இலக்கிய வளர்ச்சிக்குரிய கட்டுரைகளே மலிந்து வருகின்றன. கம்ப ராமாயணம், தமிழ்ப் பாடம், அகப்பொருள் வரலாறு, செந்தமிழ் நாவல், ஆங்கிலப் புலவர்களாகிய கார்லைல், ரஸ்கின், எமர்ஸன் முதலியோரின் கட்டுரை மொழி பெயர்ப்புகள், மற்றும் பல விஷயங்கள் அவ்வப்போது வெளிவரும்

**சந்தா விபரம்.**

சந்தா உள்நாட்டிற்கு ரூ 7—8—0 வெளிநாட்டிற்கு ரூ 9—0—0 தனிப்பிரதி அணா 3 ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—மானேஜர்,
11, வெள்ளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை.

# இனிக் கஷ்டமில்லை!

வியாபாரிகளுக்குப் புதிய சகாயம்

'பாரத்'ப் பேரேடு என்ற விளம்பரப் பக்கங்கள்

வியாபாரிகளின் சௌகரியத்தை யுத்தேசித்தே

பிரசுரித்து வருகின்றோம்.

ஓர் கலத்திற்கு விளம்பர விகிதம் ஓர் முறைக்கு ரூ. 1.

நேரமும் இடமும் பொருந்தி யிருக்கிறபோது சிறிது பணம் செலவிட்டு ஏன் இலாப மடையக்கூடாது?